திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

669

4 OCT 1962
MADRAS

கலைமகள்

மாலை 5] சுபகிருது - புரட்டாசி
அக்டோபர் 1962 மணி 1]

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு.



திருமழிசை ஒத்தாண்டீசுவரர் திருக்கோயிலில் 6—9—62 அன்று நிகழ்ந்த பன்னிரு திருமுறைப் பெருவிழாவில், திரு. எம். ஆறுமுக முதலியார் அவர்கள் அளித்த விமானத்தில், அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்கள் திருமுறைகளை எழுந்தருளச் செய்தல்

127102

பொருளடக்கம்

1. அப்பரும் காந்தியடிகளும்
2. வைஷ்ணவன் யாவன்
3. திருநாவுக்கரசுநாயனர்
4. சிவஞானபோதம்
5. தஞ்சாவூர் இராசராசேச்சரக் கல்வெட்டு வரலாறு
6. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
7. திருவேட்களம்
8. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
9. உண்மைவிளக்கம்

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 5] சுபகிருது புரட்டாசி-அக்டோபர் 1962 [மணி 1

அப்பரும் காந்தியடிகளும்

✦✦✦(✲)✦✦✦

அனுச யப்பட்டு அதுஇது என்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னாரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யாய மனிதரே.

முன்னுரை

காந்தி ஜயந்தி நாளில், அண்ணல் காந்தியடிகளின் அரும்பெரும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை நினைவு கூருங்கால், மேற் குறித்துள்ள அப்பர் பெருமானின் அருமைத் திருப்பாடல் நம்மனோர் நினைவிற் போந்து இன்புறுத்துகின்றது. "**மனிதரில் தலையாய மனிதர்**" காந்தியடிகள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, செய்தற்கரிய செயல்கள் பல செய்து, பெருநிலை பெற்றவராகக் காந்தியடிகள் இஞ்ஞான்று உலக மக்கள் அனைவராலும் ஒருங்கே உவந்தினிது போற்றப்படுகின்றார். அடிகளின் அருமை பெருமைகளை ஆராய்ந்து உணருந்தொறும் உணருந்தொறும், அவர்க்கும் நம் அப்பர்பெருமானுக்கும் இடையே பலதிறப் பண்பொப்புமைகளைக் காண்கின்றோம். அவற்றை ஆராய்ந்து அறிந்து சிந்திப்பது, நாம் இவ்விரு பெருஞ் சான்றோர்களுக்கும் செய்யும் சிறந்த அஞ்சலி யாகும்.

தேசம் உய்ய வந்தவர்

காந்தியடிகள் நமது தேசம் உய்ய வந்தவர். திருநாவுக்கரசரும் நம் "**தேசம் உய்ய வந்தவர்**" என்றே சேக்கிழார் பெருமானால் பாராட்டப் பெறுகின்றார்.

"ஆசனத்திற் பூசனைகள் அமர்வித்து
விருப்பினுடன்
வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி
மனந்தழைப்பத்
தேசம்உய்ய வந்தவரைத் திருவமுது
செய்விக்கும்
நேசமுற விண்ணப்பம் செயஅவரும்
அது நேர்ந்தார்."

இருவரும் கோடிக்கணக்கான மக்களின் மனத்தினை மாற்றி, அவர் தம் வாழ்வைச் சீர்திருத்திப் புனிதம் ஆக்கியவர்கள். இருவரும் தத்தம் காலத்து மக்களின் வாழ்க்கையிலும் மனப்பான்மையிலும் மிகச் சிறந்த பெரியதொரு மாற்றத்தினை விளைவித்து, நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எழுச்சிபெற்று உணர்ச்சியுற்றுப் பின்பற்றி நின்று போற்றும் நிலையில், செய்தற்கரிய பெருஞ் செயல்களைச் செய்தவர்கள்.

'சமயம் என்பது ஒழுக்கம். நாம் ஒழுக்கத்தை நீத்ததும் சமய நெறியினின்றும் பிறழ்ந்தவ ராகின்றோம்'
—**காந்திஜி**.

உழவாரமும் இராட்டையும்

காந்தி அடிகளை நினைக்கும்போது முதுமையிலும் அழகு முதிர்ந்து அருள் கனிந்து, நம்மனோரை மயக்கி மகிழ்விக்கும் அவர் தம் இனிய புன்முறுவலும், எளிய உடையும், செந்தண்மை மிக்க சீலமும் பிறவும் நமது மனக்கண் முன்னே நிற்கின்றன. திருநாவுக்கரசரும் இங்ஙனமே திகழ்ந்திருந்ததாகச் சேக்கிழார் விளக்குகின்றார்.

> "சிந்தை இடையறா அன்பும்
> திருமேனி தன்னில் அசைவும்
> கந்தை மிகையாம் கருத்தும்
> கையுழ வாரப் படையும்..."

எனவரும் பெரிய புராணப் பாடல் ஈண்டு நினைவு கூரற்பாலது. இறைவனிடத்தும் உயிர்களிடத்தும் "இடையறாத அன்பு" இவ்விரு பெருமக்களுக்கும் இருந்து வந்தது. இருவரும் ஏறத்தாழ 80 ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்தவராதலின் "திருமேனி தன்னில் அசைவும்" இருவர்க்கும் உண்டு. காந்தியடிகள் "கந்தை மிகையாம் கருத்து" வாய்ந்தவராய் மிக எளிய ஆடையே அணிந்து வந்தார்.

திருநாவுக்கரசர் தமது திருக்கையில் உழவாரம் ஏந்தியிருந்தார். திருக்கோயில்களிலும் திருவீதிகளிலும் கல்லும் முள்ளும் பெயர்த்தெறிந்து உழவாரத் திருப்பணி புரிந்தார். அதனால் "உடைய அரசு உலகேத்தும் உழவாரப் படையாளி" எனத் திருநாவுக்கரசர் புகழப் பெறுவார். திருநாவுக்கரசரின் அடையாளச் சின்னம் "உழவாரம்" ஆதல்போல, "இராட்டை" காந்தியடிகளின் சின்னமாகத் திகழ்கின்றது. இராட்டையைப் பற்றிக் காந்தியடிகள் பேசிய பேச்சுக்கும் எழுதிய எழுத்துக்கும் ஓர் அளவில்லை. 'ஒவ்வொரு வீட்டிற்கும் அடுப்பு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது கைராட்டினம்,' 'எளிமை தன்னம்பிக்கை-தன்னடக்கம்-மன்பதைத் தொண்டு முதலிய பண்பு நலங்களுக்கு இராட்டினம் அறிகுறி,' 'இராட்டையினின்று நான் நூற்றெடுக்கும் ஒவ்வோர் இழையிலும் கடவுளைக் காண்கின்றேன். நான் தன்னந் தனியனாக இருக்கும்போது எனக்குக் கெழுதகை நண்பனாகவும், தேற்றரவாளனாகவும் இராட்டை திகழ்கின்றது. இராட்டை ஒழுக்கத்தைக் காக்கின்றது; உணவு அளிக்கின்றது; சோம்பலைப் போக்குகின்றது; மனத்தை ஒருமைப்படுத்துகின்றது' எனக் காந்தியடிகள் ஆங்காங்கே வற்புறுத்தி இருத்தல் காணலாம். இவ்வாற்றால் இருவருமே உழைப்பின் மேன்மையினை (Dignity of Labour) உலகுக்கு உணர்த்தியவராதல் உணரலாம்.

> "ஈசர் மிழலை இறையவர்பால்
> இமயப் பாவை திருமுலைப்பால்
> தேசம் உய்ய உண்டவர்தாம்
> திருமா மகனார் ஆதலினால்
> காசு வாசி யுடன்பெற்றார்;
> கைத்தொண் டாகும் படிமையினால்
> வாசி யில்லாக் காசுபடி
> பெற்று வந்தார் வாகீசர்"

எனவரும் பெரிய புராணப் பாடலாற் சேக்கிழார் சுவாமிகளும் கைத்தொண்டின் சிறப்பினைக் கட்டுரைத் திருத்தல் காணலாம்.

நாவன்மை

காந்தியடிகள் பேச்சு வன்மையும் எழுத்துவன்மையும் மிக்குத் திகழ்ந்திருந்தார். அவர் தம் ஆங்கிலமொழி நடைத்திறனை ஆங்கிலேயரே மிக வியந்து பாராட்டியுள்ளனர். இவ்வாறே திருநாவுக்கரசரும்,

> "பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப்
> பதிகத்தொடை பாடிய பான்மையினால்
> நாவுக்கரசு என்று உலகேழினும்நின்
> நாமம் நயப்புற மன்னுக..."

என்று இறைவன் அருளிச் செய்தபடி, நாவன்மையும் பாவன்மையும் வாய்ந்து விளங்கினார். "சொற்கு உறுதிக்கு அப்பர் எனச்சொல்" என்பது தமிழ்ப் பெரு மக்களின் அறிவுரை.

அப்பர் என்பதன் அரும்பொருள்

இஞ்ஞான்று நாம் அனைவரும் காந்தியடிகளை 'நாட்டின் தந்தை' (The Father

---

'சமயம் இல்லா வாழ்வு பற்றுக்கோடில்லாதது; பற்றுக்கோடில்லா வாழ்வு சுக்கான் இல்லாக் கப்பல் போன்றது.' —காந்திஜி.

of the Nation) என்று பாராட்டி வருகின்றோம். இத்தகைய அரும்பெரும் பொருட் குறிப்பிலேயே திருஞான சம்பந்தப்பெருமான் திருநாவுக்கரசரைப் பல இடங்களில் "அப்பர்" எனச் சிறப்பித்துரைத்துக் குறிப்பிடுகின்றார். தமிழ் நாட்டுக்குப் பல்லாற்றானும் 'தந்தை' எனப் போற்றத் தக்கவர் அப்பர்.

"அப்பரே! நீர் வருநாளில் திருவாரூர்
நிகழ்பெருமை வகுத்துரைப்பீர்"
(திருநா. 234)

"திருஞான மாமுனிவர் அரசிருந்த
பூந்துருத்திக்கு
அருகாக எழுந்தருளி எங்குற்றார்
அப்பர்? என...." (திருநா. 396)

"அப்பரை இங்கணை யப்பெறும் பேரருள்
உடையோம் யாம்" (திருஞான. 495)

"அப்பரே! வேதவனத்து ஐயர் தம்மை
அபிமுகத்துத் திருவாயில் திறந்து புக்கே
எப்பரிசும் நாம்இறைஞ்ச வேண்டும்! நீரே
இவ்வாயில் திருக்காப்பு நீங்கு மாறு
மெய்ப்பொருள்வண் தமிழ்பாடி அருளும்..."
(திருஞான. 581)

"அப்பர்! இந்தப் புனல்நாட்டில் எழுந்தருளி
இருப்பீர்..." (திருஞான. 617)

தயாமூலதன்மம்: அகிம்சை

மன்னுயிர்த்தொண்டே காந்தியடிகளின் வாழ்க்கையும் குறிக்கோளுமாக இருந்தது. திருநாவுக்கரசரும் "**தொண்டலால் துணையும் இல்லை**" என்னும் துணிபினராய் "**என்கடன் பணிசெய்து கிடப்பதே**" என்னும் உயரிய குறிக்கோள் உடையவராகத் திகழ்ந்தார். இன்னா செய்யாமை என்னும் "**அஹிம்ஸை**" காந்தியடிகளின் பேச்சும் மூச்சுமாக இருந்தது; திருநாவுக்கரசர் "**தயாமூல தன்மம்**" என்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலஞ்செய்யும் தண்ணளி மிக்க செம்மை வாழ்க்கையை நடத்தினார்.

"குலங்கெடுத்துக் கோள்நீக்க
வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை
இடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம்
ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ்
சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல
தன்மம் என்னும்
தத்துவத்தின் வழிநின்று
தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை
நள்ளாற் றானை
நான்அடியேன் நினைக்கப்பெற்
றுய்ந்த வாறே"

"...தனந்திருத்தும் அவர்திறத்தை
ஒழியப் பாற்றித்
தயாமூல தன்மவழி
எனக்கு நல்கி
மனந்திருத்தும் மழபாடி
வயிரத் தூணே
என்றென்றே நான்அரற்றி
நைகின் றேனே"

சத்தியாக்கிரகம்; உண்ணா நோன்பு

காந்தியடிகளுக்குச் சத்தியாக்கிரகமும் உண்ணா நோன்பும், அவர்தம் வாழ்க்கையில் மிகச்சிறந்த போர்க்கருவிகள் போல அவ்வப்போது விளங்கிப் பயன்பட்டு நலஞ்செய்தன. அவ்வாறே "பழையாறை வடதளி" என்னும் இடத்தில், திருநாவுக்கரசரும் **சத்தியாக்கிரகம் உண்ணா** நோன்பு என்னும் இருபெருங் கருவிகளையும் முதன் முதற் புதிது படைத்துக்கொண்டு போராடி, அவற்றின் துணையால் தம் கருத்தும் விருப்பமும் நிறைவேறச் சிறந்ததொரு வெற்றியினைப் பெற்று மக்களுக்கு நலம் விளைவித்தார். இவ்வுண்மையினை,

"வண்ணங் கண்டு நான்உம்மை
வணங்கி யன்றிப் போகேன்என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது செய்யாதே;
அண்ண லாரும் அதுவுணர்ந்தங்
கரசு தம்மைப் பணிவதற்குத்
திண்ண மாக மன்னனுக்குக்
கனவில் அருளிச் செய்கின்றார்"

எனச் சேக்கிழார் சுவாமிகள் சிறந்தெடுத்துரைத்திருத்தல் கண்டு மகிழ்ந்துணரற்

பாலது. இதன்கண் 'எண்ணம் முடிக்கும்' என்றது சத்தியாக்கிரகம். 'அமுது செய் யாதே இருந்தார்' என்றது உண்ணு நோன்பு.

சமய உணர்விற் சமரச நோக்கு

காந்தியடிகள் தம்மைச் "சநாதன இந்து" என்று பெருமிதத்துடன் கூறிக் கொண்டார். எனினும் பிற சமயங்களை யும் மதித்துப் போற்றித் தழீஇ ஒழுகினர். அவ்வண்ணமே திருநாவுக்கரசரும் ஒரு சிறந்த சிவநெறிச் சான்றோராக விளங்கு கின்றனரேனும், சமயப் பொறுமை கொண்டிருந்தார். சமயங்கள் தம்முள்ளே உயர்வு தாழ்வு குறித்துப் போரிடுதலை நாவுக்கரசர் விரும்பிற்றிலர்.

"விரிவிலா அறிவி னர்கள்
வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற்கு ஏற்ற தாகும்"

"கூவ லாமை குரைகடல் ஆமையைக்
கூவ லோடொக் குமோகடல் என்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரிது என்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே"

தீண்டாமை ஒழிப்பு

காந்தியடிகள் சாதிவேற்றுமைகளைக் கடிந்து தீண்டாமை (Untouchability) யினை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்டார். 'தீண்டாமை என்பது இந்து மதத்தி லுள்ள ஒரு கறை;' 'தீண்டாமை சமயத் தின் விளைவன்று; சாத்தானின் சூழ்ச்சி யால் விளைந்தது;' 'நான் வீடுபேறு எய்த விழைகின்றேன். நான் மீண்டும் பிறக்க விழைகின்றேன் இல்லை. பிறக்க நேரின், நான் தீண்டாதவனாகப் பிறந்து, அவர்கள் துயரங்களையும் வருத்தங்களையும் அனுப விப்பதில் பங்காளியாய், என்னையும் அவர் களையும் இரங்கத்தக்க நிலையினின்றுங் கரையேற்ற முயன்று உழைத்தல் வேண் டும். ஆதலால், மீண்டும் பிறப்புண்டேல் நான் பஞ்சமனாகப் பிறக்கவேண்டும் என் பது எனது வேண்டுகோள்' என்றெல் லாம் காந்தியடிகள் கூறியிருத்தல் காண லாம். இங்ஙனமே திருநாவுக்கரசரும் சாதி வேற்றுமைகளைக் கடிந்து, தீண்டா மையினை ஒழித்தருளும் கருத்துடையராக விளங்கியமை கருதற்பாற்று.

"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்!
கோத்தி ரமும்குல முங்கொண் டென்செய்வீர்?
பாத்தி ரம்சிவம் என்று பணிதிரேற்
மாத்தி ரைக்குள் அருளும் மாற்பேறரே"

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்,
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம்
[அல்லோம்!
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்;
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே!"

பிரார்த்தனை

காந்தியடிகள் 'உள்ளொளி' அல்லது 'அந்தராத்மா' (Intuition)வின் துணை கொண்டு அதன்வழி ஒழுகி வந்தார். திரு நாவுக்கரசரும் "புந்திவட்டத் திடைப் புக்கு நின்றானையும் பொய் என்பனோ?" எனவும்,

"நான்ஏதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்"

எனவும் அருளிச் செய்திருத்தல் அறிந் தின்புறற்பாலது. வழிபாடு அல்லது பிரார்த்தனை (Prayer) காந்தியடிகட்கு, அவர்தம் வாழ்க்கையில் மிக முதன்மை வாய்ந்ததாக இருந்தது. "காற்றும் நீரும் இன்றிக்கூட நான் வாழ்வேன்; ஆனால் கடவுளின் நினைவின்றி வாழ என்னால் முடியாது; நீங்கள் என்கண்களைப் பறித்து விடலாம்! என் மூக்கினை அறுத்துவிட லாம்; இவைகள் என்னைக் கொன்றுவிட மாட்டா. ஆனால், இறைவனிடத்து எனக் குள்ள நம்பிக்கையை மட்டும் நீங்கள் போக்கி விடுவீர்களாயின், அப்பொழுதே யான் இறந்தொழிந்து போவேன். இறைவ னுண்மையில் எனக்குள்ள உறுதியானது, இமய மலையைப்போல அசைக்க முடியாத தாகவும், அதன் கொடுமுடிகளிலுள்ள பனிப்படலங்களைப்போலத் தூயதாய்த் தெளிவாகவும் உள்ளது" எனக் காந்தியடி

'மக்கள்பால் உள்ள விலங்கியல்பை ஒழிக்க வல்லது சமயம்' —காந்திஜி.

கள் கூறியுள்ளனர். அத்தகைய இறையன்பில் திருநாவுக்கரசரும் தலை சிறந்து விளங்கினர் என்று சொல்லவேண்டுவதில்லை. அவர்க்கு இறைவனைப்பற்றிப் **"பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே!"**

"பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந்து உய்வனோ?"

அருளுணர்வும் அஞ்சாமையும்

காந்தியடிகளின் வாழ்க்கையில், அவர் நிகழ்த்திய இந்திய விடுதலை இயக்கப் போராட்டங்கள் பலவற்றில், அஞ்சி நடுங்கிக் கலங்கவேண்டிய நிலைகள், எண்ணில பல அவர்க்கு ஏற்பட்டன. ஆனால் "கடவுள் உண்மையாக இருக்கின்றார்; உண்மை கடவுளாக விளங்குகிறது" எனக்கொண்டு உண்மையை உறுதியாகக் கடைப்பிடித்த அடிகள், எந்நிலையிலும் கலக்கம் கொள்ளாமல் இறையருளுணர்வில் திளைத்து நின்று அஞ்சாமையை மேற்கொண்டிருந்தார். அருளுணர்வும் அஞ்சாமையும் அடிகளின் சிறப்பியல்புகளாக இருந்தன. திருநாவுக்கரசரும் இவ்வாறே விளங்கினர்.

"மலையே வந்து வீழினும் மனிதர்காள்
நிலையில் நின்று கலங்கப் பெறீர்..."

"மண்பா தலம்புக்கு மால்கடல்
மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர்
வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம்
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே"

"வானந் துளங்கிலென்? மண்கம்பம்
ஆகிலென்? மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென்? தண்கடலும்
மீனம் படிலென்? விரிசுடர்
வீழிலென்? வேலைநஞ்சுண்டு
ஊனம்ஒன் றில்லா ஒருவனுக்
காட்பட்ட உத்தமர்க்கே"

மன்னுயிர்த் தொண்டு

காந்தியடிகள் ஒல்லும் வகையானெல்லாம் பிறர்க்கு அறவினைகளை, ஓவாது செல்லும்வாயெல்லாம் செய்துவரும் சிறப்பியல்புடையவராக விளங்கி வந்தார். "போயர் போர்" (Boer war) "சூலு குழப்பம்" (Zulu rebellion) "உலக முதற் பெரும்போர்" முதலியன நிகழ்ந்த காலங்களில், அடிகள் தம் உயிரையும் பொருட்படுத்தாது மருத்துவப் படைப் (Ambulance Corps) பொறுப்பினராக இருந்து, புண்பட்ட வீரர்களுக்கு மருத்துவ உதவிகள் செய்தார். பொதுவாக, அவரது வாழ்க்கை முழுவதுமே பிறர் நலன் கருதிப் பலதிறப் பணிகளைப் புரிதலிலேயே கழிந்தமை அனைவரும் அறிந்த தொன்று. அத்தகைய சிறந்த தொண்டின் திறனையே நாம் திருநாவுக்கரசரின் வரலாற்றிற் காண்கின்றோம். அவர் தமது இளம் பருவத்திலேயே மக்கள் அனைவருக்கும் பலதிற உதவிகளைச் செய்யும் தொண்டு நிலையிற் றலைநின்றார் என்பதனை,

"மாசில்மனத் துயர்ஒழிய
மருள்நீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை
கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க
நிதியளித்துக் கருணையினால்
ஆசில்அறச் சாலைகளும்
தண்ணீர்ப்பந் தரும்அமைப்பார்"

"காவளர்த்தும் குளந்தொட்டும்
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத
ஈகைவினைத் துறைநின்றார்"

எனச் சேக்கிழார் சுவாமிகள் விளக்கியருள்வர். இம்மட்டோ! திருவீழி மிழலையிற் பெரியதொரு பஞ்சம் நேர்ந்து, அப்பஞ்சத்தால் மக்கள் மிக்க இடர்ப்பட்ட போது, திருநாவுக்கரசர் ஆற்றிய மன்ப

'கடவுள் என்பது சத்தியம். அதை எனக்குக் காட்டும் ஒளி அகிம்சை. அச் சத்தியத்தின் ஒரு பகுதி யான் குறிக்கும் சுயாராஜ்யம்.' —காந்திஜி.

தைத் தொண்டின் (Social Service) மேன்மையினை,

"அல்லார் கண்டத் தண்டர்பிரான்
அருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
பரமன் அடியார் ஆனார்கள்
எல்லாம் எய்தி உண்களன
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்"

எனப் பெரியபுராணம் சிறப்புற எடுத்து விளக்கியிருக்கும் திறம் உணர்ந்து இன்புறத்தக்கது. இங்ஙனமே, திருமறைக் காட்டில் திருக்கதவம் திறப்பித்த செயலும், பழையாறை வடதளியில் மறைக்கப் பட்டிருந்த சிவலிங்கத் திருமேனியினை அரசனது துணைகொண்டு மீட்டு வெளிப் படச் செய்து வழிபட்டதும் பிறவும், திருநாவுக்கரசர் தாம் சென்ற இடங்களிலெல்லாம் மக்களுக்கு நேர்ந்த இடையூறுகளை அறிந்து, அவைகளைக் களைந்தொழித்தற்கண் காட்டிய பேரார்வத்தினைப் புலப் படுத்துகின்றன.

நாமார்க்கும் குடியல்லோம்

காந்தியடிகள் 'இந்தியாவை விட்டு வெளியேறுக' (Quit India) என முழங்கி ஒரு பெரிய வல்லரசினை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றார். அப்பரடிகளும் ஒரு பெரிய வல்லரசினை எதிர்த்து நின்று,

"நாமார்க்கும் குடியல்லோம்
என்றெடுத்து நான்மறையின்
கோமானை நதியினுடன்
குளிர்மதிவாழ் சடையானைத்
தேமாலைச் செந்தமிழின்
செழுந்திருத்தாண் டகம்பாடி
ஆமாறு நீர்அழைக்கும்
அடைவிலம்என் றருள்செய்தார்"

ஆங்கில ஆட்சியும் மொழியும் நாகரிகமும் பழக்க வழக்க ஒழுக்கங்களும் பிறவும் நம்மிடையில் அளவிறப்பக் கலந்து இந்திய நாட்டைக் குலைத்து வந்தபொழுது, அவற்றை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டார் காந்தியடிகள். அவ்வாறே நம் அப்பர் பெருமானும் தமிழகத்தில் வேற்றவர் கொள்கையும் மொழியும் ஆட்சியும் தலைமையும் பிறவும் புகுந்து கலந்து தமிழ் மக்களுக்குப் பெருங்கேடு சூழ்ந்துவந்த நிலையில், அவற்றை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றார். "தீமையை வெறு; ஆனால் தீயவனை வெறுக்காதே" (Hate the sin, but not the sinner) என்பது காந்தி அடிகளின் கோட்பாடு. ஆதலின், காந்தியடிகள் ஆங்கில ஆட்சியை வெறுத் தாராயினும், ஆங்கிலேயர்களை வெறுத் திலர். திருநாவுக்கரசரும் இவ்வண்ணமே தம் காலத்தில் தமிழகத்திற் சிலர் கடைப் பிடித்து வந்த தீய கொள்கைகளையும் செயல்களையுமே கடிந்துரைத்தனர்.

தாழ்வெனும் தன்மை

திருநாவுக்கரசரும் காந்தியடிகளும் "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் திருமொழிக்கு இலக்கியமாக வாழ்ந்தனர். "தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது" என்பது சிவஞானசித்தியார். இத் தாழ்வெனும் தன்மை இவ்விரு பெருஞ் சான்றோர்கள் மாட்டும் நிரம்பியிருந்தது. பிறரெல்லாம் தம்மை "**மகாத்மா**" எனப் புகழ்ந்து வழுத்தி மகிழ்ந்து வந்தனராயினும், காந்தியடிகள் தம்மை "**அல்பாத்மா**" என்றே குறிப்பிட்டுக்கொள்ளும் வழக்கம் உடையவராக இருந்தார். தம்முடைய குற்றங்களை வெளிப்படையாகக் கூறி ஒப்புக்கொள்ள அவர் என்றும் தயங்கியதில்லை. திருநாவுக்கரசரும் அத்தகைய என்பதனைப் பின்வரும் பாடல்கள் உணர்த்தும்.

"குலம்பொல்லேன் குணம்பொல்லேன்
குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன்
கோலம் ஆய
நலம்பொல்லேன் நான்பொல்லேன்
ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன்
நடுவே நின்ற

'சமயத் தொடர்பில்லாத அரசியல் இருத்தல் அரிது. சமய ஞானம் பெறாத அரசியல் படுகுழியாகும். ஏனெனில் அஃது ஆத்மாவை அழிப்பது. —**காந்திஜி.**

விலங்கல்லேன் விலங்கல்லா
தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவே மிகப்பெரிதும்
பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே
ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன்
ஏழை யேனே''

''புழுவுக் குங்குணம் நான்குஎனக் கும்அதே
புழுவுக்கு இங்கெனக் குள்ளபொல்லாங்கில்லை
புழுவி னும்கடை யேன்புனி தன்தமர்
குழுவி னுக்கெவ் விடத்தேன்சென்று கூடவே''

பொறிவாயில் ஐந்தவித்தோர்

காந்தியடிகள் பெரிதும் முயன்று படிப்படியே பொறிபுலன்களை வென்று அடக்கிக் கைவந்தவர். 'பிரமசரியம்' என்பதற்கு அவர் கொண்ட பொருள் விளக்கம் மிகவும் விழுமியது. அவர் தம் கருத்தின்படி 'பிரமசரியம்' என்பதற்கு **'இறைவனுடன் இயைந்து வாழ்தல்'** என்பது பொருள்.

''உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட் டேனே''

என அப்பரடிகள் அருளிச் செய்திருத்தல் காணலாம். காந்தியடிகள் தமது தேசபக்திக் (Patriotism) கனலால், எல்லா வகையான மனித ஆசைகளையும் மாசுகளையும் சுட்டெரித்துத் தூயவராகத் திகழ்ந்தார். அப்பர் பெருமானும் அங்ஙனமே விளங்கினர் என்பதனை,

''செம்பொன்னும் நவமணியும்
சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில்
உருள்பருக்கை யுடன்ஒக்க
எம்பெருமான் வாகீசர்
உழவாரத் தினில்ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல
வாவியினிற் புகஎறிந்தார்''

''இத்தன்மை அரம்பையர்கள்
எவ்விதமும் செயல்புரிய
அத்தனார் திருவடிக்கீழ்
நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய
விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது
செய்பணியின் தலைநின்றார்''

எனவரும் பெரிய புராணப் பாடல்கள் கொண்டு தெளியலாம். இவ்வாற்றாற் புலனடக்கம் கைவந்த பெருந்தகைமையாலும் இவர் தம் வாழ்க்கையும் பண்பும் ஒத்திருத்தல் உணர்ந்து போற்றற்பாலது. இருவரையும் 'பொறிவாயில் ஐந்தவித்தோர்' எனலாம்.

'அப்பாலும் அடிச்சார்ந்தார்'

இங்ஙனம் அப்பரடிகளுக்கும் காந்தியடிகளுக்கும் இடையே எத்துணையோ பலதிறப் பண்பொப்புமைகளைக் காணலாம். **உவமையெல்லாம் ஒருபுடை யுவமையே.** காந்தியடிகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து 'மனிதரில் தலையாய மனிதர்' என விளங்கியவர். திருநாவுக்கரசரோ மனிதரில் தலையான மனிதராக வயங்கித் தெய்வீக நிலையும் பெற்றுச் சிறந்திருந்தவர். காந்தியடிகள் இறைவன்பால் பேரன்பு கொண்டிருந்த பெரியவராயினும், திருநாவுக்கரசர்போல இறைவனைத் தம் கண்ணார நேரே கண்டு இன்புறும் பெரும்பேறு பெற்றவர் அல்லவர். திருநாவுக்கரசர் இறையருளாற்றின் துணை கொண்டு நிகழ்த்திய பல அற்புதச்செயல்களைப் (Miracles) போலக் காந்தியடிகள் ஏதும் செய்திற்றிலர். காந்தியடிகளின் இந்திய விடுதலை இயக்கம் ஒரு குறித்த கால எல்லைக்கு மட்டுமே உட்பட்டது. திருநாவுக்கரசரின் திருநெறி அருளியக்கமோ, தமிழ்நாடும் மொழியும் தலை நாகரிகங்களும் பிறவும் உள்ளளவும் என்றென்றும் நிலைபேறுற்று நின்று நிலவும் பெருஞ்சிறப்புடையது. அப்பரடிகளின் அமிழ்த மொழிகள் மிகச் சிறந்துயர்ந்த கவிதைகளாக, கலைப்பெருங் களஞ்சியமாக, அழியாப் பெருஞ்செல்வ வைப்புக்களாக விளங்கிவரும் மாட்சிமை வாய்ந்தவை ஆகும். இங்ஙனம் ஒரு சிறு வேற்றுமைகளும் இருவரிடையில் உண்டு.

'என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பது எனக்குத் தெரியும். எல்லாம் செய்ய வல்லவர் கடவுள்.'
—காந்திஜி.

எனினும், காந்தியடிகள் உலகமக்கள் அனைவராலும் ஒருங்கே புகழ்ந்து போற்றப்படும் சான்றோராகத் திகழ்தலை எவரும் மறுத்தல் இயலாது. இவ்விருபதாம் நூற்றாண்டில் தோன்றியருளி, எத்துணையோ பல செயற்கருஞ் செயல்களைச் செய்து, சத்தியம் அகிம்சை முதலிய பல உயர்ந்த கொள்கைகளைக் கோடிக் கணக்கான மக்களிடையே பரவச்செய்து, தாமும் தம் தூய வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடித்து விளக்கிக் காட்டியருளிய உத்தமர் காந்தியடிகளின் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல. அவரை நாம் "அப்பாலும் அடிச்சார்ந்தார்" களுள் ஒருவர் எனக் கொண்டு போற்றி, அவர் தம் அரிய பெரிய உபதேச மொழிகளைக் கடைப்பிடித்தொழுகி நல்வாழ்வு வாழ்ந்து, நலம்பெற முயலுவோமாக!

"மூவேந்தர் தமிழ்வழங்கும்
நாட்டுக் கப்பால்
முதல்வனுர் அடிச்சார்ந்த
முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டர்
தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து
முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல்
அடம்பு தும்பை
புதியமதி நதிஇதழி
பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியான்
அடிச்சேர்ந் தாரும்
செப்பியஅப் பாலும்அடிச்
சார்ந்தார் தாமே"

—பெரிய புராணம்.

"சாந்தமயம் எனஇலங்கும்
தனிப்பொருளை உளத்தென்றும்
ஏந்தியுயிர் தமக்கெல்லாம்
இனிமைசெய உலகிடையே
போந்தகுண மலையாகும்
புனிதநிறை கடலாகும்
காந்தியடி இணைமலரைக்
கருத்திருத்தி வழுத்துவமே"

—திரு. வி. க.

வைஷ்ணவன் யாவன்?

[கூர்ச்சர மொழியில், நரசிங்க மேத்தா என்பவரால் பாடப்பெற்ற 'வைஷ்ணவ ஜனதோ...' என்னும் தலைப்புடைய ஒரு சிறந்த பாட்டு உண்டு. அப்பாடலைக் காந்தியடிகள் மிகவும் விரும்பித் தமது பிரார்த்தனைக் கூட்டங்களில் பாடுவது வழக்கம். அப்பாட்டு வைஷ்ணவத்தின் சிறந்த உண்மைகளைப் புலப்படுத்துவது. அப்பாட்டின் கருத்தை மொழிபெயர்த்துப் பின்வரும் தமிழ்ப்பாச் செய்யுள் தருகின்றது. காந்தியடிகள் வைஷ்ணவ குடும்பத்தில் தோன்றியருளியவர் என்பதும் ஈண்டு உணர்ந்து மகிழற்பாலது.]

"பிறர்துயரைத் தன்துயராப் பேணிஅவர்க் கேவல்செய்யும்
திறன் அதனைப் பாராட்டத் திடமுடையான் ஏவனவன்?
எல்லாரை யும்வணங்கி இகழாதான் ஒருமனையான்
சொல்லாரும் மனந்தூயான் தொழுந்தகையாள் அவன்தாயே!
சமநோக்கன் தியாகமுளான் தாய்என்பான் பிறர்மனையை
அமைநாவால் பொய்மொழியான் அந்நியர்தம் பொருள்தீண்டான்.
மோகமொடு மாயைநண்ணுன் முழுவைராக்கிய முடையான்
ஏகன்பெயர் இன்பந்தோய்ந் திருந்தீர்த்தம் உடலானான்
காமவுலோ பஞ்சினமும் கரவுமிலான் வைணவனே
ஏமநல்கும் அவன்காட்சி எழுபானேர் தலைமுறையே"

—திரு. வி. க.

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

மீண்டும் திருவீழிமிழலையை அடைதல்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தருடன் திருமறைக்காட்டில் தங்கித் திருத்தொண்டாற்றியிருக்கும் நாட்களில் ஒருநாள், பாண்டிநாட்டிலிருந்து, பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் அனுப்பிய பெரியோர் சிலர் வந்து, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரைக் கண்டு வணங்கினர். தாங்கள் இன்னுர் அனுப்ப வந்தவர்கள் என்பதைத் தெரிவித்தனர். பாண்டி நாட்டிலேயே தாம் மாத்திரமே சிவநெறியில் நிற்கும் அவ்விருவரும் யாதொரு தீங்கும் இன்றி நிறைந்த நன்மையுடன் இருத்தலை அறிய விரும்பி, அவர்களது நலத்தினை நாயனுர் வினவியருள, அவர்கள், 'உலகம் உய்யவேண்டி இந்நிலவுலகின்கண் எழுந்தருளி வந்துள்ள நுமது திருவடிகளையே எப்பொழுதும் நினைந்து வாழ்கின்றவர்க்குத் தீங்கு உண்டாதலும் உண்டோ' என்று விடையிறுத்து, 'மெய்ந்நெறியாகிய சைவநெறியும் வைதிகநெறியும் இருக்க அவற்றுள் ஒன்றனைக் கொள்ளமாட்டாது, பொய்ந்நெறியாகிய சமண் சமயத்தை மேற்கொண்டு அதனையே மெய்ந்நெறியென வாய் வன்மை பேசித் திரியும் சமணர்களது கொடுமை பொறுக்க ஒண்ணுததாய் உள்ளது என்பதை நுமது திருமுன்பு விண்ணப்பித்துக் கொள்ளுமாறு, பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் எங்களை விடுத்தனர்' என்று சொல்லி மீண்டும் வணங்கினர்.

சிவநெறியாளரைத் தீராப் பகைவராக நினைத்து அவர்கட்குப் பொறுக்கலாகாத தீங்கிழைத்து வரும் சமணர்களது கொடுஞ் செயலைக் கேட்டவுடன், பிள்ளையார் பாண்டி நாட்டில் புறச்சமயக் களைநீங்கிச் சிவநெறிப் பயிர் தழைக்கச் சிவபிரானது திருவருள் அவண் முன்னிற்குமாறு வேண்டிக்கொள்ளுதற்பொருட்டு, அத் திருவருள் வடிவமாகிய திருநீற்றின் துணையை உளத்துக் கொண்டு, பாண்டிநாடு நோக்கிப் புறப்பட எழுந்தார்.

அதனைக் கண்ட அப்பர், புகலிவேந்தராகிய ஞானசம்பந்தரை நோக்கி, 'அந்தோ, கெட்டேன்! உளத்து மாசு நீக்குவதாகச் சொல்லிக்கொண்டு, உடலிலேயும் மாசேற்றித் திரிகின்ற சமணர்கள், வஞ்சனையிலே மிகக் கைதேர்ந்தவர்கள்; அவர்கள் முன்பு எனக்குச் செய்த கொடுமைகள் மிகப் பல; அவை அனைத்தையும் நீவிர் அறிந்திருக்க மாட்டீர்; ஆதலின், அவர்களுக்குக் கோட்டையாய் அமைந்துள்ள மதுரைக்கு நீவிர் செல்ல நான் 'சிறிதும் உடன்படமாட்டேன்' என்றருளிச் செய்தார்.

பிள்ளையார், 'அப்பரே, அளவற்ற பெருமை வாய்ந்த திருநீற்றினைப் போற்றி வாழும் நிலையுடையவர் மதுரையிலே இருவர் தாம் இருக்கின்றனர். சிவபிரான் திருக்கோயிலும், அவன் அடியவரும் உள்ள இடங்களில் சென்று வணங்கி, சிவநெறி பரப்பி வரும் நாம், அவர்கள் அழையாமலே அவண் செல்லும் கடப்பாடுடையோம்; அங்ஙனமாக, அழைத்த பின்னரும் சமணர்களது கொடுமைக்கு அஞ்சி, 'வாரேம்' என மறுத்து இவண் இருந்துவிடுவேமாயின், மற்று யார் தாம் அவர்கட்குத் துணையாக வல்லார்! ஆதலின், முதற்கண் மதுரைக்குச் சென்று, பாண்டிமாதேவியாரையும் குலச்சிறையாரையும் கண்டு, நம் பெருமானது திருவருள் வலத்தால், சமணர்களது கொடுமைகளை எல்லாம் அழிவித்து, சிவநெறியைப் பாண்டிநாடெங்கணும் பரவச்செய்வதற்குமுன், இந்நாட்டில் வேறொன்றும் செய்யமாட்டேன்; இதனை, அப்பராகிய நும்மீது ஆணையாகக் கூறுகின்றேன்' என்றருளிச் செய்தார்.

பின்னரும் ஆளுடைய அரசுகள், 'நும் கருத்து மிகச் சிறிதே; என்றாலும் நுமது திருமேனி நுமது துணிவின் அளவிற்குப் போதியதன்று. தோற்றத்திலேயே கொடுமை

உடைய சமணக் குழாங்களை அஞ்சாது நின்று காணவும் நுமக்கு இயலாது; அதற்கு மேல் அவர்கள் இழைக்கும் செயற்கொடுமையை நுமது திருமேனி எங்ஙனம் பொறுப்பதாகும்? ஆதலின், நுமது கருத்தினை நான் சென்று முடித்து வருகின்றேன்' என்றருளினார்.

அது, கேட்ட பிள்ளையார், சிவபிரானது திருவருள் வன்மையை யெல்லாம் விதந்து கூறி, ஆலவாய்ப் பெருமானையும் அவன் அடியவர்களையும் கண்டு களித்து, அவ்வடியவர்கள் விரும்பிய வண்ணமே நிறைவேற்றுவிக்கும் பேற்றிற்கு இசைந்தருள வேண்டினார். அதனால், அப்பர் பெருமானார், அதற்குமேல் யாதும் மறுத்துக்கூற மாட்டாதவராய், வாளா இருந்தார். ஆகவே, ஞானபோனகராகிய பிள்ளையார், அடியவர் குழாத்துடன் பாண்டிநாடு நோக்கி எழுந்தருளினார்.

ஆளுடைய பிள்ளையாரிடம் விடைபெற்றுத் திருமறைக் காட்டிலே தங்கியிருந்த ஆளுடைய அரசர், அங்குத் திருப்பதிகங்கள் அருளிச்செய்து திருத்தொண்டு செய்து, சில நாட்களுக்குப் பின்னர், மீண்டும் திருவீழிமிழலைக்கு எழுந்தருள விரும்பி, திருமறைக் காட்டிறைவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, "விரைந்து போவது வீழிமிழலைக்கே" எனவும், "மீண்டும் போவது வீழி மிழலைக்கே" எனவும் திருப்பதிகம் அருளிச்செய்து கொண்டு, திருவீழிமிழலையை நோக்கிப் புறப்பட்டு, திருநாகைக்காரோணம் முதலிய தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடியருளி, திருத்தொண்டு புரிந்து; திருவீழிமிழலையை அடைந்தருளினார்.

திருமறைக்காட்டுத் திருப்பதிகங்கள்

திருமறைக்காட்டிற்கு உள்ள திருநாவுக்கரசு நாயனார் திருப்பதிகங்கள் ஐந்து. அவை: "இந்திரனோடு தேவர்", "தேரையும் மேல்கடாவ" என்னும் திருநேரிசைத் திருப்பதிகங்களும், "ஓத மால்கடல்", "பண்ணி னேர்மொழியாள்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகங்களும், "தூண்டு சுடரனைய சோதி கண்டாய்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகமுமாம்.

அவற்றுள் முதற்றிருநேரிசை, இறைவன் இயல்புகளை எடுத்தியம்புவது. அதனுள்ளே,

"மந்திரம் ஆனார் போலும் மாமறைக்
காடனாரே"

"மறுமையும் இம்மை யாவர் மாமறைக்
காடனாரே"

"..................தம்அடி பரவு வார்க்கு
மனத்தினுள் மாசுதீர்ப்பர் மாமறைக்
காடனாரே"

"..................கருத்தினுள் வைத்த வர்க்கு
மாசினைத் தீர்ப்பர்போலும் மாமறைக்
காடனாரே"

என்னும் அரும்பொருள்கள் வெளியாகியுள்ளன.

மற்றும், மக்கள் உயிர்கட்கு மக்களுடம்பாகிய குடிலினை இறைவன் அமைத்துக் கொடுத்துள்ள அருமை,

"கால்கொடுத் திருகை யேற்றிக்
கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீராற்
சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்வுடைத் தாஅ மைத்தங்
கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத்து ஆவி வைத்தார்
மாமறைக் காட னாரே"

என அதன்கண் அறிவுறுத்தப்பட்டது.

இரண்டாவது திருநேரிசை, இறைவன், இராவணனது அளவிறந்த செருக்கினை நீக்கி, அவனுக்கு நல்லுணர்வு நல்கிப் பின்னர் நல்லருள் புரிந்தமையை விரித்து விளக்குகின்றது. அஃது, அதனை ஓதுவார்க்கு அப்பயனை அளிப்பதாகும்.

முதற்றிருக்குறுந்தொகை, இறைவனது திருக்கோலங்களை விளக்குவது. 'அக்கோலங்களை நினைத்து ஏத்துவார்க்குப் பாவம் பறந்தோடும்' என்னும் குறிப்பு முதற்றிருப் பாடலிலே அமைந்துள்ளது.

இரண்டாவது திருக்குறுந்தொகையே, நாயனார் மறைக்கதவம் திறக்கப்பாடிய திருப்பதிகம். அதன்கண் நாயனார் இறைவன்பால் முறையீடு செய்துள்ள நிலைமையைக் காணலாம். அஃது அங்ஙனம் முறையீடு செய்வார்க்குத் திருவுளம் இரங்குபவன் இறைவன் என்பதை உய்த்துணர வைப்பதாகும். பழைய பதிப்புக்களில் முன்னைத் திருக்குறுந்தொகையில் உள்ள, "விண்ணுளார் விரும்பி" என்னும் திருப்பாடல் இத்திருப்பதிகத் திருப்பாடலேயாகும். இதனை, திரு. சி. கே. எஸ்

அவர்களும் தமது பெரியபுராண உரையில் விளக்கியுள்ளார்கள். சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜப் பதிப்பில் அத்திருப் பாடல் இத்திருப்பதிகத்திலே சேர்த்துப் பதிப்பித்துள்ளமை போற்றுதற்குரியதாகும்.

திருத்தாண்டகத் திருப்பதிகம் இறைவனது பெருமையை வியந்து அருளிச்செய்வது. பல அரும்பெரும்பொருள்கள் அதன்கண் பொதிந்துள்ளன. முதற்றிருப் பாடலே மிகவும் அருமை வாய்ந்தது. அது வருமாறு.

''தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் றானே.''

திருவாய்மூர்த் திருப்பதிகம்

திருவாய்மூர்க்கு உள்ள திருப்பதிகங்கள் இரண்டே. அவற்றுள், ''எங்கே யென்னை'' என்னும் திருப்பதிகம், நாயனாரை இறைவன் 'திருவாய்மூருக்கு வா' என்று அழைத்துச் சென்றபோது, பின்னே பாடிக்கொண்டு சென்றது. அதுபற்றி முன்பே குறிப்பிடப் பட்டது.

''பாட அடியார் பரவக் கண்டேன்''

என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம், இறைவனை நேரே கண்டு அருளிச்செய்தது. இதன்கண் இறைவன் பலவகையாக அளித்த காட்சியினையும் கண்டுகளித்த இன்ப மீதூர்வின் நிலையை உணரலாம். 'கடவுள் உண்டோ இல்லையோ என்னும் பெரியதோர் ஐய உணர்வினை, இத்திருப்பதிகம் அடியோடு அகற்றி, உண்மையை நன்கு தெரிவித்தருளும். மற்றும் சிவபெருமானது சிறப்படையாளங்கள் பலவற்றையும் தெரியக் காட்டும்.

''பதினென் கணனும் பயிலக் கண்டேன்''
''நான்மறையா னோடு நெடிய மாலும்
நண்ணி வரக்கண்டேன்''
''போற்றிசைத்து விண்ணோர் புகழக்
கண்டேன்''

என்பனவற்றால் கடவுளர் உண்மை நன்குணரப்படுவதாம். இன்னும்,

''மெல்லியலும் விநாயகனுந் தோன்றக்
கண்டேன்''

என்பது, இக்காலத்தில் விநாயகரைப் பற்றி ஆராயப் புகுகின்றவர்களது ஆராய்ச்சிக்கு ஒருமுடிவைத் தரும். இத்திருப்பதிகத்துள் முருகன் எடுத்தோதப்படாது, விநாயகர் எடுத்தோதப்பட்ட அருளிப்பாடு, இக்காலத்துத் தோன்றும் மலைவினைக் குறித்த திருவருட் குறிப்பே போலும்!

திருநாகைக் காரோணத் திருப்பதிகம்

திருநாகைக் காரோணத்திற்கு, நான்கு திருப்பதிகங்கள் உள்ளன. அவற்றுள், ''மனைவிதாய் தந்தை மக்கள்'' என்னும் திருநேரிசைத் திருப்பதிகம், 'ஒருவற்குக் குடும்ப பாரத்திலேயே கிடந்து உழலாது இறைவனைப்பற்றிய எண்ணம் தோன்றுதலே துன்பத்தி னீங்கி இன்பம் அடைதற்கு அறிகுறி' என்பதை அறிவுறுத்துவது.

''.................காரோணங் கருதி யேத்தப்
பெற்றவர் பிறந்தார் மற்றுப் பிறந்தார்
பிறந்தி லாரே''

என அறுதியிட் டருளிய அருளிப்பாடும் அதன்கண்ணே அமைந்துள்ளது.

''வடிவுடை மாமலை மங்கைபங் கா''

என்னும் திருவிருத்தத் திருப்பதிகம், இறைவனோடு தோழமை நெறியால் நகைத்துரையாடி, உறுதியை வேண்டுவது.

''நின்—நாமம் பரவி நமச்சிவா
யவ்வெனும் அஞ்செழுத்தும்,
சாம்அன்று உரைக்கத் தருதிகண்
டாய்எங்கள் சங்கரனே''

என்பதே அவ்வுறுதி என்க. மற்றும்,

''மனைதுறந் தல்லுணா வல்லமண் குண்டர்
மயக்கம் நீக்கி
எனைநினைந் தாட்கொண்டாய்க் கென்னினி
யான்செய்யும் இச்சைகளே''

என்பது, இறைவனை மறந்திருக்கும் மயக்க நிலையின் நீக்கி அவனை மறவாநிலையில் வைத்தருளுவனாயின், அதனின் மிக்க பேறுக அவனிடம் நாம் வேண்டற்பாலன யாவை' என்பதை இனிது தெளிவிக்கும்.

''பாணத் தால்மதில் மூன்றும் எரித்தவன்''

என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், 'இறைவனை வழிபடவே வினைகள் நீங்கும் என்பதைத் அருளிச்செய்தது.

''பாரார் பரவும் பழனத் தானை''

என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம், இறைவன், உயிர்கள் தன்னை வழிபட்டு உய்தற்பொருட்டு நிலவுலகில் பல இடங்களில் திருவுருக்கொண்டு எழுந்தருளியுள்ள அருட்பெருக்கினை நினைந்து, அங்ஙனமே வழிபட்டு உய்யுமாறு அருளிச்செய்தது.

திருவீழிமிழலையை மீண்டும் வணங்கல்

பன்னாள் படிக்காசு பெற்று வணங்கியிருந்த மிழலைப் பெருமானை மீளவும் வணங்க ஆர்வங்கொண்டு அடைந்த நாயனார், அங்ஙனமே திருமாலால் விண்ணுலகத்தினின்றுங் கொணரப்பட்ட விண்ணிழி விமானத்தில் எழுந்தருளியிருக்கும் அப்பெருமானை வணங்கித் திருப்பதிகம் பாடியும், திருத்தொண்டு செய்துகொண்டும் அத்திருத்தலத்திலே பலநாட்கள் எழுந்தருளியிருந்தார். முன்பு திருஞானசம்பந்தருடனும் பல நாட்கள் அமர்ந்திருந்தார். ஆதலின், அத்திருத்தலத்திற்கு நாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் பற்பல இருந்திருத்தல் வேண்டும். ஆயினும் திருநேரிசை ஒன்று, திருவிருத்தம் ஒன்று, திருக்குறுந்தொகை இரண்டு, திருத்தாண்டகம் நான்கு ஆக எட்டுத் திருப்பதிகங்களே அத்திருத்தலத்திற்கு உள்ளன.

அவற்றுள், "பூதத்தின் படையர்" என்னும் திருநேரிசைத் திருப்பதிகம் இறைவன் இயல்பினை விளக்கியருள்வது. அதனுள்,

> "......................மதுவும் பாலும்
> ஆலையிற் பாகும் போல அண்ணித்திட்
> டடியார்க் கென்றும்
> வேலையி னமுதர் வீழி மிழலையுள்
> விகிர்த னாரே"

என, இறைவன் அடியவர்கட்கு அளவற்ற இன்பப் பொருளாதல் விளக்கப்பட்டது.

"தலைமயிர் வடமும் பூண்ட—விலையிலா வேடர்வீழி மிழலையுள் விகிர்த னாரே" என்பதில், 'பஞ்சவடி' என்னும் மாவிரத வேடம் அருளப்பட் டுள்ளது.

"எண்ணகத் தில்லை யல்லர்" என்னும் திருப்பாடலுள், இறைவன் நிலத்திடை ஐந்து, நீரிடை நான்கு முதலியனவாக நிற்கும் தத்துவம் குறிக்கப்பட்டது.

"எந்தையும் எந்தை தந்தை தந்தையு மாய ஈசர்" என்பதனால், இறைவன் யாவருக்கும் மூதற்றந்தை யாதல் மொழிந்தருளப்பட்டது

"நெய்யால் வேட்கும்—வெந்தழ லுருவர் வீழி மிழலையுள் விகிர்த னாரே" என்பதில், இறைவன் வேள்வித்தீயாய் நின்று, வேட்பார்க்கு அருளும் முறை கூறப்பட்டது.

"நீற்றினை நிறையப் பூசி" என்னும் திருப்பாடலுள், அத்தலத்தில் திருமால் விண்ணிழி விமானம் கொணர்ந்து இறைவனை எழுந்தருளப்பண்ணி வழிபட, அவருக்குச் சக்கரம் அருளிய வரலாறு குறித்தருளப்பட்டது.

"வான்சொட்டச் சொட்ட" என்னும் திருவிருத்தத் திருப்பதிகம், இறைவனை நாம் மறப்பினும் அம் மறப்புப்பற்றி நம்மை அவன் கைவிடாதிருக்க வேண்டிக்கொள்ளுமாறு அருளிச் செய்யப்பட்டது. பொதுவாக உலகியல் ஆரவாரத்திலும், சிறப்பாக இறக்கும்பொழுதும், பின்னர்ப் பிறக்கும்பொழுதும் அவனை மறத்தல் உண்டாகும்; அது பற்றி நினைவுள்ளபொழுதே வேண்டிக் கொள்ளுதல் வேண்டும் என்பது உய்த்துணர வைத்து அருளப்பட்டது.

"கரைந்து கைதொழு வாரையும்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகமே, நாயனார் திருமறைக்காட்டிலிருந்து மீண்டும் திருவீழிமிழலையை அடைய நினைத்து அங்குநின்றும் எழுந்தருளி வருங்கால் அருளிச்செய்யப்பட்டது. இதனுள், 'மாதரொடுகூட விரும்பும் ஆசையாகிய மயக்கத்துடன் உடலைப் பேணுதலையே வாழ்க்கையின் பயனாகக்கொண்டு நடத்தல், நெருப்பை மடியிற் கொள்வது போலும்' என, விழிப்பூட்டியருளும் திருப்பாடல் அமைந்துள்ளது. அது,

> "குழலை யாழ்மொழி யாரிடை வேட்கையால்
> உழலை யாக்கையை ஊனும் உணர்விநீர்
> தழலை நீர்மடிக் கொள்ளன்மின் சாற்றினேன்
> மிழலை யானடி சாரவின் னுள்வரே."

என்பது.

"என்பொ னேஇமை யோர்தொழு பைங்கழல்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகமும், திருவிருத்தத் திருப்பதிகம்போல, 'இறைவன் தம்மையும் பொருளாகக்கொண்டு காத்தருள வேண்டும்' என வேண்டியருளியது. அதனுள் இறைவன் பெருமைகள் பலவாறு ஓதியருளப்பட்டன.

"போரானை ஈருரிவைப் போர்வை யானை" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம், திருஞானசம்பந்தருடன் முதற்கண் எழுந்

தருளி வணங்கியபோது அருளிச்செய்யப் பெற்றது. அதுபற்றி முன்பே கூறப்பட்டது. அதனுள்,

"நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை"

"வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயானை"

"வருகாலம் செல்காலம் வந்த காலம் உற்றவற்றை உணர்ந்தாரும் உணர லாகா ஒரு சுடரை"

என்னும் அரியபொருள்களும், "மெல்லியலாள் தவத்தின்நிறை அளக்கலுற்றுச் சென்றானை" என, அம்மை தவத்தினை அளக்கச் சென்றவரலாற்றுக் குறிப்பும் அருளிச்செய்யப்பட்டன.

"கயிலாய மலையுள்ளார்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம், இறைவன், திருக்கயிலை முதலிய எண்ணிறந்த தலங்களில் எழுந்தருளியிருக்கும் நிலையை நினைந்து, அவ்விடங்களிலெல்லாம் மனத்தால் ஒருங்கு சென்ற வணங்கி யருளிச்செய்தது.

"கண்ணவன்காண்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம், இறைவன் இயல்பினை விரித்தருளுவது. இதனுள்ளும்,

"மாதிசைந்த மாதவம்முன் சோதித் தான்காண்" என அம்மைதன் தவத்தினை அளந்தமை அருளப்பட்டது. மற்றும்,

"நெய்யினொடு பால்இளநீர் ஆடி னான்காண்"

என இளநீராட்டலும் குறிக்கப்பட்டது.

"பரமன்காண் பரமேட்டி ஆயி னான்காண்" என்பதில், இறைவனே வேள்விகள் எல்லாவற்றினும் மேலான வேள்வியாய் உள்ளான்; ஆதலின் அவனையே வழிபடுங்கள் என்று அருளிச் செய்யப்பட்டது. (இட்டி-வேள்வி.)

"புத்தன் மறவா தோடி—எறிசல்லி புதுமலர்கள் ஆக்கி னான்காண்" எனச் சாக்கிய நாயனார் திருத்தொண்டின் பெருமை அறிவுறுத்தப்பட்டது.

"மானேறு கரமுடைய வரதர் போலும்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகமும், "போலும்" என்னும் முடிபுடைய தொடர்களால் இறைவன் பெருமையை இனிது விரித்தருள்வது. அதனுள்,

"கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை அவனாற்கொல் வித்தார் போலும்"

என விநாயகரது தோற்றம் முதலிய வரலாறுகள் குறித்தருளப்பட்டன.

சோழநாட்டுப் பிற தலங்களை வணங்கல்

திருவீழிமிழலையுள் எழுந்தருளியிருந்த நாயனார் சோழநாட்டில் உள்ள ஏனைய தலங்களிலும் சென்று பெருமானை வழங்கவேண்டும் என்னும் அவாவினால், அத்தலத்தினின்றும் புறப்பட்டு, அம்மை பசுவாகியிருந்து வழிபட அருள்புரிந்த திருவாவடுதுறையை அடைந்தார்.

திருவாவடுதுறையை மீண்டும் வணங்கல்

'நாயனார், முன்னமே சீகாழியில் ஆளுடைய பிள்ளையாருடன் இருந்து விடைபெற்றுக் காவிரியின் இருகரையிலும் உள்ள தலங்களை வணங்கி வந்தபொழுது, திருவாவடுதுறையை வணங்கித் திருப்பதிகங்கள் பல அருளிச்செய்தார்' என்பது மேலே சொல்லப்பட்டது. மீளவும் இதுபோழ்து நாயனார் அத்தலத்தை யடைந்து வணங்கி, திருநேரிசைத் திருப்பதிகம் அருளிச்செய்தார். அதன் முதல் திருப்பாடலிலே ஆவடுதுறைப் பெருமான் ஆளுடைய பிள்ளையாருக்கு ஆயிரம் பொன் பொதிந்த பொற்கிழி அருளிய அருட்செயலைச் சிறப்பித்துப் போற்றினர். அத்திருப்பாடல்.

"மாயிரு ஞால மெல்லாம் மலரடி
வணங்கும் போலும்!
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை
வைப்பார் போலும்!
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல
ஊரர்க் கம்பொன்
ஆயிரம் அளிப்பர் போலும் ஆவடு
துறைய னாரே"

என்பது. இறைவன், பிள்ளையார்க்கு இவ்வாறு அருள்புரிந்த செயலை அவரது வரலாற்றுட் காணலாம். அத்திருப்பதிகத்துள் மற்றும் பல அரியபொருள்கள் அருளப்பட்டுள்ளன; அவை வருமாறு:

"அடைந்தவர்க் கன்பர் போலும் ஆவடு
துறைய னாரே"

"உற்றநோய் தீர்ப்பர் போலும் உறுதுணை
யாவர் போலும்
... ...
கற்றவர் பரவி யேத்தக் கலந்துலந்
தலந்து பாடும்
அற்றவர்க் கன்பர் போலும் ஆவடு
துறைய னாரே"

"தொழுதெழுந் தாடிப்பாடித் தோத்திரம்
பலவும் சொல்லி
அழுமவர்க் கன்பர் போலும் ஆவடு
துறைய னாரே"

"........................வேட்கையாற்
பரவுந் தொண்டர்
அடிமையை அளப்பர் போலும் ஆவடு
துறைய னாரே"

"துக்கமா மூடர் தம்மைத் துயரிலே
வீழ்ப்பர் போலும்"

"அடைபவர் இடர்கள் தீர்க்கும் ஆவடு
துறைய னாரே"

"ஏத்துவார் இடர்கள் தீர இன்பங்கள்
கொடுப்பர் போலும்"

திருப்பழையாறையில் திருக்கோயிலை வெளிப்படுத்தல்

நாயனார், திருவாவடுதுறையில் சிலநாள் தங்கியிருந்து,அப்பால் பிறதலங்களை வணங்க விரும்பிப் புறப்பட்டு, அங்ஙனமே வணங்கிக் கொண்டு திருப்பழையாறையை அடைந்து, 'வடதளி' என்னும் திருக்கோயில் இருக்கு மிடத்தை நோக்கிச் சென்று, சிறிது தூரத்தி லேயே அதன்கண் உள்ள பெருமானை நினைந்து கைகூப்பித் தொழுதார். ஆனால், அச் சிவாலயம் அப்பொழுது சிவாலயமாய் இல்லாமல் மறைத்து, சமணக் கடவுள் கோயி லாக மாற்றப்பட்டிருந்தது.

நாயனார் முன்பு திருவாவடுதுறை முத லிய தலங்கட்குச் சென்று வணங்கிய பொழுது, திருப்பழையாறை சென்று வணங்கியுள்ளார். அப்பொழுது வடதளிக் கோயில் மறைத்து மாற்றப்படாமல் இயற்கை நிலையில் இருந்தது. அதனால், நாயனார் தொலைவிலேயே கைகூப்பித் தொழுதார்.

நாயனார் கைகுவித்தலைக் கண்ட அடி யவர் சிலர், "இஃது இப்பொழுது பெருமான் திருக்கோயிலாய் இல்லை; அதைச் சமணர்கள் மறைத்து, தங்கள் கடவுட்குரிய கோயி லாக்கி, 'முன்பு தொட்டே சமணக் கோயி லாய்த்தான் இருக்கிறது' என்று சொல்லி வருகிறார்கள்" என விண்ணப்பித்தனர். அதனைக் கேட்ட நாயனார், சமணர்களது நேர்மையற்ற கொடுஞ்செயலையும், அச்ச மின்மையையுங் கேட்டு, திருவுள்ளம் மிகக் கொதித்தவராய், அக்கோயிலுக்கு அண்மை யிலேயே ஒருபக்கத்தில், தம் பிரானரது திருவடிகளை நினைத்துச் 'சமணர்களது வஞ் சனைச் செயலையும் நீர் பொறுத்துக்கொண் டிருப்பதோ! இப்பொழுதே அவர்கள் மறைத்து வைத்துள்ள மறைப்பையும் நீக்கி, அவர்களது வலிமையையும் அழித்தருள வேண்டும்' என்று விண்ணப்பித்துக்கொண்டு, எழுந்தருளியிருந்தார்.

ஆயினும். இறைவன் உடனே அவர் வேண்டியவாறு செய்தருளவில்லை. அதனால், நாயனார் 'எங்ஙனமாயினும், அடியேன், நுமது மறைக்கப்பட்ட திருவடிவத்தைக் கண்ணாற்கண்டு வணங்கியல்லது, இவ்விடத்தைவிட்டுச் செல்ல மாட்டேன்' என்று சூள்மொழிந்து, திருவமுது கொள்ளாமல் அங்கே எழுந்தருளியிருந்தார்.

அப்பரது திருவுள்ளத்து உறைப்பின் மிகுதி நம்மனோராற் சொல்லுதற்கு எளிதோ? அப்பொழுது இருந்த நிலையைச் சிறிது மனக்கண்முன் கொண்டு வருவோமா யின், அவரது பெருமை தெற்றெனப் புலப் படுவதாகும்.

பழையாறையில் பழைமையாய் இருந்த சிவாலயம் ஒன்றை மறைத்து, அதனைச் சமணக் கோயிலாக அங்கிருந்த சமணர்கள் செய்துவிட்டார்கள் என்றால், அதனைக் கண் ணாற் கண்டுகொண்டிருந்தும் சிவனடியார்கள் யாதும் செய்ய இயலாது வாளா இருந்தார்கள் என்றால்—அவ்வூரிலும், சுற்றுப்புறங்களி லும் சமணருக்கு எவ்வளவு துணைவலிமை இருந்திருத்தல் வேண்டும்? அந்நிலையில் திரு நீறும், கண்டிகையும், கந்தை உடையும், உழவாரப் படையும் அன்றி மற்றொன்றை யும் இல்லாதவராக உலகத்தவரால் எண்ணப் பட்ட நாயனார், ஒன்று இரண்டு நாட்களில் அந்நிலையை அறவே மாற்றி, வேறொரு சூழ் நிலையை அப்பகுதியில் உண்டாக்க உறுதி கொண்டார் எனின், அவரது உள்ளத்து உறுதியை நாம் என்னென்பது?

இனி, தாம் கொண்ட உறுதியை நிறை வேற்றுதற்கு யாரைத் துணை நாடினார்? பெருஞ்செல்வரையா? அல்லது அரசனையா? உண்மை வல்லாளனாகிய இறைவனையே யன்றோ நாடினார்! இங்ஙனம் நாடுதற்கு இறைவனது திருவருளில் அவருக்கு எத் துணைத் தெளிவு இருந்திருத்தல் வேண்டும்.

இன்னோரன்ன முறையற்ற செயலை நீக்குதற்கு இக்காலத்துச் சிலர், மக்களுள்

தலைவராய சிலரிடத்து முறையிட்டு, உண்ணா நோன்பை மேற்கொள்ளுகின்றனர். 'உண்ணா நோன்பினால் இவர் உயிர்நீத் தொழிவாரே' என இரங்கியும், 'இவர் உயிர்நீப்பின் அதனால், நமக்குப் பலரது பகையும், பழியும், பாவமும் உளவாகுமே' என அஞ்சியும் அத் தலைவர்கள் அம் முறையற்ற செயலைக் கைவிடுவர் என்பது அவர்கள் துணிபு. 'ஆனால், அத் துணிபுடையவர், அம்முறையற்ற செயலை நீக்கும்படி இறைவனிடம் விண்ணப்பித்து, உண்ணாநோன்பினை மேற்கொண்டிருக்கத் துணிவரோ' என நாம் எண்ணிப் பார்த்தல்வேண்டும். 'துணியார்' என்பது திண்ணம். ஏனெனில், 'உண்ணாநோன்பு மக்கள் உள்ளத்திற் படும் அளவினும் பன்மடங்கு பெரிய அளவில் இறைவன் திருவுள்ளத்திற் படும்' என்பதனையும், 'மக்களைப் பார்க்கிலும் இறைவன் மிகப் பெருங்கருணையாளன்' என்பதனையும் அவர் அறியமாட்டார். ஆதலின், அவரது சூள் சிலவிடத்து நிரம்புதலும், பலவிடத்து நிரம்பா தொழிதலும் நிகழ்வனவாம். ஆகவே, அப்பரது அளப்பரும் பெருமையை யாரே அறிய வல்லார்!

நாயனாரது மனஉறுதியை நோக்கிய வடதளி இறைவர், அவர் தம்மை வெளிப்படையாகக் கண்டு வணங்கித் தமது உறுதியை முடித்துத் திருவமுதுகொள்ளுதற் பொருட்டு விரைந்து அரசன் கனவில் தோன்றி, உறுதியான கட்டளை ஒன்றை இட்டார். அஃதாவது, 'மெய்யறிவில்லாத சமணர்கள் நம்மைப் பழையாறை வடதளியில் மறைத்து, மேலே தங்கள் கோயிலை எடுத்தமையால் நாம் வெளியே காணப்படாது, உள்ளே மறைந்திருக்கின்றோம்; நம்மை வணங்குதற்கு வந்து வருந்தியிருக்கின்ற திருநாவுக்கரசு, தன் விருப்பப்படி நம்மை வெளியே கண்டு வழிபடுவதற்குத் தடை இல்லாதபடி சமணர்களையும் அழித்து, நம்மையும் வெளிப்படுத்துக' என்பதாம். இவ்வாறு அருளிச்செய்து, கோயில் உள்ள இடத்திற்கும் அடையாளங்களைக் கூறி மறைந்தருளினார்.

அதனை உணர்ந்த அரசன் விழித்தெழுந்து, பெருமான் கனவில் தோன்றியருளியதை நினைந்து, கைகளைத் தலைமேற் குவித்து வணங்கி, இவ்வதிசயச் செயலை அமைச்சர்களுக்கும் அறிவித்து, இறைவன் அருளிய அடையாளத்தின்படியே சென்று, திருவமுது செய்யாது, இறைவன் திருவருளையே எதிர்நோக்கியிருக்கும் திருநாவுக்கரசு நாயனாரைக் கண்டு, சமணர்கள் செய்துள்ள வஞ்சனைச் செயலையும் நன்குணர்ந்து, தனது நாட்டில் இன்னதொரு கொடுஞ்செயல் நடைபெற்றமையைப் பொறுத்தருளும்படி நாயனாரை வணங்கி, அங்கு வாழ்ந்திருந்த சமணர்கள் அனைவரையும் யானைகளை விடுத்து மிதிப்பிக்குமாறு ஏவலர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அங்ஙனமே செய்ய, அங்கு வளர்ந்து இருள்சூழ மூடி இருந்த சமணக்காடு அடியோடு தொலைந்து, அவ்விடம் இருள்நீங்கி, வெளியாயிற்று.

அங்கு இருந்த சமண இல்லங்கள் ஆயிரமும் அழிந்தொழிந்த பின்னர், வடதளிப் பெருமானை மறைப்பு நீக்கிக் காணச் செய்த தனோடு, திருக்கோயிலை நன்கு புதுக்கி, அன்றுட வழிபாடு, சிறப்பு வழிபாடு முதலியவற்றிற்கெல்லாம் நிபந்தங்கள் ஏற்பாடு செய்துவிட்டு வந்து, பொருளரசன், அருளரசரை வணங்கித் தனது கடமையைத் தான் முடித்து வந்ததை விண்ணப்பம் செய்தான். நாவுக்கரசர் திருவுளம் மகிழ்ந்து, அரசனாற் புதுக்கப்பட்ட வடதளித் திருக்கோயிலினுள்ளே புகுந்து, வடதளிப் பெருமானை வணங்கி, 'தலைமயிரைப் பறித்து வாழும் சாதியினராகிய சமணர்கள் மறைத்தாலும், தமக்கு ஒரு நிலைக்களம் இல்லாது வீழும் அவர்களது ஆற்றலால் எம்பெருமானை மறைக்க இயலுமோ' என்று கூறும், "தலையெ லாமபறிக் குஞ்சமண் கையர்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகத்தினைப் பாடியருளி, பெருமானது திருவருள் இன்பத்தில் திளைத்து, வெளிப்போந்து, திருமடம் ஒன்றில் திருவமுதுகொண்டு அமர்ந்தருளினார். அத்திருப்பதிகத்துள் மேற்கூறிய வரலாறுகள் அனைத்தும் நன்கு அமைந்திருத்தலைக் காணலாம். அவற்றுட் சில பகுதிகள் வருமாறு:

"மூக்கி னால்முரன் றோதிஅக் குண்டிகை
தூக்கி னார்குலந் தூரறுத் தேதனக்கு
ஆக்கி னான்அணி ஆறை வடதளி"

இதன்கண், "குண்டிகை தூக்கினார் குலம் தூர் அறுத்தான்" என்று அருளியதனையே,

சேக்கிழார், "தொக்க அமணர் தூரறுத்தான்" என்று அருளிச்செய்தார். (தூர்-வேர்.)

"நீதி யைக்கெட நின்றம ணேயுனும்
சாதி யைக்கெடு மாசெய்த சங்கரன்"

இப்பகுதியுடன், மூதற்றிருப் பாடலில் உள்ள, "தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருண்ணியை னுன்மறைத் தான்மறைக் கொண்ணுமே" என்னும் பகுதியையே சேக்கிழார்,

"தலையின் மயிரைப் பறித்துண்ணுஞ் சாதி
யமணர் மறைத்தாலும்
நிலையி லாதார் நிலைமையினுல் மறைக்க
ஒண்ணு மோ?என்னும்
விலையில் வாய்மைக்
குறுந்தொகைகள் விளம்பி"

என்றருளினர்.

"வாயி ருந்தமி ழேபடித் தாளுறு
ஆயி ரஞ்சம ணும்அழி வாக்கினன்"

இதனையே சேக்கிழார்,

"ஆனை இனத்தில் துகைப்புண்ட வமணு
யிரமும் மாய்ந்ததற்பின்"

என்றருளினர். இங்ஙனம், திருநாவுக்கரசு நாயனர் தமது உள்ளத்துறுதியினல் தமது எண்ணத்தை முடித்தருளிய பெருமைபற்றி' முன்னரே, நாயனரை,

"எண்ணம் முடிக்கும் வாசீசர்
இருந்தார் அமுது செய்யாதே"

என்றருளிச் செய்தார்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்னும் பொதுமறையும் இங்கு நினைவு கூரற் பாலது.

இங்ஙனம் சமணர்களை அழிப்பித்தமை கொடுஞ் செயல்போலத் தோன்றும். ஒருவர் முன்பு இழைத்த கொடுமையின் பயனைப் பின்னர் அனுபவிக்கும்பொழுது, அவ்வனுபவத்தை மட்டும் காண்கின்றவர்கட்கு அவர் மீது இரக்கம் உண்டாதல் இயல்பே. ஆயினும், அங்ஙனம் இரங்குகின்றவர்களே, அவர்கள் முன்பு செய்த கொடுஞ்செயலைக் கண்டிருப்பார்களாயின், அவர்கள் மீது பெருஞ் சீற்றங்கொள்வர் என்பது உறுதி.

திருவருள் நாடாகிய நம் நாட்டில் உலகியலைவிடச் சமயமே மக்கட்கு முதன்மை வாய்ந்தது. அத்துறையில் புகுந்து அடாதன செய்தல் மக்கள் இனத்தையே அழிப்பதாகும். ஏனெனில், சமயத்தைக் காக்கத் தம் உயிரையுங் கொடுக்க முன்வருபவர் நம் நாட்டவர். இஃது அக்கால நிலையில், ஒரு சமயத்தார்க்கு உரிய கோயிலை அடியோடு மூடிவிட்டு, அதன்மேலே தங்கள் சமயக் கோயிலை மற்றொரு சமயத்தார் எழுப்பிவிட்டனர் என்றால், அவர்கள் அச்சமயத்தினருக்கு மற்றும் எப்படிப்பட்ட தீங்குகளை இடையறாது இழைத்திருத்தல் கூடும் என்பது 'எண்ணிப்பார்க்கத் தக்கது. இங்ஙனம் தீங்கு இழைப்பவர்கள் எவ்வாற்றாலேனும் திருந்தி ஒற்றுமைப்பட்டு வாழக்கூடியவர்களாய் இருந்தார்களா என்பதையும் நோக்குதல் வேண்டும். ஒருநாட்டில் மக்கள் இனத்தில் இப்படிப்பட்ட ஒரு குழு இருந்தது என்றால், அக்குழுவினை இங்ஙனம் ஒறுத்தொழியாது யாது செய்தல் இயலும்! எனவே, தீயவை தீய பயத்தலால் விளைந்த விளைவே அஃதென்று அமைதலே நாம் செயற்பாலம் என்க.

சோளசிங்கபுரம்: லட்சுமிநரசிம்மசுவாமி கோயிலில் திருப்பவித்ரோற்சவம் 31—8—62 முதல் 4—9—62 வரை நடைபெற்றது.

திண்டுக்கல்: வெள்ளை விநாயகர் கோயிலில் விநாயகசதுர்த்தி விழா 24—8—62 முதல் 4—9—62 வரை நடைபெற்றது.

திருப்புகலூர்: வேளாக்குறிச்சி ஆதீனத்தில் மகா குருபூஜை மகோற்சவம் 28—8—62 ல் நடைபெற்றது.

திருப்புன்கூர்: சிவலோகநாதர் ஆலயத்திலுள்ள திருக்குளம் வெட்டிய விநாயகர் உற்சவம் 25—8—62 முதல் 4—9—62 வரை நடைபெற்றது.

இராமநாதபுரம்: சொக்கநாத சுவாமி கோயிலில் ஸ்ரீமத் பாகவத சொற்பொழிவு திரு. வங்கிபுரம் கிருஷ்ணமாச்சாரியார் சுவாமி அவர்களால் 5—9—62 முதல் 3-10-62 வரை தினம் மாலை 6 மணி முதல் 8 மணி வரை நடைபெறும்.

சிவஞானபோதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., காஞ்சிபுரம்.

(முன்தொடர்ச்சி)

௪ ஆம் சூத். முதல் அதி.

ஆன்மாவாவது மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அந்தக் கரணங்களுள் ஒன்றன்று, இவற்றின் வேறே என்பது ஏதுக்கள் காட்டி விளக்கப்பட்டது.

ஒரு பொருளை எதிரிட்டு உணரும்போது அவ்வுணர்வில் இரு கூறுகள் உள்ளன: ஒன்று உணரும் தன்னைப் பற்றியது, மற்றையது உணரப்படும் பொருளைப் பற்றியது. (The subjective and the objective aspects of the consciousness) நான்குமே கருவிகளாயினும், மனமும் புத்தியும் காணப்படும் பொருளின் இயல்பைப் பற்றி ஐயுற்று நிச்சயிப்பன ஆதலின், அவை கருவிக் காரகம் எனப்படும்; அகங்காரமும், சித்தமும் அங்ஙனம் அவை பற்றி, நிச்சயித்தற்கு வேண்டிய ஊக்கத்தையும், பழைய அநுபவத்தின் பயனாகிய நினைவையும் (Past memories) உடனிருந்து தருவனவாய், பல்கால் எழுந்திருந்தும், அங்கு உற்றது சிந்தித்தும் உதவுதலின் வினைமுதற் காரகம் எனப்படும்.

இனி, அந்தக் கரணங்கள் அறிவில் பொருள்கள் ஆகலின், அவை தாமே புறப் பொருளை அறிவித்தல் கூடாமையின், அறிவிக்கும் சத்தி வேறு உண்டு என ஆகமங்கள் கூறுகின்றன. அச்சத்தியே நாத சத்தி, வாக்குச் சத்தி, ஞாபக சத்தி (Energy of articulation or ideation) என்னும் பெயர்களால் வழங்கப்படுகின்றது. அது சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என நால்வகைப் படும். சூக்குமை, நாதம் எனப் பெயர் பெற்று, ஆன்மாவின் பொருள் உணர்வுக்கு அடி நிலைக்காரணமாயிருந்து புருடனைச் செலுத்தும்; பைசந்தி, பின்னர் மத்திமைத் தானத்துப் பலவகைப்பட்ட எழுத்துக்களாகப் பிரிவுபடத் தோன்றும் முறைமையினை மிகவும் நுட்பவடிவில் தன்மாட்டு அடங்கக் கொண்டு, நிருவிகற்பவுணர்வுக்கு (இஃது ஒன்று உள்ளது என்னும் அளவில் பொதுப் பட உணரும் உணர்வு) ஏதுவாவது; இது விந்து எனப்பெயர் பெற்றுச் சித்தத்தைச் செலுத்தும்.

இனி, மத்திமை என்பது மேற்கூறிய பைசந்தியின் காரியமாய், பலவகைப்பட்ட எழுத்துக்கள் பிரிந்து தோன்றும் வாக்கிய வடிவில் அகத்தே நிகழ்வது. இதனை உன்னல் எனக் கூறலாம்; உன்னியதைச் செப்புவதே வைகரி எனப்படும். உன்னலும் செப்பலும் ஒன்றையொன்று சார்ந்து நிகழ்பவை (Impression and expression are inter dependent). மொழியினால் உண்டாவதே சவிகற்பவுணர்வு; அஃதாவது புறப்பொருள் ஒவ்வொன்றனையும் இஃது இதனின் வேறு என வேறுபடுத்து அறியும் அறிவு (The faculty of discrimination); வேறுபடுத்துணர்வதாகிய சவிகற்பவுணர்வு பொருண்மை உணர்வால் உண்டாவது (Discrimination depends upon conceptual knowlege); பொருண்மையுணர்வு மொழியினால் உண்டாகி, மொழிவடிவில் நிகழ்வது Conceptual knowledge depends (on and is of the form of language); ஆதலினால், மேலே குறிப்பிட்ட வைகரி என்னும் வாக்கைப் பேச்சு ரூபம் அல்லது எழுத்து ரூபம் (Expression) ஆகும் என்பது உணரப்படும். இதனைச் செப்பல் எனக் குறிக்கலாம். இனி, உன்னல் இன்றிச் செப்பல் நிகழாது. (There is no expression without impression); ஆகவே, நாம் ஒரு கருத்தை வெளிப்படுத்தும் போது, அக்கருத்து, முன்னர் உன்னல் நிலையில் இருந்தே பின்னர்ப் பிறர் கேட்கும்படி மொழிவடிவில் வெளிப்படும்; படவே, அவ்வுன்னலும் மொழி வடிவில் நிகழ்வதேயாம். இதனை, உள்நோக்கால் உணர்ந்து கொள்ளவேண்டும். (It must be understood that we think in terms of language) உன்னல் ரூபமொழியே (Language in the form of thinking) மத்திமை எனப்படும்.

இம் மத்திமை வாக்கு மனம், புத்தி, அகங்காரங்களைச் செலுத்தி நின்று ஒருவனுக்குப் புறப்பொருளைப் பற்றிய சவிகற்ப உணர்வைத் தோற்றுவிக்கும். அது மகரகலை,

உகரகலை, அகரகலை என மூன்றாய்ப் பிரிந்து நின்று, முறையே மனம், புத்தி, அகங்காரங்களைச் செலுத்தி அவ்வவற்றான் ஆகும் உணர்வுகளை ஆன்மாவுக்குத்தோற்றுவிக்கும். வைகரி வாக்காவது மத்திமை வாக்கே பிராண வாயுவைச் சார்ந்து நெஞ்சு, கழுத்து, அண்ணம், பல், இதழ் முதலிய உறுப்புக்களைப் பற்றி வெவ்வேறு எழுத்தொலியாய் வெளிவருதலின், அது நிகழும் போதும் மேற் கூறிய கலைகளே, அந்தக்கரணங்களைச் செலுத்தும் எனக் கொள்ளப்படும்.

இங்ஙனம் நால்வகை வாக்குகளை ஐந்தாகப் பகுத்து உணரும்போது, அவை சூக்கும ஐந்தெழுத்து எனவும், வியட்டிப் பிரணவம் எனவும் குறிக்கப்படும்; அவற்றைச் சேர்த்து உணரும்போது ஓம் எனப்படும் சமட்டிப் பிரணவமாம். இனி, நாத முதலாக ஓதிய ஐந்து கலைகளும் சுத்த மாயையின் விருத்தியாகிய அறிவில் பொருள்களே ஆகலின், அவற்றைச் செலுத்தும் காரணக் கடவுளர் உளர். அவர் தம்மை, அகரத்திற்கு அயனும், உகரத்திற்கு மாலும், மகரத்திற்குப் பிரமனும், விந்துவிற்கு மகேசனும், நாதத்திற்குச் சதாசிவனும் அதி தெய்வம் எனக்கொள்க. ஆன்மாக்களுக்கு இம்முத்திறத்து ஐந்துபொருள்களால் மூவகைக் காட்சியினையும் கடலலைபோலப் புதிது புதிதாகவும், ஒன்றன்பின் ஒன்றாகவும் முறைமையின் நிகழ்த்தி வரும் முதல்வன் செயல் அதிசூக்கும பஞ்சகிருத்தியம் எனப்படும்.

"அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகாரம் மனம் சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாதம் உளவடிவாம் நாடிற் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று"

"எண்ணில(வு) ஓங்காரத்(து) ஈசர் சதாசிவ [மாம்
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணின்
பகர்அயன்மா லோடு பரமன்அதி தெய்வம்
அகரவுக ரம்மகரத் தாம்"

என்னும் உதாரணச் செய்யுட்கள் மேலே விளக்கிய கருத்துக்களைக் கொண்டவை. பகாதிவற்றை நாடிற்பிரணவமாம் எனவும், அதிதெய்வம் கண்ணின் எனவும் முடிக்க. எண் நிலவு—மானதக்காட்சியில் நிலவுகின்ற.

குறிப்பு:— இக்காலத்து நமக்குக் கிடைக்கும் மிருகேந்திரம், பௌஷ்கரம், சித்தாந்த சாராவளி, அட்டப் பிரகரணம் என்னும் வடநூல்களில் அந்தக்கரணங்கள் மூன்று, அவை மனம், புத்தி, அகங்காரம் எனவே உள்ளது; ஆனால் தமிழ் நூல்களில் தேவாரம், பெரிய புராணம் என்பவை உட்பட, அந்தக்கரணங்கள் நான்கு என்பதே மரபாக உள்ளது. ஆதலால், ஞானப் பிரகாசரும், சிவஞான சுவாமிகளும் இருநூல்களுக்கும் பொருந்த உரைக்கும் வகையில் சித்தம் என்பது மனத்தின் ஓர் அவத்தை எனவும், அதன் தொழில், நிருவிகற்பக் காட்சியின் பின் "இது யாதாகற்பாற்று" என்னும் வடிவில் நிகழ்வதாகிய சிந்தனையாம் எனவும் கொண்டனர். "சிந்தை நினைவு ஐயம் வந்து தரும் மனம் ஒழிய வகுப்பொணுதே" என்னும் சிவப்பிரகாசப் பகுதியே சிவஞான சுவாமிகள் துணிவிற்கு முதன்மையான காரணமாக இருந்துள்ளது.

சிவஞான சித்தியில், மூலப்பகுதி அதிகாரப்பட்டு வருகையில் "சித்தமாம் அவ்விடத்தம் சிந்தனையதுவும் செய்யும்" என ஒரு தொடர் வருகின்றது; அன்றியும், உண்மை விளக்கத்தில் "அந்தக்கரணம் அடைவே உரைப்பக்கேள்—அந்த மனம் புத்தியுடன் ஆங்காரம்— சிந்தையிவை— பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்தங்(கு)— உற்றது சிந்திக்கும் உணர்" என அந்தக்கரணங்களின் பெயரும், முறையும், தொழிலும் உணர்த்தப்படுகின்றன.

சிவஞான சுவாமிகள் தமது துணிவோடு முரணுதிருத்தற் பொருட்டு, சித்தியாரில் உள்ள தொடர்க்குக் "குணதத்துவத்திற்குக் காரணம் எனச் சித்திக்கப்பட்டதாகிய மூலப் பகுதி, அக்குணதத்துவத்தைத் தோற்றுவித்தலேயன்றி, விபரீத வுணர்வுடையதாகிய அவிச்சையினையும் தோற்றுவிக்கும்" எனவுரைத்து, பிறர் மதம் மறுத்து, ஈண்டுச் சிந்தனை யென்றது, ஏற்புழிக் கோடலான் விபரீத வுணர்வின் மேற்றாயிற்று என்னும் குறிப்பும் எழுதினர்.

உண்மை விளக்கச் செய்யுளில் கூறியுள்ள முறையைப்பற்றி, மாபாடியத்தில், செய்யுளாகலின் முறை பிறழவைத்தார் என அமைத்தார்.

ஆயினும், உண்மை விளக்கத்தில் அடைவே உரைப்பக்கேள் எனத்தொடங்கி உரைத்தலின், முறைபிறழ வைத்ததாகக்

கொள்வது பொருத்தம் அன்று; அகங்காரத்தின் தொழில், புத்தியின் தொழிலுக்கு முன்னரும் பின்னரும் நிகழும் என்னும் கருத்தால் "பல்கால் எழுந்திருந்து" என்றமையின் அதுபற்றி நிகழ்த்தும் தடைக்கும் இடம் இல்லை; மேலும், சிவஞான போதத்தும் சித்தியினும், நான்காஞ் சூத்திரத்தில், உண்மை விளக்கத்திற் போலவே பெயரும் முறையும் கூறப்பட்டுள்ளன. 'சித்தமாம் அவ்வியத்தம்' என்னுந் தொடரைச் சிவாக்கிர யோகியர் சித்தம் பற்றியதாகவே கொண்டு அவ்வியத்தம் (மூலப் பகுதி), குணம், சித்தம் என்னும் மூன்றும் மூலப்பகுதியின் அவதரப் பெயர்கள் எனக்குறித்து, சிந்தித்தல் என்னும் செயலை அவ்வியத்தத்திற்கு உரியதாகக் கொண்டு உரைத்துள்ளார்.

பின்வரும் காரணங்களால் சிவாக்கிரர் கொண்டபடி அந்தக்கரணம் நான்கனுள் சித்தம் என்று சிவஞான போதம், சித்தி, உண்மை விளக்கங்களில் குறிக்கப்படுவதை அவ்வியத்தம் எனவே கொண்டு அதனை இக்காலத்து அறிவுக்கும் உணர்வுக்கும் மூலமாகக் கொள்ளப்படும் அடிமனம் (The subconscious state of mind which is the source of feelings & intellect) என்பதாகக் கொள்வது பொருத்தம் எனக் கருதுகிறேன்.

காரணங்கள்:—

(1) இவ்வதிகரணத்தில், அகர உகர மகரங்களுக்கு மூலமாகிய விந்துகலை சித்தத்தைச் செலுத்தும் என்றலும், விந்துவாவது பைசந்தி ரூபமாய்ச் சிந்தையைப் பற்றி நின்று நிருவிகற்பவுணர்வுக்கு ஏதுவாவது எனக் கொள்ளப்படுவதும்.

(2) கனவு நிலையில் மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் நான்கும் தொழிற்படும் எனக்கொண்டு, அதற்குக் கீழ் உள்ள உறக்க நிலையில் சித்தம் மட்டும் (பிராண வாயுவோடு) தொழிற்படும் என நூல்களுட் கொள்ளப்படுதல்.

(3) ஞானமிருத நூலுடையார் பஞ்சாவத்தையியல் கூறுமிடத்து அந்தக்கரண அமைச்சர் எனப் பொதுப்பட முதற்கண் எடுத்துக் கொண்டு உறக்கநிலை கூறவரும் போது ஆண்டு நிற்கும் சித்தத்தை மந்திரத் தலைவன் (Chief minister) எனக் கூறல்.

(4) "புந்தியை மனமதென்றும், மனமது புந்தியென்றும், சிந்தையைச் சிவனென்றும் சிவனைச் சிந்தையென்றும், முந்தனை ஆன்மாவென்றும் ஆன்மாவை முந்தன் என்றும் வந்திடும்"—என்னும் சிவஞானசித்தியில், சிந்தையைச் சிவனுக்கு அடுத்து உள்ளதாக வைத்துக் கூறுதல்.

(5) சுந்தரர் தில்லைக் கூத்தப்பெருமானைக் கண்டு மாறிலா மகிழ்ச்சியில் மலரும் அநுபவமாகிய தன் வேதனைக் காட்சியில் மனம் புத்தி அகங்காரம் மூன்றும் தம் விருத்தி அடங்கியிருப்பச் சித்தவிருத்தி மட்டும் இருந்தது என்னும் கருத்தால், சேக்கிழார் பெருமான் "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும்-சிந்தையே ஆக" என அருளிச்செய்தல் முதலியவை.

இனி, ஞானமிருதத்தில் "சிந்தை மாத்திரம் கனவலின் நனவின்—தந்துரை சுழுத்தி இன்று,"—சுழுத்தியில் சிந்தைமட்டும் இருத்தலின், ஆண்டு நிகழ்வதைக் கருதி உணர்தல் கூடுமேயன்றி, மன முதலியனவும் உள்ள கனவில் நிகழ்ந்தவற்றைப் பின் நனவின்கண் தந்து உரைத்தல்போல உரைக்கவொண்ணாது—எனக் கூறுதலின், சிந்தையின்கண் நிகழும் உணர்வு, அது பின்னர் மத்திமை வடிவில் மனம் முதலியவற்றான் வெளிப்பட அப்பொழுது வகுத்துணரப் படுவதன்றி ஏனைய மூன்றன் செயலை இன்னது இன்னது என்று செப்பிவந்தாற்போலச் செப்பொணாது என்பதே "சிந்தை நினைவு ஐயம் வந்து தரும் மனமொழிய வருப்போனுதே" என்னும் சிவப் பிரகாசச் செய்யுளின் கருத்து எனக்கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது. இது போன்ற கருத்துக்கள் சாத்திரம் பயில்வோரால் மனம் ஒருங்கி ஆராய்ந்து முடிக்கத் தக்கவை.

மெய்கண்ட நூல்களுள் கூறப்பட்டுள்ள பல நுட்பங்கள் இக்காலத்து நாம் காணும் ஆகமங்களுள்ளும் அவற்றின் வழி நூல்களுள்ளும் இல்லை; அதுபற்றி மெய்கண்ட நூல்களில் தெளிய உணர்த்தப்பட்டவற்றை ஆகமங்களுக்கு ஏற்ப உரைத்தல் "தேரான்தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்" என்றாற்போல் ஆகிவிடலாம். எடுத்துக்காட்டாக, தன் வேதனைக் காட்சிபற்றி ஆகமங்களுள் கூறப்படவில்லை என்பதைச் சிவாக்கிரர் உரையால் காணலாம்.

அதிகரணம் முற்றிற்று.

தஞ்சாவூர் இராச ராசேச்சரக் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.]

தஞ்சாவூரின் தொன்மை

தஞ்சாவூர் ஜில்லாவில் தஞ்சாவூர் என்னும் பெயருள்ள ஊர்கள் இரண்டு இருக்கின்றன. அவைகளுள் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல்நாட்டுத் தஞ்சாவூர் என்பது ஒன்று. பாண்டி குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் என்பது மற்றொன்று. இவைகளுள் முன்னது அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவராகிய செருத்துணைநாயனார் பிறந்த பதி. அது நன்னிலந் தாலூகாவில் திருமருகலுக்கு அருகில் உள்ளது. பின்னதுதான் இராசராசேச்சரம் நிலைபெற்றுள்ள ஊர். இத் தஞ்சாவூர் தேவார வைப்புத்தலங்களுள் ஒன்றாகும். இதை அப்பர் பெருமான் திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் எட்டாம் பாசுரத்தில் "தஞ்சைத் தளிக்குளத்தார்" என்று வைத்துப் பாடியுள்ளார். இத்தஞ்சைத் தளிக்குளம் தஞ்சை இராசராசேச்சரம் நிலைபெற்றுள்ள கோயிலுக்கு அண்மையில் உள்ள சிவகங்கைக் குளத்தில் இருக்கின்றது. அதில் தண்ணீர் குறைந்துள்ள காலங்களில் சிவலிங்கம், நந்தி இவைகளை இன்றும் காணலாம். எனவே தஞ்சைத் தளிக்குளத்தை அப்பர் பெருமான் பாடியிருப்பதால் அவரது காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்தது இத் தஞ்சாவூர். இது அப்பர் பெருமான் காலத்திலேயே தஞ்சை என்று மரூஉ மொழியாக வந்துள்ளதும் ஈண்டு அறிதற்குரியது.

தஞ்சையைப் பற்றிய பிற குறிப்பு

பிற்காலச் சோழமன்னர்களில் முதல்வனாகிய விசயாலய சோழன் தஞ்சாவூரைப் பிடித்துக்கொண்டு அதைத் தலைநகராக்கிக் கொண்டான். இச்செய்தி திருவாலங்காட்டுச் செப்பேட்டிலும் (S. I. I. Vol. III No. 205) தென்னார்க்காடு ஜில்லா திருக்கோவலூர்த் தாலூகா வீரசோழபுரத்துக் கல்வெட்டிலும் குறிக்கப் பெற்றுள்ளது. இத்தஞ்சையே விசயாலயன் காலம் முதல், முதலாம் இராசராசன் காலம்முடிய, சோழர்களுக்குத் தலைநகராய் விளங்கியிருந்தது. "உடையார்ஸ்ரீ ராஜராஜதேவர் தஞ்சாவூர்க் கோயிலினுள்ளால் இருமடி சோழனின் கீழைத்திருமஞ்சன சாலை தானஞ் செய்தருளாவிருந்து"—என்னும் கல்வெட்டுப்பகுதி தஞ்சாவூரில் சோழர்களுக்கு அரண்மனை இருந்தது என்பதற்கு ஆதாரமாகும்.

இராசராசேச்சரம் என்ற தொடருக்குப் பொருள்

இத்தொடர் இராசராச சோழனால் கட்டப்பெற்ற கோயில் என்று பொருள்படும். ஈச்சரம்—கோயில். இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அனைத்தும் ராஜராஜீஸ்வரம் என்றே இக்கோயிலைக் குறிப்பிடுகின்றன. இலக்கண விதிப்படி அது தவறுடையதாகும். ராஜராஜேஸ்வரம் என்பதே திருத்தமுடையதாகும்.

இராசராசேச்சரம் நிலைபெற்றுள்ள இடம்

'பாண்டிகுலாசனி வளநாட்டுத்தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீராஜ ராஜீஸ்வரம் உடையார்க்கு நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றும் குடுத்தார் குடுத்தனவும் ஸ்ரீ விமானத்திலே கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிஞ்சருள வெட்டின" என்னும் முதலாம் இராசராச சோழனின் ஆட்சியாண்டு 26, நாள் இருபதில் வெட்டப்பட்ட கல்வெட்டுப்பகுதி, தஞ்சை இராசராசேச்சரம் நிலைபெற்றுள்ள இடம் பாண்டிகுலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூரில் அமைந்துள்ளதைப் புலப்படுத்தும். பாண்டிகுலாசனி என்பது முதலாம் இராசராச சோழனுடைய விருதுப் பெயர்களில் ஒன்று. இதற்குப் பாண்டியர் குலத்துக்கு இடியை ஒத்தவன் என்பது பொருள். இப்பெயரே இவ்வள நாட்டுக்கு வைக்கப்பெற்றதாகும். இப்பெயர் பிற்பட்ட

காலத்தில் பாண்டிகுலபதி வளநாடு என்று வழங்கப்பெற்றுள்ளது.

பாண்டிகுலாசனி வளநாடு

இப்பாண்டிகுலாசனி வளநாடு, ஆர்க்காட்டுக்கூற்றம், இடையாற்றுநாடு, எயிநாடு, எறையூர் நாடு, கிளியூர்நாடு, கீழ்செங்கிளி நாடு, சுத்தமல்லி வளநாடு, தஞ்சாவூர்க்கூற்றம், பனங்காடுநாடு, புறக்கிளிநாடு, மீசெங்கிளிநாடு, மீய்வாரிநாடு, வடகவிரைநாடு, வடசிறுவாயில்நாடு, விளாநாடு, முதலான பதினேழு பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது.

தஞ்சாவூர்க்கூற்றம்

இது தஞ்சாவூர், கருந்திட்டைக்குடி முதலான ஊர்கள் இக்கூற்றத்தில் அடங்கியிருந்த ஊர்களுள் சிலவென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. கூற்றம் என்பது இருநாடுகளுக்கு இடைப்பட்ட சிறுபிரிவாகும்.

இராசராசேச்சரம் கட்டி முடிவுபெற்ற காலம்

முதலாம் இராசராச சோழன் அவனது ஆட்சியாண்டு இருபத்தைந்து நாள் இருநூற்று எழுபத்தைந்தில் ஸ்ரீராசராசேச்சரமுடையார் ஸ்ரீவிமானத்துச் செம்பின் ஸ்தூபித் தறியில் வைக்கச் செப்புக்குடம் ஒன்றைக் கொடுத்த செய்தி அவன் கல்வெட்டுப் பகுதி உணர்த்துகின்றது (S. I. I. Vol. II Part I Page 3) எனவே கோயில் கட்டி முடிவுபெற்ற காலம் கி. பி. 1010 அதாவது இற்றைக்கு 972 ஆண்டுகளுக்கு முன்பு ஆகும்.

இராசராசேச்சரத்துக்கருவறையில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர்.

இக்கோயில் கருவறையில் எழுந்தருளியிருக்கும் இறைவர், சோழமன்னர்களின் கல்வெட்டுக்களில் இராச ராசேச்சரமுடையார், இராச ராசேச்சரமுடைய பரமசுவாமி, எனக் குறிக்கப்பெற்றுள்ளனர். மல்லப்ப நாயக்கர் கல்வெட்டில், தஞ்சாவூர் பெரிய உடைய நாயனுர் என்னும் பெயர் காணப்படுகிறது. இதுவே இக்காலம் தஞ்சைப் பெருவுடையார் என்று வழங்கப்பெறுகின்றது.

இக்கோயிலில் முதலாம் இராசராச சோழன் எழுந்தருளுவித்தனவும், கொடுத்தனவுமாகிய வேறு திருமேனிகள்

முதலாம் இராசராச சோழன், இக்கோவில் தட்சிண மேருவிடங்கர், மகாமேரு விடங்கர், சண்டேஸ்வரப்பிரசாத தேவர், இவர் பிராட்டியார் உமாபரமேஸ்வரியார், சண்டேஸ்வரரின் தந்தையார் விழுந்து கிடந்தாராய் உள்ளவர், பிரசாதம் பெறுகின்றாராகக் கனமாகச் செய்த சண்டேஸ்வரர், மகாதேவர், பஞ்சதேக மூர்த்திகள் முதலான வேறு திருமேனிகளை எழுந்தருளுவித்துள்ளான். ஆடவல்லான் என்னும் கல்லால் எண்ணூற்று இருபத்தொன்பது கழஞ்சே முக்காலே மூன்றுமஞ்சாடி நிறையுள்ள ஸ்ரீபலி எழுந்தருளும் பொன்னின் கொள்கை தேவர் ஒருவரையும், பாதாதி கேசாந்தம் மூவிரலே மூன்றுதோரை உயரமும் நான்கு திருக்கைகளிலும் பிடித்தருளிய சூலமும், கபாலமும், பாசமும், தமருகமும் வெள்ளியின் பாதபீடமும் உள்பட நிறை எழுபத்திரு கழஞ்சரையுள்ள பொன்னின் க்ஷேத்திரபால தேவர் ஒருவரையும் கொடுத்துள்ளான்.

(தொடரும்)

கொடுமுடி : மகுடேசுவரசுவாமி கோயிலில் 30 வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த பள்ளியறைப் பூசையும் உஷிக்கால திருப்பள்ளி யெழுச்சி பூசையும் 3—8—62 இல் ஷெ கோயில் டிரஸ்டி திருமதி கே. ஏ. முத்துலட்சுமி அம்மாள் குடும்பத்தினர்களால் நடத்தப்பெற்றது.

தென்கரை ; நவநீத கிருஷ்ணசுவாமி கோயிலில் ஜெயந்தி உற்சவம் 23—8—62 முதல் 1—9—62 வரை நடைபெற்றது.

சின்னமனூர் : பூலானந்தீசுவரர் கோயிலில் ஆவணி மூல உற்சவம் (பிட்டு விற்ற திருவிழா) 9,10—9—62 தேதிகளில் நடைபெற்றது.

மலைநாட்டுத் திருப்பதி யநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.]

மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருவாட்டாறென்னுந் திருப்பதியை நம்மாழ்வாரொருவரே யனுபவித்தா ரென்றுகூறி அவருடைய பதிகமொன்றை விவரித்து வருகின்றோம். அதில் நான்கு பாசுரங்கள் விவரிக்கப்பட்டன. இனி ஐந்தாவது பாசுரங் கேளீர்.

5. வானேற வழிதந்த
வாட்டாற்றான் பணிவகையே
நானேறப் பெறுகின்றேன்
நரகத்தை நகுநெஞ்சே
தேனேறு மலர்த்துளவம்
திகழ்பாதன் செழும்பறவை
தானேறித் திரிவான தாளிணை
யென் தலைமேலே.

ஆழ்வார் தமக்கு ஸ்ரீவைகுண்டப் பயணம் மிகவுமணுகி விட்டதென்பதை மிகுந்த களிப்புடன் கூறுகின்றார் இப்பாட்டில். திருவாட்டாற்றெம்பெருமானுக்கு வானேற வழி தந்த வாட்டாற்றானென்று திருநாமஞ் சாற்றினர்போலு மாழ்வார். வானேறுவதற்கான வழி உபநிடதங்களில் அர்ச்சிராதி மார்க்கமென்று கூறப்படுகின்றது. அந்த மார்க்கத்தில் அக்நிதேவதை, தினதேவதை, சுக்கில பக்ஷ தேவதை, உத்தராயண தேவதை, ஸம்வத்ஸர தேவதை, வித்யுத் (மின்னல்) தேவதை, வருணதேவதை, இந்திரதேவதை, பிரமதேவதை யெனப் பன்னிரண்டு தேவதைகள் முறையே வழிநடத்தி முக்தாத்மாக்களைக் கௌரவிப்பதாக நூற்கொள்கை.

உயிர் உடலைவிட்டு நீத்தபின் செல்லுதற்குரிய கதிகள் நான்கெனக் கூறப்படுகின்றது. கர்ப்பகதி, யாம்யகதி, தூமாதிகதி, அர்ச்சிராதி கதியாமவை. மீண்டும் கருக்குழியிற் புகுகைக்கான வழி கர்ப்பகதி; நரகலோகம் புகும்வழி யாம்யகதி; சுவர்க்கலோகம் புகுகைக் கானவழி தூமாதிகதி; பரமபதம் சென்று சேரும்வழி அர்ச்சிராதி கதி. அந்தவழி இப்போது தமக்கு அணுகிவிட்டதாகக் கூறுகின்றாராழ்வார். இவ்வழியை எம்பெருமான் இனித் தரப்போகின்றானேயொழிய இன்னும் தந்திலன்; அப்படியிருக்க "வானேற வழி தந்த" என்று இங்கு ஆழ்வார் கூறியருளியது தேற்றத்தினாலென்க. தவறாது கொடுத்தருள விருப்பதை யறிந்து கூறினவாறு.

வாட்டாற்றான் பணிவகையே நானேறப் பெறுகின்றேன்—அப்பெருமான் கீதையிலே "அஹம் த்வா' ஸர்வ பாபேப்யோ' மோக்ஷயிஷ்யாமி" என்று பண்டே சொல்லிவைத்திட்டானே, அப்பேறுதன்னை நான் விரைவில் பெறவிருக்கின்றேனென்று தமது திருவுள்ளத்தைக் குறித்துக் கூறினராழ்வார்; அதற்கு நான் என்ன செய்யவேண்டுமென்றது நெஞ்சு; நரகத்தை நகு நெஞ்சே! என்கிறார். நெஞ்சே! நரகலோகத்தைப் பார்த்துச் சிரி என்பதாகப் பொருளன்று; இந்த ஸம்ஸாரமண்டலத்திற்கே நரகமென்றும் பெயருண்டாதலால், ஸம்ஸார நிலத்தைப் பார்த்துச்சிரி என்றதாகவே பொருள் கொள்ளலாம். 'என்னை நெடுங்காலமாக ஸம்ஸாரியாக்கிப் படுகொலையடித்த பொல்லாநிலமே! உன்னை யடியறுத்துத் தொலைத்திட்டேன் காண்' என்று சொல்லிச் சொல்லிச் சிரித்திடு என்கை.

திருவரங்கம் பெரிய கோயிலில் பிள்ளை யழகியமணவாளப் பெருமாளரைய ரென்று ஒரு விண்ணப்பஞ் செய்வாரிருந்தார்; அவர் ஒரு நோயினால் மிகவும் வாதைப்பட்டிருந்தார்; பிரானே! இந்த நோயைத் தொலைத்தருளி என்னைத் திருவடி சேர்த்துக் கொள்ளலாகாதா வென்று அரங்கனடியிணையில் பிரார்த்தித்தார். அவர்க்கு ஸ்ரீரங்கநாதன் பரமபத மருளத் திருவுள்ளம்பற்றித் திருமாலை திருப்பரிவட்டம் முதலான பரிசுகளை வரவிட்டருள, அப்போது அவர் "நானேறப் பெறுகின்றேன் நரகத்தை நகு நெஞ்சே!" என்னுமிப் பாசுரத்தைச் சொல்லி நோயை நோக்கிச் சிரித்தாரென்று இதிகாசம் கூறுவர்.

பேறு கைபுகுந்தாலன்றோ நரகத்தைச் சிரிக்கலாம்; அது கைபுகுந்துவிட்டதோ

வென்ன, அதில் ஐயமுண்டோ வென்று காட்டுவன பின்னடிகளிரண்டும். 'தேனேறு மலர்த்துளவம் திகழ்பாதன்' என்றும் 'செழும் பறவை தானேறித் திரிவான்' என்றும் சொன்னவை கருத்துடை யடைகொளி. எம்பெருமான் திருவடியிணையிலணிந்த துளப மாலையுடன் கருளப்புள்ளின்மேலேறி வந்து நின்று ஸேவை ஸாதிக்கின்றனே, இனி நான் வானேறுவதில் ஐயமுண்டோ வென்பது பின்னடிகளின் பரமதாற்பரியம். 'திரிவான' என்றது திரிபவனுடைய என்றபடி. அவனுடைய **தாளிணை என் தலைமேலே** என்றது, பறவையேறு பரம்புருடன் தான் அப்புள்ளரையன் தோளிலே வைத்திருந்த திருவடியிணை என்தலைமேலே யேறின அதிசயம் என்னே! என்று வியந்து கூறியவாறு.

6, தலைமேல தாளிணைகள்
　　தாமரைக்க ணென்னம்மான்
நிலைபேரா னென்னெஞ்சத்து
　　எப்பொழுது மெம்பெருமான்
மலைமாடத் தரவணைமேல்
　　வாட்டாற்றான் மதமிக்க
கொலையானை மருப்பொசித்தான்
　　குரைகழல்கள் குறுகினமே.

ஆழ்வார் தாம்பெற்ற பேறுகளை ஒன்று இரண்டு மூன்று என்றெண்ணுகிறார். திருவடிகளை எனது தலைமேலே வைத்தருளினான்; செந்தாமரை போன்ற அழகிய திருக் கண்களாலே என்னைக் குளிர நோக்கியருளா நின்றான்; ஒருகாலும் என்னெஞ்சில் நின்றும் நிலை பேராதே நிற்கின்றான்; ஆக இவையன்றோ நான்பெற்ற பேறுகளென்கிறார்.

தலைமேல தாளிணைகள்—(கிழே 9-2. பதிகத்தில்) "நீயொருநாள் படிக்களவாக நிமிர்த்த நின்பாத பங்கயமே தலைக்கணியாய்" என்று நான் பிரார்த்தித்தபடியே அழகிய திருவடிகளாலே என்தலையை அலங்கரித்தருளினா னென்றபடி. **தாமரைக்க ணென்னம்மான்** என்பது எழுவாய்போலே யிருந்தாலும், என்முன்னே நின்று தாமரைக் கண்களாலே குளிர நோக்கினான் என்னுங் கருத்துப்பட நின்றது. "தொண்டரோர்க் கருளிச் சோதிவாய் திறந்து உன்தாமரைக் கண்களால் நோக்காய்" என்று தாம் பிரார்த்தித்தபடியே கடாக்ஷித் தருளினபடியைக் கூறியவாறு. **என்னெஞ்சத்து நிலைபேரான்** என்றது — என்னெஞ்சினுள் மறைந்திருந்து கொண்டே திருவடிகளை என்தலைமேலே வைப்பதும் தாமரைக்கண்களாலே நோக்கு வதும் செய்யாநின்றா னென்றவாறு.

மலைமாடத் தரவணைமேல் வாட்டாற்றான்—திருவனந்தபுரத்தில் அனந்த பத்மநாபனைப் போலே திருவாட்டாற்றிலும் எம்பெருமானுக்கு ஆதிசேஷ சயனமுள்ளது. இங்கு ஆழ்வார் இதை அநுஸந்திப்பதன் கருத்தை ஆசிரியர்கள் ஆழ்ந்து அறிந்து வெளியிடுகிறார்கள். (அதாவது) உபநிடதத்தில் **பர்யங்கவித்யை** யென்று ஒரு பகுதியுளது. இங்கிருந்து பரமபதஞ் சென்ற ஆத்மா [முக்தாத்மா] திருவனந்தாழ்வான்மேலே அடியிட்டு ஏறுவதாக அங்குச் சொல்லப்படுகிறது. அந்தப்பேறு தமக்கு அணுகியிருப்பதை நினைத்து ஆழ்வார் இதனை [அரவணைமேல் வாட்டாற்றா னென்பதை] அருளிச் செய்தபடி.

மதம்மிக்க கொலையானை மருப்பொசித்த வரலாறு வருமாறு;—கண்ணபிரானும் பலராமனும் கோகுலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கையில் கம்ஸன் தனது நகரமான மதுரையில் வில்விழவொன்று நடத்துவதாக வைத்து அதைக் காண்பதற்கு ஸ்ரீக்ருஷ்ண பலராமர்களைக் கோகுலத்தினின்று அழைத்து வரும்படி அக்ரூரனென்னும் பரமபக்தனை வேலைக்காரனை யனுப்பியிருந்தான்; அவன் கோகுலஞ் சென்று அவ்விருவரையும் அழைத்துவர அவர்கள் வடமதுரையில் வந்து சேர்ந்தனர். கண்ணன் கம்ஸனுடைய தீய புத்தியையறிந்தவனாதலால் வில்விழா நடக்கிற ஆயுத சாலையிலே புகுந்து 'இவனுக்கு வில்லொரு கேடு, விழாவொரு கேடு' என்று சொல்லி அந்த வில்லையெடுத்து முறித்தெறிந்துவிட்டு வழியடைவே கம்ஸனது அரண்மனையை நோக்கிச் செல்லுகையில், ஸ்ரீக்ருஷ்ண பலராமர்களை மாய்க்கும்படி அரண்மனை வாயிலில் அவனால் ஏவி நிறுத்தப் பட்டிருந்த குவலயா பீடமென்னும் மத யானை சீறிச் சிவந்துவர, அவ் யாதவவீரர் அதனையெதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை யெடுப்பது போல எளிதிற் பறித்து அவற்றையே ஆயுத மாகக் கொண்டு அவற்றாலடித்து அக் குஞ்சரத்தைக் கொன்றொழித்தனர் என்பது கதை.

ஆழ்வார் இதனை இங்கெடுத்துக் கூறியது, பகவான் அந்த மதயானையை முடித்தது போலவே தம்முடைய தீவினைகளாகிற விரோதிகளையும் முடித்திட்டா னென்று காட்டுதற் கென்பர்.

7. குரைகழல்கள் குறுகினம்
 நம்கோவிந்தன் குடிகொண்டான்
திரைகுழுவு கடல்புடைசூழ்
 தென்னாட்டுத் திலதமன்ன
வரைகுழுவு மணிமாட
 வாட்டாற்றான் மலரடிமேல்
விரைகுழுவு நறுந்துளவ
 மெய்ந்நின்று கமழுமே.

கீழ்ப் பாசுரத்தில் "குரைகழல்கள் குறுகினமே" என்றார்; தாம் எம்பெருமானுடைய திருவடிகளைச் சேருங்காலம் ஸமீபித்துவிட்டதென்றார். அது மெய்யே யென்கைக்காக மீண்டும் இப்பாட்டையும் குரைகழல்கள் குறுகினமென்றே தொடங்குகிறார். அதற்குத் தகுந்த சான்று காட்டுகிறார் "விரைகுழுவு நறுந்துளவம் மெய்ந்நின்று கமழுமே" என்று. கீழ் எட்டாம்பத்தில் குட்டநாட்டுத் திருப்புலியூ ரெம்பெருமானுடைய திருவருள் தமக்குப் பலித்தபடியைத் தோழி பேச்சாலே வெளியிடுமளவில் "அன்றி மற்றோருபாயமென் இவளந்தண்டுழாய் கமழ்தல் ...குட்டநாட்டுத் திருப்புலியூர் நின்றமாயப்பிரான் திருவருளாமிவள் நேர்பட்டதே" என்று திருத்துழாய் நறுமணம் திருமேனியிலே கமழ்வதையிட்டு நிரூபித் திருப்பதுண்டே; இப்போது திருவாட்டாற் றெம்பெருமானுடைய திருவருள் பலித்தபடியையும் அங்ஙனமே நிரூபிக்கிறாராழ்வார். அங்கு தோழி பேச்சாலே, இங்கு தம் பேச்சாலே யென்பது வாசி.

"நம் கோவிந்தன் குடி கொண்டான்" என்பதை உள்ளபடியே அந்வயிப்பது தவிர 'கோவிந்தன் நம் குடிகொண்டான்" என்றும் அந்வயிக்கலாம். பசுக்களோடுங் கலந்து பரிமாறிக் கோவிந்தனென்று பெயர்படைத்த பெருமான் "அரவத் தமளியினோடும் அழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையுந் தானும் அகம்படி வந்துபுகுந்து" என்றாப் போலே பரிஜனங்களோடும் பரிவாரங்களோடுங் கூடிவந்து தம் திருவுள்ளத்திலே குடிகொண்டதாகக் கூறுகின்றாராயிற்று.

அதற்கு அடையாளம் கூறுகின்றது "திரைகுழுவு கடல்புடைசூழ்" என்று தொடங்கிப் பாசுரம் முழுவதும்—அலைத் திரட்சி மிக்கிருந்துள்ள கடலாலே சுற்றுஞ் சூழப்பட்டிருப்பதாய், தென்னாட்டிற்குத் திலகம் போலேயாய், மலைகளை நெருங்கவைத்தாற்போலே மணிமயமான மாடங்கள் நெருங்கியிருப்பதான திருவாட்டாற்றுப் பகுதியைக் கோயிலாகக் கொண்டிருக்கு மெம்பெருமானுடைய திருவடித் தாமரைகளின்மீது சாத்தியிருக்கின்ற நறுமணம்மிக்க திருத்துழாயானது என்னுடம்பிலே நிலைநின்று நாறுகின்ற படியைப் பாரீர்; என் வார்த்தையிலே ஸந்தேஹமுண்டாகில் என்னுடம்பை மோந்து பார்க்க மாட்டீர்களோ? என்கிறார் போலும்.

8. மெய்ந்நின்று கமழ்துளவ
 விரையேறு திருமுடியின்
கைந்நின்ற சக்கரத்தன்
 கருதுமிடம் பொருதுபுனல்
மைந்நின்ற வரைபோலும்
 திருவுருவ வாட்டாற்றாற்கு
எந்நன்றி செய்தேனா
 என்னெஞ்சில் திகழ்வதுவே.

ஆழ்வார் இப்போது தாம் பெற்ற பேற்றையும், அடுத்தபடியாகப் பெறவிருக்கும் பேற்றையும் ஆராய்ந்தார். பேறு கனத்திருந்தது. அந்தோ! இதற்கீடாக நான் என்ன நல்வினை செய்தேன்! ஒன்றும் செய்திலனே! அப்படியிருக்கவும் இஃது என்ன விஷயீகாரம்! என்று நெஞ்சு குழைகிறார். இப்பாசுரத்தில் ஈற்றடி உயிரானது. "எந்நன்றி செய்தேனா என்னெஞ்சில் திகழ்வது வே" என்றவிதனைப் பற்றிக்கொண்டு ஆசார்ய ஹ்ருதய நூலில் "செய்தநன்றி தேடிக் காணாதே" என்கிற சூர்ணை அவதரித்துளது. நன்றியாவது நல்வினை; அஃது இருவகைப்படும். நாம் அறிந்து செய்வது, நம்மை யறியாமலே நேருவது என்பன இருவகைகள். "எந்நன்றி செய்தேனா" என்று ஆழ்வார் கூறினது தாம் அறிந்து செய்த ஸுக்ருதம் இல்லை என்பதை மட்டும் காட்டிநிற்கும். எம்பெருமான் தானாக ஏறிடும் ஸுக்ருதம் உண்டென்பது இதனால் விளங்கும். இஃது ஆழ்வார் திறத்தில் மட்டுமன்று; நம்போல்வாரிடத்தும் நேரக் கூடியதே. அதைப்பற்றிச் சிறிது விவரணம் காட்டுவோம். நாம் ஸம்ஸாரிகளாகையாலே

மக்களைப் பெறுகிறோம்: மகளை ஒருவனுக்கு மணம் புரிவிக்கவேண்டியதாகிறது. மகனுக்கு ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதாகிறது. ஆகவே ஸ்ரீரங்கத்திலுள்ள வொரு வரனுக்குத் தன் மகளைக் கொடுக்கவும், திருவேங்கடத்திலுள்ள வொரு பெண்ணைத் தன் மகனுக்குக் கொள்ளவும் நேருகிற தென்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த ஸம்ஸாரி அடிக்கடி வாய்ப்பேச்சுக்களில் ஸ்ரீரங்கத்தையும் திருவேங்கடமலையையும் வாயாரச் சொல்லவேண்டியதாகிறது. 'என்னுடைய மாப்பிள்ளை ஸ்ரீரங்கத்திலிருக்கிறார்; ஸ்ரீரங்கத்திலிருந்து என்னுடைய மாப்பிள்ளை நேற்றுவந்தார்; மாப்பிள்ளையை யழைத்துவர ஸ்ரீரங்கம் போய்வரப் போகிறேன்: என்னுடைய மருமகள் திருவேங்கடமலையிலிருந்து வந்தாள்; என்னுடைய இரண்டாவது மகளுக்குத் திருமாலிருஞ்சோலையில் விவாஹம் நடந்தது' என்றிப்படி பலகால் குடும்பப் பேச்சுக்கள் பேச நேர்கின்றது. இப் பேச்சுக்களில் ஸ்ரீரங்கத்தையும் திருவேங்கடமலையையும் திருமாலிருஞ் சோலையையும் பலகால் சொல்லுவதானது 'இத்திருப்பதிகளை நாம் சொன்னால் நன்மையுண்டு' என்கிற எண்ணத்தினாலன்று; அம்பத்தூர் ஆவடி என்கிற ஊர்ப் பெயர்களைச் சொல்லுவது போலவே இந்த திவ்யதேசப் பெயர்களையும் சொல்லிற்றத்தனை. ஆனாலும், அருள் செய்வதற்கு ஏதேனுமொரு வியாஜத்தை எதிர்பார்க்கின்ற எம்பெருமான் 'என்னூரைச் சொன்னானிவன்' என்று இதையொரு நன்மையாகக் கணக்கிடாநின்றான்.

மற்றுங் கேண்மின்; ஸம்ஸாரிகளுக்குப் பிறக்கும் மக்களுக்கு ரங்கன், ராகவன், திருவேங்கடன், கோவிந்தன், கோபாலன், நாராயணன், மாதவன் என்றிப்படி பரம்பரையாக நிகழும் பெயர்களையிட்டு அந்தப் பிள்ளைகளை ஆர்வத்தோடு அழைக்கும்போதெல்லாம் இந்தப் பெயர்களைச் சொல்லியழைக்க நேருகின்றது. தவிரவும், விவகாரங்களில் 'ரங்கன் வந்தான், ராகவன் போனான், கிருஷ்ணனைக் கண்டேன், ராமனோடு பேசினேன்' என்றிப்படி பலகாலும் சொல்ல நேர்கின்றது. எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லுகிறோமென்கிற எண்ணம் சிறிதுமில்லாமல் இங்ஙனே நிகழும் ஸம்ஸாரிகளின் விவகாரங்களில் எம்பெருமான் 'என் பெயரைச் சொன்னானிவன்' என்று இதையும் நன்மையாகக் கணக்கிடாநின்றான்.

மற்றுங் கேண்மின்; சில பாகவதர்கள் திருவேங்கட யாத்திரையாக வழிநடந்து செல்லாநிற்கையில் கள்ளர்கள் அவர்களையடித்துப் பொருள்களைக் கொள்ளை கொள்வதாக அணுகினார்கள்; அதே சமயத்தில் சில அரசாங்கச் சேவகர்கள் தங்களுடைய உத்தியோக நிமித்தம் துப்பாக்கியைத் தோளிலணைத்துக்கொண்டு அவ்வழியே வந்துகொண்டிருப்பதை அந்தக் கள்ளர்கள் கண்டு 'இவர்கள் இப்பாகவதர்களுக்குத் திருமேனிக் காவலாக வருகின்றார்கள்போலும்; இங்கு நம்முடைய எண்ணம் ஒன்றும் நிறைவேறாது' என்றெண்ணி வாளா விலகி யொழிந்தனர்; இந்த நிகழ்ச்சி அங்குச் சுயமாகச் சென்ற அரசாங்கச் சேவகர்களுக்கும் தெரியாது; யாத்திரை செல்லுகின்ற பாகவதர்கட்கும் தெரியாது. ஆனாலும், அருள்செய்ய அவகாசம் தேடிக்கொண்டிருக்கிற எம்பெருமான் அந்த ராஜ சேவகர்களைப் பாகவத ரக்ஷகர்களாகத் திருவுள்ளம் பற்றுகிறான். அந்த ராஜசேவகர்கள் பாகவதர்கள் சென்ற வழியில் சென்றது தன்னையே ஒருநன்மையாகக் கணக்கிடாநின்றான் பகவான்.

இன்னமுமொன்று கேளீர்; ஒருவன் ஓரிடத்தில் நிலம்வாங்கி அதிலே வெங்காயம் உள்ளி முதலானவற்றைப் பயிர் செய்கிறான். தண்ணீரிறைக்க அங்கே வசதியில்லாமையால் நெடுந்தூரத்திலே நீருள்ள விடத்தில் துலையிட்டு, தன்வயலிலே வந்து சேரும்படி தண்ணீர் இறைக்கின்றான். அந்த நீர் ஒரு பெரிய வாய்க்காலாகப் பெருகி வயலுக்குச் செல்லாநின்றது; யாத்திரையாக வழி நடக்கின்ற சில பாகவதர்கள் தாபமும் தாஹமும் மிக்கு எங்கும் தண்ணீர் கிடைக்காமல் வருந்திக்கொண்டு வருகையில் இந்தத் தண்ணீர்ப் பெருக்கைக் கண்டு பரமானந்தங்கொண்டு காலுங் கையும் முகமுங்கழுவி விடாய்தீர்ந்து மகிழ்ந்து சென்றார்கள். நெடுந்தூரத்தில் துலையிட்டுத் தண்ணீரிறைக்கின்றவன் இதைச் சிறிதுமறியாதவனா யிருந்தாலும் ஸர்வஜ்ஞனான பகவான் 'என்னடியார்களது விடாயைத் தீர்த்தானிவன்' என்றுகொண்டு இதையொரு நன்மையாகக் கணக்கிடாநின்றான்.

இன்னமுங் கேண்மின். ஒரு தனிகன் தான் சூது சதுரங்கமாடுவதற்காக ஒரு சாவடி கட்டி அதிலே சூதாடிக் காலங் கழிக்கிறான். ஆனால் இரவு முழுவதும் சூதாடிக் கண்விழித் திருக்க முடியாதே. நடுநிசி வரையில் சூதாடிவிட்டு உறங்குவதற்கு வீடு போய் விடுகிறான். அப்போது யாத்திரையாக வழி நடந்து வருகின்ற சில பரமபாகவதர்கள் தாங்கள் படுத்துறங்குவதற்கு இடம் கிடைக் காமல் சிரமப்பட்டிருந்து இந்தச் சாவடியிலே ஒதுங்க நேர்கின்றது. இப்படி ஒருநாளல்ல; நாடோறும் நேர்கின்றது. இதை அந்தத் தனிகன் அறியான். அறிந்தானாகில் ஒருவ ரும் உள்ளேபுகாதபடி கதவுகளிட்டுப் பூட்ட வும் ஏற்பாடு செய்திடுவன். இங்ஙனமே பல பாகவதர்கள் தங்கிப் போகிறார்களென் பதை அவனறியாமையாலே சேமக்காப்பு செய்யப்படாமலிருந்து யாத்திரை செய்வார்க் குப் பேரின்பமளிக்கும் புகலிடமாயிருந்து வருகின்றது அந்தச் சாவடி. இஃது எம்பெரு மான் திருவுள்ளத்திலேபட்டு 'என்னடியார் களுக்கு ஒதுங்க நிழல் கொடுத்தானிவன்' என்று ஒரு நன்மையாகக் கணக்கிடலா கிறது.

முடிவாக மற்றொன்று கேளீர். ஒருவன் பசுவதம் பண்ணியே ஜீவிக்கு மியல்பினன். அவன் ஒருநாள் ஒரு பசுவைக் கண்டு அதைப் பிடித்துக் கொல்ல முயன்று தொடரத் தொடங்கினான். இதையறிந்த அந்தப் பசு அஞ்சியோடத் தொடங்கிற்று. இவனும் விடாது அதைத் தொடர்ந்து ஓடுகிறான். பசு ஓடும் வழியில் ஒரு பெருமாள் கோயில் இருந் தது; அதற்கு வலமாக ஓடிற்று அந்தப்பசு. இந்தக் கிராதகன் அதைத் தொடர்ந்து பிடிக்கவேண்டித் தானும் அந்தக் கோவிலை வலஞ்செய்வானாய் ஓடுகிறான். ஒரு பெருமாள் கோயிலை வலஞ் செய்கிறோமென்கிற எண் ணம் அவனுக்கில்லை. கோயிலை வலஞ் செய் வது நன்மை என்கிற அறிவுமவனுக்கில்லை. ஆனாலும் தன்னருளைப் புகவிடுவதற்கு ஆள் பார்த்துத் திரியுமெம்பெருமான் 'இவன் என் கோயிலை வலஞ்செய்தான்' என்று இதை யொரு நன்மையாகக் கணக்கிடாநின்றான்.

இங்ஙனமே பல நிகழ்ச்சிகள் ஸம்ஸார வாழ்க்கையில் ஸம்பவிப்பனவுள. இத்தகைய நன்மைகளில் ஏதேனுஞ் சிலவற்றை வியாஜ மாகக் கொண்டு எம்பெருமான் அருள்செய் திருக்கலாமே யல்லது நானாக மனஸ்கரித்து ஒரு நன்றியும் செய்திலேனே! என்னுங் கருத்துப்பட "எந்நன்றி செய்தேனா என்னெஞ் சில் திகழ்வதுவே" என்றாராயிற்று, ஆழ்வார்.

9. திகழ்கின்ற திருமார்பில்
திருமங்கை தன்னோடும்
திகழ்கின்ற திருமாலார்
சேர்விடம் தண்வாட்டாறு
புகழ்கின்ற புள்ளூர்தி
போரரக்கர் குலங்கெடுத்தான்
இகழ்வின்றி யென்னெஞ்சத்து
எப்பொழுதும் பிரியானே.

ஆழ்வார், எம்பெருமான் தம்மை யிகழு கைக்கு உரிய காரணங்கள் தம்மிடத்திலே பலவுண்டென்று கண்டு, 'பலபடிகளாலும் இகழத்தக்க வென்னிடத்தில் இகழ்வு சிறிது மின்றியே ஒரு போதும்விட்டு நீங்காதேயிரா நின்றானே! திருமாலுக்கு இப்படியும் ஒரு மால் உண்டாவதே!' என்று தம்மிலேதாம் ஆச்சரியப்படுகிறார். இத்தகைய பேரருளுக் குக் காரணத்தையும் ஒருவாறு கண்டறிந்து கூறுகின்றார், திருமார்பில் திருமங்கைதன்னோடும் திகழ்கின்ற திருமாலார் என்று. பெரிய பிராட்டி யாரின் புருஷகாரத்தினால்தான் இத்தகைய பெரும்பேறு கிடைத்ததென்று ஸூசிப்பித்த வாறு. பாசுரம் தொடங்கும்போதே திகழ் கின்ற திருமார்பில் என்கிறார்—திருமார்புக்கு ஓர் ஆபரணமிட்டு அதனால் விளக்கம் பெற விக்கவேணுமோ? வெறும் புறத்திலேயே ஆலத்திவழிக்க வேண்டும்படியன்றோ திரு மார்பு விளங்குவது. அதற்குமேலே பெரிய பிராட்டியாரும் சேர்ந்ததனாலுண்டான அழகு பேச்சுக்கு நிலமாமோ? உலகில் பலரையும் ஸ்ரீமான்களென்று சொல்லுவ துண்டு, அஃது உபசாரவழக்கேயாம். திரு மங்கைதன்னோடும் திகழ்கையாலே உள்ள படி ஸ்ரீமானாயிருப்பவன் எம்பெருமானொரு வனே. அப்படிப்பட்டவன் திருவாட்டாற் றில் வாஸம்பெற்றது பெருமைக்கு மேற் பெருமையாயிற்று. பறவையேறு பரம்புருட னானது இன்னமும் பெருமையாயிற்று. இப்படி பெருமைக்கெல்லாம் எல்லையான பெருமை பெற்றவன் இகழ்வின்றி என்னெஞ் சத்து எப்பொழுதும் பிரியான்—மாறிமாறிப் பல பிறப்பும்பிறந்த நித்யஸம்ஸாரி இவ னென்று தன்மைபாராதே ஒரு க்ஷணப்பொழு

தும்விட்டுப் பிரியாதே யிருக்கிற இவ்விருப்பு என்னே! என்று வியக்கிறாராயிற்று.

10. பிரியாதாட் செய்யென்று
பிறப்பறுத்து ஆளறக்கொண்டான்
அரியாகி யிரணியனை
ஆகங்கீண்டா னன்று
பெரியார்க்காட் பட்டக்கால்
பெறாத பயன் பெறுமாறு
வரிவாள்வா யரவணைமேல்
வாட்டாற்றான் காட்டினனே.

"பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறாதபயன் பெறலாகும்" என்றொரு பழமொழியுண்டு; அதனைத் திருவாட்டாற் றெம்பெருமான் அனுட்டானத்தில் காட்டியருளினானென்று ஆனந்தம் பொங்கியருளிச் செய்கிறார். இப்போது ஆழ்வார்தாம் பெற்ற அரியபெரிய பயன் எதுவென்னில், இனியொருநாளும் பிரியாதேயிருந்து அடிமை செய்யுமாறு சோதிவாய் திறந்து அருளிச் செய்ததொன்று; இனிமேல் பிறப்பு நேராதபடி வேரோடறுத்த தொன்று; அடிமை செய்யென்று சொல்லி விட்ட அளவன்றிக்கே கைங்கரியம் கொண்ட தொன்று, ஆகிய இவைபெற்ற பேறுகள். இவை எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையாலன்றி மற்றொன்றி னும் பெறமுடியாதவை யாதலால் பெறாதபய னெனப்பட்டது.

பதினோராம் பாட்டின் விசேஷத்தை இப் பதிகத்தின் முன்னுரையிலேயே மிக விவரித்தோம். ஆக இவ்வளவும் திருவாட்டாற்றுத் திருப்பதியின் அநுபவம் முற்றிற்று. இனி அடுத்த இதழில் திருவனந்தபுரத்தின் அநுபவம் நிகழும்......

இராமநாதபுரம் : சமஸ்தானம் உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோயிலில் விநாயகர் சதுர்த்தி 30—8—62 முதல் 3—9—62வரை நடைபெற்றது.

சென்னை : வேளாள தேனாம்பேட்டை - எல்லையம்மன் கோயிலில் உற்சவ விக்ரக கும்பாபிஷேகம் 2—9—62 ல் நடைபெற்றது.

இளையாத்தங்குடி : ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் முன்னிலையில், வியாஸ பூஜை, வித்வத்ஸதஸ் 13—9—62 முதல் நடைபெறும். பல அறிஞர்கள் கலந்து கொள்ளுவர்.

மன்னார்குடி : இராஜகோபாலசுவாமி கோயிலில் மகா சம்புரோட்சண மூன்றாவது ஆண்டு நிறைவு விழா; ஏகதின லட்சார்ச்சனை விழா, 6—9—62 ல் ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறது.

சமயபுரம் : போஜராஜசுவாமி கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 6—9—62 ல் நடைபெற்றது.

நாச்சியார் கோயில் : - சீனிவாசப் பெருமாள் கோயிலில் திருக்கல்யாண உற்சவம் 5—9—62 முதல் 8—9—62 வரை நடைபெற்றது.

தாராபுரம் : வேணுகோபாலகிருஷ்ண ஆஞ்சநேயசுவாமி கோயிலில் 23—8—62 ஸ்ரீஜெயந்தி திருமஞ்சனமும் 24—8—62ல் சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெற்றது.

காஞ்சிபுரம் : ஏகாம்பரநாதப் பெருமான் கோயிலில் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவியுள்ள நிதியிலிருந்து ஆவணி மூல நன்னாளில் 8—9—62ல் சுவாமிக்குச் சிறப்பு ஆராதனைகளும் சிவவேதியர்களுக்கு நண்பகலில் அன்னம்பாலிப்பும் நடைபெற்றது.

இராமநாதபுரம் : சமஸ்தான உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோயிலில் பிரம்மோற்சவம் 24—8—62 முதல் 3—9—62 வரை நடைபெற்றது.

தூத்துக்குடி : மேலூர் பத்திரகாளி அம்மனுக்கு ஆடி முளைக்கொட்டு திருநாள் 14—8—62 கும்பாபிஷேகமும் இரவு அம்மன் எழுந்தருளுதலும் நடைபெற்றது.

திருவேட்களம்



திருவேட்களம் கோபுரத் தோற்றம்

அந்தமு மாதியு மாகிய வண்ண லாரழ
லங்கை யமர்ந்திலங்க
மந்த முழவ மியம்ப மலைமகள் காண
நின்றாடிச்
சந்த மிலங்கு நகுதலை கங்கை தண்மதியம்
அயலே ததும்ப
வெந்த வெண் ணீறு மெய்பூசும் வேட்கள
நன்னக ராரே

—திருஞானசம்பந்தர்

அச்ல லில்லை அருவினை தானில்லை
மல்கு வெண்பிறை சூடும் மணாளனார்
செல்வ னார்திரு வேட்களங் கைதொழ
வல்ல ராகில் வழியது காண்மினே

—திருநாவுக்கரசர்.

இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் விளங்குமிடமான அண்ணாமலை நகர் ஒரு பாடல் பெற்ற பழம்பதியென்பதைப் பலர் அறிந்திருப்பார்களோ என்பது ஐயம். அது திருவேட்களம் என்ற திருப்பெயர் உடையது.

தேவாரப் பாடல் பெற்ற இச்சிவப்பதி சிதம்பரம் இருப்புப்பாதை நிலையத்திற்குக் கிழக்கே ஒரு கல் தொலைவிலுள்ளது. சிதம்பரத்திலிருந்து பஸ்கள் போகின்றன. இதற்கு அண்மையில் திருநெல்வாயில் (சிவபுரி), திருக்கழிப்பாலை என்ற பாடல் பெற்ற தலங்களும் இருக்கின்றன.

சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில் அண்ணாமலை நகரின் கிழக்கெல்லையில் இருக்கிறது. கோயில் கிழக்கு நோக்கியது; கோபுரத்துடன் காட்சியளிக்கிறது. கோயிலுக் கெதிரில் திருக்குளம் இருக்கிறது. ஒரே பிரகாரமுடைய அழகிய சிறு கோயில். புதுத்திருப்பணி செய்யப் பெற்று 1918-ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. திருவேட்களத்திற்கு வேணுவனம் என்ற பெயரும் உண்டு. வேணு (மூங்கில்) தல விருட்சமானதால் அப்பெயர் ஏற்பட்டது.

கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் தல விருட்சமான மூங்கில் இருக்கிறது. மேற்குப் பிராகாரத்தில் சித்திவிநாயகர், சோமாஸ்கந்தர், நால்வர், சொக்கநாதர், மீனாட்சி, ஆறுமுகர், கஜலட்சுமி இவர்களுடைய சந்நிதிகளும், வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர் சந்நிதியும், கிழக்குப் பிராகாரத்தில் சூரியன், சந்திரர், பைரவர், நவக்கிரகம் முதலியவர்கள் சந்நிதிகளும் உள்ளன.

மூலஸ்தானத்தில் கிழக்கு நோக்கியெழுந்தருளியுள்ள மூர்த்தி பாசுபதேசுவரர். அர்ச்சுனனுக்குப் பாசுபத அஸ்திரம் கொடுத்தருளினமையின் அப்பெயர் பெற்றார். இறைவன் சந்நிதிக்கு வடபுறம் தெற்கு நோக்கித் தேவியார் திருச்சந்நிதியிருக்கிறது. அம்பாளின் திருநாமங்கள் நல்லநாயகி, சத்குணாம்பிகை என்பன. நல்ல நாயகி என்பது சம்பந்தர் தேவாரத்தில் குறிக்கப் பெறுவது.

திருவேட்களம் பாசுபதேசுவரர் கோயில் கிராதமூர்த்தி

கோயிலுக்கு எதிரிலுள்ள திருக்குளம் கிருபாதீர்த்தம் என்ற பெயருடையது. நாரத தீர்த்தம் என்றும் கூறப்படுகிறது. இந்தக் கோயிலில் நாலு கால பூசை நிகழ்கிறது. வைகாசி விசாகத்தில் ஒரே நாள் திருவிழா நடைபெறுகிறது. வேடன் வேடச்சி உருவில் இறைவனும் இறைவியும் எழுந்தருளி அர்ச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுக்கும் ஐதிகம் காட்டப் பெறுகிறது. கிராமத்தார் பன்றி வேடம் போட்டுக் கொண்டு இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். கோயில் வாயிலில் அர்ச்சுனனுக்குச் சிவபெருமான் பாசுபதம் அருள்வது போன்ற உருவம் செதுக்கப் பெற்றிருக்கிறது. இவ்வூரில் ஐயனார், அரவான், மாரியம்மன், கோட்டை விநாயகர் முதலியோர் கோயில்களும் இருக்கின்றன.

இத்தலத்துப் பெருமான்மீது திருஞான **சம்பந்தர்** ஒரு பதிகமும், அப்பர் சுவாமிகள் ஒரு பதிகமும் பாடியருளியுள்ளனர். ஞானசம்பந்தப் பெருந்தகையார் தமது தங்குமிடத்தை இத்தலத்தில் வைத்துக் கொண்டு தில்லைக்குத் தரிசனம் செய்ய அவ்வப்போது சென்றனர் என்று பெரிய புராணம் பின் வரும் பாடலில் கூறுகிறது.

“செய்ய சடையார் திருவேட் களஞ்சென்று
கைதொழுது சொற்பதிகம் பாடிக் கழுமலக்கோன்
வைகி அருளுமிடம் அங்காக மன்றாடும்
ஐயன்திருக் கூத்துக்கும் பிட்டணைவுறுநாள்''

அருணகிரி நாதர் இப்பதிக்கென இரண்டு திருப்புகழ் பாடல்களைப் பாடியுள்ளனர்.

“சதுரத்தரை நோக்கிய, என்று தொடங்கும் பாடலை

“வெளியெட்டிசை சூர்ப்பொரு தாடிய
கொடிகைக் கோடு கீர்த்திபுலாவிய
விறல் மெய்த்திருவேட்கள மேவிய
பெருமாளே”

என்று முடிக்கிறார்.

மற்றொரு பாடல் கீழ்வருவது :—

மாத்திரை யாகிலு நாத்தவ ருளுடன்
வாழ்க்கையை நீடென மதியாமல்
மாக்களை யாரையு மேற்றிடு சீலிகள்
மாப்பரி வேபெறும் அனுபோக
பாத்திர மீதென மூட்டிடு மாசைகள்
பாற்படு ஆடக மதுதேடப்
பார்க்கள மீதினில் மூர்க்கரை யேகவி
பாற்கட லானென உழல்வேனை
சாத்திர மாறையு நீத்தம னாலய
சாத்தியர் மேவிய பதவேளே
தாத்தரி தாகிட சேக்கெனு மாநட
தாட்பர னார்தரு குமரேசா
வேத்திர சாலம தேற்றிடு வேடுவர்
மீக்கமு தாமயில் மணவாளா
வேத்தம தாமறை யார்த்திடு சீர்த்திரு
வேட்கள மேவிய பெருமாளே'

பாசுபதேசுவரர் கோயிலின் அருகே கிடக்கும் ஒரு கல்லில் பின்வரும் செய்தி பொறிக்கப் பெற்றிருக்கிறது.— சாலிவாகன சகாப்தம் 1488 (கி. பி. 1566) அக்ஷய, தை, 15-ஆம் நாள்-திருவேட்களம் கிராமத்தைத் தில்லைத் திருமூலத்தானத்திலுள்ள சிதம்பரேசர், சிவகாமி அம்மன் கோயில்களுக்கு, திருமலை ராஜய்யன் நன்மை மைக்காகச்சிறு சேவப்ப நாயக்கர் மகன் அச்சுதப்ப நாயக்கர் தானமாக அளித்தார். சேவப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர் இருவரும் 16-ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட மன்னர்கள். திரு. மலைராஜய்யன் என்பவர் கருநாடக அரசனை முதலாம் திருமலை ஆவான்.

திருவேட்களம் அர்ச்சுனன்

‘கடவுள் கணிதத்தில் நமது செயல்கள் குறிக்கப் படுகின்றன.’ —காந்திஜி.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன். B.A., B.L., திருநெல்வேலி]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இப்படி சில நாட்கள் கழிந்தன. யாதவப் பிரகாசருடைய கோஷ்டியிலே இளையாழ்வார் காணப்படவில்லை. யாதவப் பிரகாசருக்கு மனத்திலே கண்முன் காணாத இளையாழ்வார் திருவுருவமே எப்போதும் நிழலாடியது. அவரிடம் பல்வேறு சீடர்கள் பயிற்சி பெற்று வந்தனர். அவர்களுள் அத்வைத வழி செல்பவர்களையெல்லாம் யாதவப்பிரகாசர் ஒரு நாள் தனியாகக் கூட்டி அவர்களோடு பின்வருமாறு மனம் விட்டு யோசிக்கலானார்.

யாதவப்பிரகாசர்:—மறைகளுக்கு நாம் ஒரு விதமாகப் பொருள்கூற, அதுவே சரி என்று எல்லோரும் கேட்க, இந்த இளையாழ்வான் ஒருவன் மட்டும் எனக்கு எதிராக நின்று வாதிக்கின்றானே!

சீடர்களில் ஒருவன்:—சுவாமி! இதற்கு ஏன் இவ்வளவு கலக்கம்? இளையாழ்வான் தான் நம்முடைய கோஷ்டியை விட்டுப் போயாகிவிட்டதே!

யாதவப்:—நீ ஒரு முட்டாள்! நம்முடைய கோஷ்டியை மட்டும்தானே விட்டுப் போயிருக்கிறான்!

சீடன்:—அவன் என்ன செய்துவிட முடியும் என்று அஞ்சுகிறீர்கள்?

யாதவப்:—பல இடங்களில் அவன் நாம் உரைத்த உரைக்கு மாறாக வேறு புதிய பொருள்களைக் கூறுவதை நீங்கள் கவனித்தீர்களா, இல்லையா?

சீடன்:—ஆமாம். கேட்டோம். ஆனால் தேவரீர் போன்றவர்கள் பரம்பரையாகக் கூறி வரும் உரை இருக்கையில் இளையாழ்வானுடைய கல்பிதமான பொருள் நிலைக்க முடியுமா?

யாதவப்:—(ஒரு வெறுப்பு நகையுடன்) அதுவல்லடா கல்பிதம்! சுருதி அனைத்தையும் பிரமாணமாகக் கொண்டு ஆராய்ந்தால் அவனுடைய உரைதான் தேறி நிற்கும்.

சீடன்:—பின் நம்முடைய மதம்!

யாதவப்:—இதுதான் கல்பிதம் (சீடன் வியப்புறுகிறான்) ஏன், ஆச்சரியமாக இருக்கிறதா? பாரேன்! ஸத்யமான பிரபஞ்சத்தை மித்யையாக்கி, சுருதிகளிலே பேத கடக சுருதிகளை விலக்கி, அபேத சுருதிகளை மட்டுமே பிரமாணமாகக் கொண்டு,ஞானகாரமான பிரம்மத்துக்கு மாயையின் சேர்க்கையினால் அவித்யையைக் கல்பித்துக் கூறப்பட்ட கற்பனையின் மேலல்லவா நம்முடைய சித்தாந்தம் நிற்கிறது!

சீடன்:—அக்கல்பனைதான் ஓரளவு நிலைத்து விட்டதே ஏன் பயப்பட வேண்டும்?

யாதவ:—அப்படியல்ல. பலவித முயற்சிகள் செய்து, பிற எண்ணங்கள் புகவிடாது தடுத்து, இதுதான் வேதவாக்கியங்களுக்குப் பொருள் என்று நாம் டிண்டிமம் (பறை) கொட்டி வந்தோம். இந் நாட்டிலே அநாதி காலமாக நிலவி வரும் தத்துவங்கள் வேதவாக்கியங்களோடு பொருந்தாதவை போலப் படமெழுதினோம். இந்நிலையில் வேத வாக்கியங்களுக்குத் தொன்று தொட்டு இந்நாட்டு மக்கள் நம்பிய தத்துவப் பொருளோடு பொருத்தி உரைகூற முடியும் என்று ஒருவன் நிரூபித்துவிட்டால்,நம்முடைய மதத்துக்கு இந்நாட்டிலே கால்பாவ இடமிருக்குமா?

சீடன்:—அப்படியானால் இளையாழ்வானால் நம்முடைய மதத்துக்கு இடையூறு ஏற்படலாம் என்று அஞ்சுகிறீர்களா?

யாதவப்:—ஆம். நிச்சயம். அவன் சாமானியன் அல்லன். எந்தத் தருக்க வாதத்தை வைத்து நாம் நம் மதத்தை இதுவரை நிலை நிறுத்தி வந்தோமோ அதே தருக்

கத்தை வைத்தே அவன் நம்மதத்தில் உள்ள கூடாவாதங்களைக் கிழிக்கிறான். என்னிடம் அவன் கேட்ட கேள்விகளுக்கு என்னால் தருக்கரீதியாக விடையளிக்க முடிந்ததா? இப்படித்தான் எங்கள் ஆசிரியர்கள் கூறியிருக்கிறார்கள் என்று மட்டும்தானே சொல்ல முடிந்தது. அவன் கேள்விகள் நம் உயிர் நிலையையேயல்லவா தாக்குகின்றன!

சீடன்:—என்னவோ எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அப்படி அவன் நம் மதத்துக்கே பகை என்று தேவரீர் கருதினால் அவனை வாழ விடுவது நமக்கு ஆபத்துத் தானே.

யாதவப்:—ஆம். ஆபத்து ஆபத்து! பேராபத்து! எப்படியும் அவனை ஒழித்துவிடுவதுதான் நல்லது. அது விஷயமாக நமக்குள் கலக்கவே உங்களை இங்கே கூட்டினேன். இங்கே நாம் பேசுவது பற்றிப் பிறமாணவர்களுக்குச் சற்றும் சந்தேகம் கூடத் தோன்றாத முறையில் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

சீடர்கள்:—ஸ்வாமி! தேவரீர் திருவுள்ளம் வருந்தும்படி அந்த இளையாழ்வான் நடந்து கொண்ட பின் தேவரீர் சங்கல்பம் தானே அதன் முடிவு. என்னசெய்ய வேண்டும் நாங்கள்?

யாதவப்:—பதறாதீர்கள். விஷயம் அவ்வளவு எளிதல்ல. அருகுவாருங்கள். ஒரு வழி வைத்திருக்கிறேன். கவனமாய்க் கேளுங்கள். உங்களில் சிலர் இளையாழ்வானிடம் போய் அவன் நம் வார்த்தையால் வருந்தி நம்மிடம் வருவதை நிறுத்தியதில் நமக்கு மிகவும் துக்கம் என்றும், அவனில்லாமல் நமக்கு ஒன்றுமே ஓடவில்லை என்றும், நயமாகப் பேசி அவனை மீண்டும் நம்மிடையே வரச்செய்ய வேண்டும். சிலகாலம் சென்று நாம் கங்காயாத்திரை போவதாகக் கூறுவோம். நீங்களனைவரும் உத்ஸாகமாக அதை வரவேற்று, நீங்கள் கூட வருவதாக என்னை நிர்ப்பந்திக்க வேண்டும். இளையாழ்வானையும் உங்களோடு சேர்ந்துவர வழிசெய்து விட வேண்டும். அப்புறம் நான் பார்த்துக் கொள்கிறேன்.

சீடரில் ஒருவன்:—அப்புறம் என்ன செய்வீர்கள் ஸ்வாமி!

யாதவப்:—அட போங்கடா. யாத்திரை என்றால் வழியில் எத்தனையோ பெருங்காடுகள். காடுகளில் எத்தனையோ கொடிய விலங்குகள். இவ்வளவும் தப்பினால் கங்காமாதா இருக்கவே இருக்கிறாள். அதிலே வீழ்ந்தவர்க்கும் வீழ்த்தியவர்க்கும் பரகதியுண்டென்று புராணம் பேசுகிறது. இளையாழ்வான் நம்மோடு இங்கிருந்து வருவான். ஆனால் திரும்பமாட்டான். மேல் சர்ச்சை பண்ணாதீர்கள். நாளை இளையாழ்வான் நம்முன் மீண்டும் வரவேண்டும். போங்கள். வாய்திறந்தீர்களோ வந்தது ஆபத்து.

இங்ஙனம் சதிசெய்த பின் கூட்டம் கலைந்தது. சீடரில இருவர் மறுநாள் காலை இளையாழ்வாரிடம் சென்றனர். இளையாழ்வாரின்றி ஆசிரியர் மனம் பட்டபாடு அதிசயமாக இளையாழ்வாருக்கு விளக்கப்பட்டது. பாவம்! சுத்த சுதியான அவர் உண்மையிலேயே யாதவப் பிரகாசர் மனம் நோகத் தான்தான் நடந்துகொண்டு விட்டதாக மயங்கினார். எப்படியும் அவர் ஆசார்யர். நேற்றும் 'போ' என்றார். வந்தோம். இன்று வா என்று அழைக்கிறார். போகவேண்டியது தானே கடமை'' என்று எண்ணினார். வந்த சீடர்களோடு மீண்டும் யாதவப்பிரகாசர் திருமுன்பை அடைந்தார். அவரைக் கண்ட யாதவப்பிரகாசர் முகத்திலே சோகமும் மகிழ்ச்சியும் மாறி மாறிப் பளிச்சிட அவரை முகமன் கூறி வரவேற்று 'என்ன இளையாழ்வான்! இப்படியா போய்விடுவது! நானே தவறு செய்தேனானாலும் நீ இப்படி இங்கு வருவதையே நிறுத்தி விடலாமா. உன் போன்று பரிப்பிரச்னம் செய்யும் மாணவருக்கு உரைப்பதிலல்லவா எங்கள் போல்வார்க்கு மகிழ்ச்சி இனி நடந்ததை மறந்து விட்டு எப்போதும் போல் வந்து விடவேண்டும்.'' என்று தேனொழுகப் பேசினார். இளையாழ்வார் யாதவப் பிரகாசர் கூறியதனைத்தும் உள்ளத்தோடு கலந்த மொழிகள் என்று நம்பி அவரை வணங்கி 'ஸ்வாமி! ஏதோ நடந்து விட்டது. மறந்துவிட்டு அடியேனை க்ஷமித்தருள வேண்டும்.'' என்று பிரார்த்தித்து நின்றார். யாதவப்பிரகாசர் அவரை நோக்கி, "க்ஷமித்து

விடும்படி என்ன செய்து விட்டீர்! சரி, எப்போதும் போல இரும்'' என்று மழுப்பிவிட்டார்.

இங்ஙனமே சில நாட்கள் சென்றன. ஒரு நாள் யாதவப்பிரகாசர். தன் சீடர்களை நோக்கி ''சிஷ்யவர்க்கங்களே. நாம் காசி க்ஷேத்ராடனம் செய்யத்திருவுள்ள மானேம். உடலில் வலிவுண்டாய போதே அந்தப்புண்ய யாத்ரையை முடித்து விடவேணும் என்று சாஸ்த்ரம் கூறுகின்றது. இன்னும் சில தினங்களில் புறப்படுவோம்'' என்றார். சிஷ்ய வர்க்கத்தினர் சிலர் தாங்களும்கூட வருவதாகப் பிரார்த்தித்தனர். இளையாழ்வார்போல் சிலர் ஒன்றும் கூறுதவராய் நின்றனர். அவர்களை நோக்கி மற்றச் சீடர், இதுபோலச் சமயம் வாய்ப்பது அரிதென்றும், ஆசார்யரோடு போனல் தங்களுக்கு எல்லாவசதிகளும் எளிதே கிட்டுவதோடு ஆசார்யருக்கும் திருவுள்ளம் உகப்பாயிருக்கும் என்றெல்லாம் பலபடியாகக்கூறி யாவரையும் இணங்கவைத்து விட்டனர். புறப்பட நாளும் குறிப்பிடப் பட்டது. அன்றிரவு யதவப்பிரகாசர் தன் அந்தரங்க சீடர்களை அழைத்து எல்லாம் நம் திட்டப்படி நடந்தேறுகிறது. ஆனல் ஒரு விஷயம். இந்தக் கோவிந்தன் இருக்கிருனே அவன் விஷயத்தில் எனக்கு ஒரு பயம் உண்டு. அவன் ஏதோ சந்தேகிப்பதுபோல எனக்குப் படுகிறது. எதற்கும் அவனும் இளையாழ்வானும் தனியாகக் கூடிப்பேச வாய்ப்பில்லாத படி பார்த்துக் கொள்ளுங்கள் என்று எச்சரித்தார்.

பிரயாணதினம் வந்தது. யாதவப்பிரகாசரும் அவர் சிஷ்ய வர்க்கங்களும் யாத்திரையைத் தொடங்கி வெளியிலுள்ள ஒவ்வொரு க்ஷேத்திரங்களாகத் தரிசித்துக் கொண்டு விந்தியக் காடு போய்ச் சேர்ந்தனர். அந்தக் காடு மிக நெருங்கிய மரஞ்செடி கொடிகளையுடையதாய் நடுப்பகலிலேயே பயங்கரமான இருள் கவிந்ததாய் வழிச் செல்வோர் மனங்களிலே ஏதோ ஒரு இனம் தெரியாத அச்சத்தை உண்டாக்குவதாய் இருந்தது. அதில் மெல்ல மெல்ல இவர்கள் தங்கிச் செல்லும் போது சீடர்கள் எல்லோரும் ஒன்ருக இருக்க முடியாமல் சிலர் முன்னும் பின்னுமாகவே செல்ல நேரிட்டது. அத்தகைய சூழ்நிலையில் பிறர் அறியாவண்ணம் இளையாழ்வாரைத் தனியே கிட்டக் கோவிந்தருக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அதனை நழுவ விடாமல் கோவிந்தர் இளையாழ்வாரை அணுகி யாதவப் பிரகாசரின் சதியை வெகு சுருக்கமாக விளக்கி, இந்தக் கும்பலை விட்டு இளையாழ்வார் நீங்குவதற்கு அந்தக்காடுதான் தக்க இடம் என்று கூறி, ஒருவர் கண்ணிலும் படாமல் ஒளிந்து ஓடித் தப்பிப் பிழைப்பதற்குரிய வழியைத் தேடுமாறு எச்சரித்து விட்டு ஒன்றும் அறியாதவர் போல் மற்ற சீடர்களோடு சேர்ந்து கொண்டார். இளையாழ்வாரும் நிலைமையை ஒரு கணத்திலே ஊகித்துக் கொண்டு ஒருவரும் அறியாது சட்டென்று ஒரு புதரிலே மறைந்து பின்னலவருபவர்கள் தன்னைக் கடந்து சென்றபின் புதரை விட்டு வெளியேறிச் செல்வழியை விட்டுக் குறுக்குப்பாதையாகப் பெருமாளை மனனம் செய்துகொண்டே கால்போன வழியே சென்று மறைந்தார்.

யாதவப்பிரகாசரின் கோஷ்டி திரளான சீடர்கள் கொண்டதாதலினுலும் சென்றவழி மேடும் பள்ளமும் நிறைந்து முன்செல்வார் கண்களுக்கு இலக்கில்லாதபடி இருந்தாலும் முன்செல்வார் இளையாழ்வார் பின்னே வருகிருர் என்று எண்ணிக்கொள்ள, பின் கோஷ்டியார் அவர் முன்செல்வாரோடு முன்னே போய்விட்டார் என எண்ணிக்கொள்ள வெகுநேரம் வரை இளையாழ்வார் அந்தக் கோஷ்டியிலே இல்லை என்ற விஷயமே அறியாமல் அந்தக்கோஷ்டி அந்த அடவியைக் கடந்தது. வெகுநேரம் நடந்த பின் எல்லோரும் இளைப்பாறுவதற்காக ஓரிடத்தில் தங்கினர். அந்நேரத்தில் கோஷ்டியில் இளையாழ்வார் இல்லை என்பதை ஆசாரியர் கண்டார். இளையாழ்வார் எங்கே என்று ஒவ்வொருவராக விசாரித்தார். ஒருவரும் தெரியாது எனக்கூறி விட்டனர். இறுதியாக அவரைக் கண்ட நேரமாவது யாது என ஒவ்வொருவராக விசாரித்ததில முடிவில் எத்தனையோ மணி நேரங்களாக இளையாழ்வார்

'கடவுளிடத்திலும், அவரது வல்லமையினிடத்திலும், அவரது அன்பினிடத்திலும், எனக்குள்ள உறுதியை அசைத்தல் முடியாது. குயவன் கையிலுள்ள களிமண் போல நான் இருக்கிறேன்.'

—காந்திஜி

ஒருவர் கண்ணிலும் தென்படவில்லை என்பது புலனாயிற்று. யாதவப் பிரகாசருக்கு உள்ளூர மகிழ்ச்சிதான். இந்தக் காட்டில் கொடிய விலங்குகள் மத்தியில் தன்னந்தனியனை இளையாழ்வான் நிச்சயமாக இதற்குள்ளே ஒரு கொடிய விலங்கிற்கு இரையாகியிருப்பான் என்று அவர் உள்ளம் உவகையோடு பறையடித்தது. ஆனால் அந்த உணர்ச்சியை உள்ளேயே அமுக்கி இளையாழ்வானைக் காணாது மிகவும் பரதவிப்பவர் போல, துன்பத்தையும், சிந்தனையையும் முகத்தில் தேக்கி, கண்டத்தில் விம்மலையும், பொருமலையும் வருவித்துக் கொண்டு சீடர்களை நோக்கி "ஐயோ! இளையாழ்வான் என்ன ஆனானோ; அட மடையர்களா! கூடவந்தவன் எங்குச் சென்றான்? என்பது கூடத் தெரியாமலா வழி நடந்தீர்கள். கொடியவனமாயிற்றே. நம் கூட்டத்தைக் கண்டு விலங்குகள் தூரத்தே விலகி நிற்பதை நம் கண்களாலே கண்டோமே! ஐயோ! இவன் தனியனானல்... ஏதேனும் அதிர்ஷ்டம் இருந்து தப்பினால் உண்டு......ஏது?...இவ்வளவு கொடிய விலங்குகள் மத்தியில் அவனாவது தப்புவதாவது? அநியாயமாக இளையாழ்வானை அழைத்து வந்து பலியாகவா கொடுத்தோம்! உம்!...... உங்களைச் சொல்லி யாது பயன்? தவறு என்னுடையது. என் சமீபத்திலேயே வரும்படி அவனைக் கட்டளையிட்டிருந்தால் இவ்வாறு நேர்ந்திராது அல்லவா?" என்று இங்ஙனம் பலவாறாகப் பொய்ப்பிரலாபம் செய்து கண்ணீரும் வரச்செய்து துடைத்துக் கொண்டார். பின்னர் அவர் சீடர்களில் அந்தரங்கர் சிலரைத் தேடச் செய்வதுபோல ஒரு நாடகமும் நடிக்கப்பட்டது. கடைசியில் இளையாழ்வாரை இழந்து விட்டதாகவே கொண்டு யாதவப்பிரகாசரும் சிஷ்ய வருக்கமும் அங்கிருந்து புறப்பட்டுக் காசியை அடைந்தனர்.

இப்பால், கோவிந்தபட்டரின் எச்சரிக்கையை மேற்கொண்டு வழியின்றி விலகிக் கால் போன திசையே நடந்த இளையாழ்வார் வெகுதூரம் நடந்தார். செல்வழி நடைபாதையின்றிக் கல்லும் முள்ளும், புதரும் நிரம்பிய காட்டுப் பாதையாதலின் அவர் திருவடிகளிலே "பொருந்தார் கைவேல் நுதிபோல் பரல்பாய, மெல்லடிகள் குருதி சோர" மிகவும் பரிபவப் பட்டார். காலம் நண்பகலுக்குமேல் ஆகிவிட்டது. காலையிலிருந்து ஒன்றும் உண்ணாததால் பசிப்பிணி அவரை வாட்டியது. எங்குக் கூவினும் ஏன் என்று கேட்க ஆள் கிடையாது. அந்த அடர்ந்த விந்தியக்காட்டிலே "ஆவாரார் துணை" ஒன்றுமின்றி நாலாபுறமும் மருண்டு நோக்கிக் கானகத்தை விட்டு வெளியேற வகையறியாது "வழி திகைத்து அலமந்து" திசையறியாது தயங்கி உள்ளமும் உடலும் ஓய்ந்து "மதியெல்லாம் உள்கலங்கி" மேல் நடக்க முடியாமல் சோகம் மிக்கவராய் "நாராயணா! ஓ மணிவண்ணா! நாகணையாய்! வாராய்! என் ஆரிடரை நீக்காய்" என்று கதறிக்கொண்டே கீழே அமர்ந்து தன்னை மறந்தார்.

"யோவ்! இது யாரு? இந்தக் காட்டில் இப்படித்தனியே" என்ற ஒரு மதுரமான குரல் அவர் மயக்கத்தைக் கலைத்தது. இளையாழ்வார் வியப்புடன் கண்ணை விழித்தார். எதிரே சற்றுத் தூரத்தில் பார்க்கப் பயங்கர வடிவத்துடன் ஒரு வேடன் நின்றான். கழுத்திலே பாசிமணி; இடையிலே கச்சு; அதிலே செருகப்பட்டிருந்தது பளபளக்கின்ற கூரிய உடைவாள்; இடது கையிலே ஒரு வில்; பின் முதுகிலே ஒரு அம்பறாத்தூணி; வலக் கையில் ஒரு கோராங்கழி; கால்களில் நைந்துபோன தோல் செருப்பு; தலையோ செம்மட்டைபாய்ந்து விரிந்து, பரந்து கிடந்தது. அவனருகே இளவயதினளாய், நாணிக் கோணி நிற்கும் நங்கை யொருத்தி. அவள் கழுத்திலே கற்களாலும், பாசிகளாலும் செய்த பலவகை அணிகள். முகத்தைப் பாதி மறைத்த ஒரு பெரிய மூக்குத்தி. காதுகளில் பலதரப்பட்ட வளையங்கள். நீண்ட குழலை முறுக்கி முடிக்கப்பட்ட கொண்டை. அதிலே வர்ண ஜாலம் வீசுகின்ற கலமாலைகளும் மற்றும் மணிகளும். முழந்தாள் அளவும் கட்டிய ஒரு வர்ணச் சேலை. அதன் மேலுத்தரியத்தை இடது தோள் புறமாக இட்டு இடுப்பொடு

'சமய மென்றால் என்ன? உலகிலுள்ள வேதங்களை யெல்லாம் படிப்பது சமயம் அன்று; அவைகளை மூளையில் பதிய வைப்பதும் அன்று; சமயம் இதயத்தில் இரண்டற நிற்பது. அது நமக்கு வேறாகத் தனித்து நிற்பதன்று. அதென்றும் நம்மோடு ஒன்றி இருப்பது.

— காந்திஜி

சேர்த்துக் கட்டியிருக்கிருள். முகத்திலே ஒரு அதிசயமான ஒளி. உதட்டிலே தவழும் ஒரு புன்னகை. இப்படிப்பட்ட இரு உருவங்களை விழித்ததும் கண்ட இளையாழ்வாருக்கு வியப்பு மேலிட்டாலும் உள்ளத்தே ஒரு புறத்தில் இந்த வேளையில் இந்தப் பயங்கரமான காட்டில் மனித உருவங்கள் காணப்பெற்ருேமே என்ற மகிழ்ச்சி. கண்களை மலர விழித்து மெல்லிய குரலில் "நீங்கள் யார்" என்று வினவினுர். வேடுவன் பதில் சொன்ஞன். "நாங்கள் யார் என்பது இருக்கட்டும் ஐயா; நீர் யார்? பார்த்தால் பார்ப்பாரப்பிள்ளை போல் காண்கின்றது. இந்தக் காட்டிலே எப்படி ஐயா தனியே அகப்பட்டுக் கொண்டாய். அதை முதலில் கூறு" என்றுன். இளையாழ்வார் அவனை நோக்கி, அப்பா நான் என் குருவோடும் மற்ற சீடரோடும் காஞ்சியிலிருந்து புறப்பட்டுக் காசியாத்திரையாக வந்தோம். வரும் வழியில் இந்தக் காட்டிலே மற்றவர்கள் சற்று முன்பாக நான் பின்தங்கி, வழியை விட்டு விலகிக் காலையிலிருந்து இது வரை அலைந்து இங்கே இந்நிலையில் இருக்கிறேன் என்று கூறினுர். வேடன் "அப்படியா? பாவம் சரி........இதோ இவள் நம் மனைவி. நாங்கள் சித்தாச்சிரமத்திலிருந்து வருகிருேம். காஞ்சிபுரத்திற்குப் போகிற வழி......ஆ...... உமக்கும் காஞ்சிபுரம் என்று தானே சொன்னீர். சரி இப்பொழுது என்ன செய்ய வேண்டும். உம்மை இங்கிருந்து காட்டைத் தாண்டி வடக்கே பாதையிலே கொண்டு விட்டுவிட்டால் நீர் போய் உம்முடைய குருவோடு சேர்ந்து கொள்கிறீரா? அல்லது எங்களுடன் உம்முடைய ஊருக்கே திரும்பி வருகிறீரா!! என்று கேட்டார். இளையாழ்வார் எனக்கு வடக்கே இனி போகவேண்டாம். வந்த பயணம் தடைபட்டு விட்டது. நான் உங்களுடனே காஞ்சிக்கே வந்துவிடுகிறேன் என்று கூறி மெல்ல எழுந்தார். எழுந்ததுமே அவர் உடலில் உள்ள சோர்வு எல்லாம் நீங்கியது போல அவருக்குப் பட்டது. வேடன் "சரி புறப்படும்" என்று கூறி முன்னே நடக்க அவன் பின்னே வேட்டுவ நங்கை செல்ல அவளுக்குச் சற்றுப் பின்னுக இளையாழ்வார் தொடர்ந்து சென்ருர். அன்று மாலையளவில் காட்டைக் கடந்து விட்டனர். சமவெளியிலே நீர் கண்ட இடத்திலே வேடன் நிற்க இளையாழ்வார் அந்நீர்த்தடத்தில் இறங்கி தன் அனுஷ்டானங்களை முடித்துச் சிறிது தீர்த்தமும் பருகினுர். மீண்டும் மூவரும் வழி நடந்தார்கள். அப்போது அந்தி நீங்கி இருள் மெல்லக் கவியத் தொடங்கியது. மேலும் வெகுதூரம் சென்ருர்கள். ஆனுல் அப்பால் அவர்கள் செல்ல இயலாதபடி இருள் சூழ்ந்து கொண்டது. போக வழி தெரியவில்லை. அவ்வழியிலே நின்ற ஒரு பெரிய மரத்தடியில் அவர்கள் பிரயாணம் நின்றது. அந்த இரவை அம்மரத்தடியிலேயே கழித்து விடிய மீண்டும் பயணம் தொடங்கலாம் என்று வேடன் கூற, இளையாழ்வாரும் ஆமோதிக்க மூவரும் அம்மரத்தடியிலேயே தங்கினர். நள்ளிரவானவாறே அவ்வேட்டுவ நங்கை இங்கு தண்ணீர் கிடைக்குமா? என்று தன் கணவனை வினவினுள். வேடன் இங்கு சமீபத்தில் ஒரு கிணறு உண்டு. குடிக்க மிகவும் இனிமையாக இருக்கும். ஆனுல் இந்தக் காரிருளிற் செல்ல இயலாது. விடிந்தவாறே அங்கே போவோம். நீ வேண்டிய அளவு குடி என்று கூறினுன். இவ்வுரையாடலைச் சற்று தூரத்தே சயனித்திருந்த இளையாழ்வார் கேட்டார். "ஐயோ! எனக்கு இவ்வளவு பேருதவி செய்த இவ் வேடனது இளம் நாயகியின் தாபத்தைத் தீர்க்க நம்மால் முடியவில்லையே. முன்பின் தெரியாத தேசமாகவல்லவா ஆகிவிட்டது என்று அவர் உளம் நைந்தது. இதையே நினைத்துக் கண்மூடியிருந்தவர் அப்படியே உறங்கிவிட்டார்.

'மனிதன் என்ன? ஒன்றுமே இல்லை, துச்சம்! நெப்போலியன் எவ்வளவு மனோராச்சியம் செய்தான்? கடைசியில் செண்ட் எலினுவில் கைதியாகக் கிடந்தான். பெரிய கெய்சர் தனது முடியிழந்து சாதாரண மனிதனின் நிலையைப் பெற்ருன். எல்லாம் தேவரீர் திருவுள்ளம்!

—காந்திஜி.

செய்திகள்

குடமுழுக்குப் பெருவிழா, பழநி பெரியாவுடையார் கோயில்

எழில்சூழ் சண்முக நதிக்கரையில் உள்ள (பழநி தண்டாயுதபாணிசாமி கோயிலைச்சார்ந்த) பெரியாவுடையார் கோயிலில் 6—9—62 விடியற்காலை நெறிமுறையே நிகழ்ந்த சடங்கு முறைகளுக்குப் பிறகு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்துப் பேரின்பம் பெற்றனர்.

பழனி, தவத்திரு. ஈசான சிவாச்சாரியார் அவர்கள் முன்னிலையில் 3—9—62 அன்று கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் துவங்கின. 5,6—9—62 ஆகிய நாட்களில் தனி யாகசாலை நிறுவி, ஐந்து குண்டம் யாக பூசைகள் செய்யப்பட்டன. சிவாச்சாரியார் அவர்களும், மற்றும் பல குருக்களும் விழாவினை நடத்தத் துணைபுரிந்து விழாவில் ஈடுபட்டனர்.

இருப்புப்பாதை, மின்இயல் துறையினர்களின் நல்ல ஒத்துழைப்பினால் பத்து ஆண்டுகளாக இல்லாதிருந்த மின் சக்தியைப்பெற்று, மின் விளக்குகளால் கோயில் நன்கினிது அலங்கரிக்கப்பெற்றிருந்தமை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். பிரயாணிகளின் நலனுக்காக விழா நாட்களில் அடிவாரத்திற்கும், பெரியாவுடையார் கோயிலுக்கும் பேருந்து வண்டிகள் விடப்பட்டன.

தவத்திரு. ஈசான சிவாச்சாரியார், மகாவித்துவான் திரு. ஆறுமுக நாவலர் ஆகியவர்களின் சமயச் சொற்பொழிவுகளும், காஞ்சிபுரம் திரு. ஆ. விநாயக முதலியார் அவர்களின் தேவார இசை நிகழ்ச்சியும், திருமதி. கே. பி. சுந்தராம்பாள் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

6—9—62 குடமுழுக்குப் பெருவிழாவன்று 3000 பேருக்கு உணவு அளிக்கப்பட்டது. யாத்திரிகர்களின் குடிநீர் வசதிகளுக்காக நகராட்சி மன்றத்தார் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

குடமுழுக்கு விழா சீரும் சிறப்புமாக நடைபெறக் கோயில் அறங்காவலர்கள் பெரிதும் ஊக்கங்காட்டியமை பெரிதும் பாராட்டுதற்குரியது.

குடமுழுக்குப் பெருவிழா, ஸ்ரீ ரத்தினகிரிசுவாமி கோயில், திருமருகல்

திருமருகல் ஸ்ரீ ரத்தினகிரீசுவரசாமி கோயிலில் 6—9—62 குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. கோயிலில் அறங்காவலர் திரு. சி. டி. இராமநாதன் செட்டியார் அவர்களைச்சார்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார் பெருமக்கள் மூலம், பலவிடங்களிலிருந்து அழைத்துக்கொண்டு வரப்பட்டிருந்த சிவாச்சாரியர்களால் யாகசாலை ஓமமும் ஆகுதிகளும் சிறப்பாக நடத்தப்பெற்றன. குடமுழுக்குப் பெருவிழாவுக்கு முன்னர் மூன்று நாட்கள் சமயச் சொற்பொழிவுகளும் காலட்சேபங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெற எல்லா அறங்காவலர்களும் பெரும் ஊக்கமெடுத்துக் கொண்டார்கள்.

சரியாக 6—9—62 காலை 8 மணிக்கு எல்லா விமானங்களுக்கும் கோபுர கலசங்களுக்கும் குடமுழுக்கு நடத்தப்பெற்றது. கூட்டத்தினரை ஒழுங்குபடுத்தவும் அவ்வப்போது நடைபெறும் நிகழ்ச்சிகளை அவர்களுக்கு அறிவிக்கவும் ஒலிபெருக்கி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாயூரம் (இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை) ஆய்வாளர்களும், சுற்றுவட்ட அறங்காவலர்களும் பாராட்டற்குரிய முறையில் அவர்களின் ஒத்துழைப்பை நல்கினர். சுவாமி அம்பாள் மற்றும் சுற்றுக்கோயில்களின் விமான கலசங்களுக்கு ஒரே நேரத்தில் ஆரத்தி செய்வதைப் பார்க்க மக்கள் மிகவும் அமைதி

யாகக் காலை 7 மணி முதல் திரளாகக் கூடியிருந்தனர். மகா அபிஷேகம் செய்யப்பட்ட சந்நிதியிலும், தீபாராதனையின்போது ஓதுவார்களும் சிவாச்சாரியர்களும் பாராயணம் செய்ததை மக்கள் கேட்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சாரணர்கள் பாராட்டத்தக்க முறையில் மக்களை ஒழுங்குபடுத்தினர். பொது மக்களும் அமைதியாகவும் பக்தியாகவும் குழுமி இருந்து தீபாராதனையைக் கண்ணுற்றனர். மதிர் வேலூர் கோயில் குருக்கள், குடமுழுக்குப் பெருவிழாவின் சிறப்பினை விளக்கினர். விழாவின் இறுதியில் சென்னை இந்து சமய அறநிலைய (ஆட்சித்) துறை ஆணையர் அவர்கள், குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்த கோயில் அறங்காவலர்களையும், அஷ்டபந்தனம் மகாஓமம் இவைகளுக்குக் கைங்கரியம் செய்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்களையும் பெரிதும் பாராட்டினர்கள்.

கும்பகோணம் : யானையடி ஜெகந்நாத பிள்ளையார் கோயிலில் விநாயக சதுர்த்தி உற்சவம் 25—8—62 முதல் 4—9—62 வரை நடைபெற்றது.

தாயமங்கலம் : முத்துமாரியம்மன் கோயிலில் 45 வது நாள் மண்டலாபிஷேகம் 26—8—62 ல் நடைபெற்றது.

கண்ணனூர் : போஜீஸ்வரசுவாமி கோயிலில் மகா கும்பாபிஷேகம் 6—9—62 ல் நடைபெற்றது.

திருநாவலூர் : பக்தஜனேஸ்வரர் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதார விழா 31—8—62ல் நடைபெற்றது.

மன்னார்குடி : மகா மாரியம்மன் கோயிலில் 25 ஆவது ஆண்டு ஜேஷ்ட அபிஷேக விழா 17—8—62 முதல் 19—8—62 வரை நடைபெற்றது. சுமார் 1000 ஏழைகளுக்கு உணவு வழங்கப் பெற்றது.

சென்னை : ஒயிட்ஸ் ரோடு இரத்தின விநாயகர் துர்க்கை அம்மன் கோயிலில் 7—9—62 ல் விநாயகர் சதுர்த்தி நடைபெற்றது.

கடையம் : வில்வநாதசுவாமி கோயிலில் தெப்ப உர்சவம் 8—9—62 ல் நடைபெற்றது

நெரிஞ்சிப்பேட்டை : திருஆலங்காடு இம்முடி அகோர தர்ம சிவாச்சாரியார் ஆயிர வைசியர் மடத்தில் நவராத்திரி உற்சவம் 29—9—62 முதல் 8—10—62 வரை நடைபெறும்.

கரூர் . தான்தோன்றி கல்யாண வெங்கட்ரமணசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 28—9—62 முதல் 15—10—62 வரை நடைபெறும்.

தென்காசி : காசிவிசுவநாதசுவாமி கே. தெப்பத் திருநாள் 8—9—62 ல் நடைபெற்றது.

மொண்டிப்பாளையம் : வெங்கடேச பெருமாள் கோயிலில் புரட்டாசித்திருவிழா ஒவ்வொரு சனிக்கிழமையும் சிறப்பு ஆராதனைகளும் திருமஞ்சனமும் நடைபெறும்.

நீலப்பாடி : நாகநாதசுவாமி ஆலய ஜீர்ணோத்தாரணமான அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 16—9—62 ல் நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி : தாயுமானவர் கோயிலில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் நினைவுநாள் 15—9—62 ல் கொண்டாடப் பெற்றது. 16—9—62 ல்-திருமுறைத்திருவிழா 5 நாள்- திரு. ம. பொ. சிவஞானம், திரு. சொ. சிங்காரவேலனர், திரு தி. வே. கோபாலய்யர் ஆகியவர்கள், திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமையில் சொற்பொழிவு ஆற்றினர்கள்.

இலஞ்சி : திருவிலஞ்சிகுமரன் கூட்டுறவு விவசாயப் பண்ணையை அமைச்சர் திரு. நல்லசேனாபதிசக்கரை மன்றாடியார் அவர்கள் 10—9—62 ல் தொடக்கிவைத்தார்.

தூத்துக்குடி : மேலூர் பத்திரகாளி அம்மன் கோயிலில் நவராத்திரி உற்சவம் 29—9—62 முதல் 7—10—62 வரை நடைபெறும்.

மதுரை ; காமாட்சிஏகாம்பரஸ்வரர் கோயிலில் நவராத்திரித் திருவிழா 29-9-62 முதல் 9—10—62 வரை நடைபெறும்.

செம்பொன்னர் கோயில் : சுவர்ணபுரீசுவரசுவாமி கோயிலில் தலத் தேவார திருப் பதிகக் கல்வெட்டு, திருமுறைக்கோயில் திறப்பு விழா நாகப்பட்டினம் அற நிலையத் துறை உதவி ஆணையாளர் திரு. டி. மாதவம் பிள்ளை, பி. ஏ,. பி. எல். அவர்கள் தலைமையில் 17—9—62 ல் நடைபெற்றது.

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

1—9—62	தாயுமானவர் கோயில், திருச்சி	செவ்வந்திப் புரான வகுப்புத் தொடக்க விழா.
2—9—62	ஆயிரவைசிய ர் மடம், நெரிஞ் சிப்பேட்டை.	கல்யாணமண்டபம் அடிக்கல் நாட்டுவிழா.
5—9—62	கம்பகரேசுவரசுவாமி கோயில் திருபுவனம்	விடுதிக்கட்டு திறப்பு விழா.
,,	சௌந்தரேசுவரசுவாமிகோயில் திருப்பனையூர்	தேவாரக் கல்வெட்டுத் திறப்பு ஆலய அலுவலகத் திறப்புவிழா.
6—9—62	இரத்தினகிரீசுவரர் கோயில், திருமருகல்	கும்பாபிஷேக விழா.
,,	காசிவிசுவநாதசுவாமி கோயில், நீடாமங்கலம்	துவஜஸ்தம்ப மண்டபத் திறப்பு விழா.
8—9—62	தருமபுரம் ஆதீனம், தருமபுரம்	தருமபுர ஆதீனக்கல்லூரி ஆண்டு விழா.
9—9—62	பல்லவனேசுவரர் கோயில், காவிரிப்பூம்பட்டினம்.	கோயிலுக்கு முன்வளைவுத் திறப்பு விழா.
20—9—62	பூவணநாதசுவாமி கோயில் திருப்பூவணம்	கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப் பாக் கல்வெட்டுத்திறப்புவிழா.
,,	சிவகெங்கை இராஜா உயர்நிலைப் பள்ளி சிவகெங்கை, இராமநாத புரம் மாவட்டம்.	மதுரை ஆதீனகர்த்தர் தலைமையில் சமய வகுப்பு ஆரம்ப விழா.
,,	இராஜா துரைசிங்கம் நினைவுக் கல்லூரி, சிவகெங்கை.	சமயபோதனை வகுப்பு ஆரம்ப விழா.
24—9—62	ஸ்ரீமீனாட்சிசுந்தரேசுவரர் கோயில் மதுரை.	சிவஞானபோத வகுப்பு ஆரம்ப விழா.
,,	,,	மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் வகையறாக் கோயில்களின் சிப் பந்திகளின் ஆண்டுவிழாவில் தலைமை வகித்தல்.

சைவ சித்தாந்த சாத்திர வகுப்பு

சென்னை தங்கசாலைத் தெரு, தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர் நிலைப் பள்ளியில், செப்டம்பர் 10, 11, 12, 13, 14 தேதிகளில் **சிவஞானசித்தியார்** பரபக்கம் பற்றிய வகுப்பும், சென்னை இராயப்பேட்டைப் பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையின் திரு. வி. க. மணி மண்டபத்தில், செப்டம்பர் 25, 26, 27 தேதிகளில் **சங்கற்ப நிராகரணம்** பற்றிய வகுப்பும், குருகுலம் சிவத்திரு அழகரடிகள் (ஆசிரியர் இளவழகனார்) அவர்களால் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றன. திரளான அன்பர்கள் வந்திருந்து கேட்டுப் பயன் பெற்று, இன்புற்றனர்.

கொற்றவை வாழ்த்து

மதியின் வெண் தோடு சூடும் சென்னி,
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்து,
பவள வாய்ச்சி; தவள வாள் நகைச்சி;
நஞ்சு உண்டு கறுத்த கண்டி; வெஞ் சினத்து
அரவு நாண் பூட்டி, நெடு மலை வளைத்தோள்.
துளை எயிற்று உரகக் கச்சு உடை முலைச்சி;
வளை உடைக் கையில் சூலம் ஏந்தி;
கரியின் உரிவை போர்த்து, அணங்கு ஆகிய
அரியின் உரிவை மேகலை ஆட்டி;
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி,
வலம் படு கொற்றத்து வாய்வாள் கொற்றவை;
இரண்டு வேறு உருவின், திரண்ட தோள் அவுணன்
தலைமிசை நின்ற தையல்; பலர் தொழும்
அமரி, குமரி, கவுரி, சமரி,
சூலி, நீலி; மால்-அவற்கு இளங்கிளை;
ஐயை, செய்யவள். வெய்ய வாள் தடக்கைப்
பாய் கலைப் பாவை, பைந் தொடிப் பாவை;
ஆய் கலைப் பாவை, அருங்கலப் பாவை;
ஆனைத் தோல் போர்த்து, புலியின் உரி உடுத்து,
கானத்து எருமைக் கருந் தலைமேல் நின்றாயால்—
வானோர் வணங்க, மறைமேல் மறை ஆகி,
ஞானக் கொழுந்து ஆய், நடுக்கு இன்றியே நிற்பாய்!
வரி வளைக் கை வாள் ஏந்தி, மா மயிடன் செற்று,
கரிய திரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்—
அரி, அரன், பூமேலோன், அக—மலர்மேல் மன்னும்
விரி கதிர் அம்சோதி விளக்கு ஆகியே நிற்பாய்!
சங்கமும் சக்கரமும் தாமரைக் கை ஏந்தி,
செங் கண் அரிமான் சின விடைமேல் நின்றாயால்—
கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து,
மங்கை உரு ஆய், மறை ஏத்தவே நிற்பாய்!

—சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்.

உண்மை விளக்கம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

எனினும் 'மாயை' என்னும் சொல்லுக்கு இயல்பான பொருள் வேறு ஒன்று உண்டு. 'மா' என்பது ஒடுங்குதல், யா என்பது வருதல். ஆகவின் எல்லாப் பொருள்களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும், தன்னினின்று தோன்றுதற்கும் காரணமாய் நிற்பது எதுவோ, அது மாயை எனப் படும். மூலப்பிரகிருதியும் தன்கீழ் உள்ள தத்துவங்கள் எல்லாம், தன்பால் வந்து ஒடுங்குதற்கும் தோன்றுதற்கும் காரணமாய் நிற்றலின், மாயை என்னும் பெயர் பெறுதற்கு ஓராற்றான் இயைபுடையதாதல் தெளியப் படும்.

காலம் நியதி முதலிய தத்துவங்கள் எழும் ஆன்மாக்களுக்கு வித்தையை (அறிவை) எழுப்பும் தத்துவங்களாதலின், வித்தியாதத்துவங்கள் எனப் பெயர் பெற்றன.

"காலம்[1] நியதி[2] கருதும் கலை[3] வித்தை[4]
ஏலஅரா கம்[5]புருடனே[6] மாயை[7]..."

"எல்லை பலம்புதுமை[1]; எப்போதும் நிச்சயித்தல்[2];
அல்லல் தரும்கிரியை ஆன்மாவுக்(கு)[3].-ஒல்லை
அறி[4]வு,ஆசை[5] ஐம்புலனும் ஆரவரும் காலம்[6];
குறியா மயக்[7]கென்று கொள்"

சிவ தத்துவங்கள் 5

மாயை என்பதொன்றே தூலம் சூக்குமம் பரம் என மூவகைப்பட்டுத் தூலமாய் நின்ற அவத்தையிற் பிரகிருதிமாயை என்றும், சூக்குமமாய் நின்ற அவத்தையில் அசுத்தமாயை என்றும், பரமாய் (அதிசூக்குமமாய்) நின்ற அவத்தையிற் சுத்தமாயை என்றும் வழங்கப்படும். சுத்தமாயையினின்றே சிவதத்துவங்கள் ஐந்தும் தோன்றும். இவற்றைச் சுத்த தத்துவங்கள் என்றும் வழங்குவர்.

சுத்தவித்தை: சுத்தமாயையில் தூல காரியம் தோன்றுதற்கு ஏதுவாக முதல்வனின் ஞானசத்தி மிகுந்தும் கிரியாசத்தி குறைந்தும் நிகழ்வது. தூலஈசுரம், தூலஅதிகாரம், தூலப் பிரவிருத்தி, தூல சகளம் எனவும் இது பெயர்பெறும். உருத்திரன் மால் அயன் இந்திரன் முதலியோருக்கும், அவர்களின் தநுகரணாதிகளுக்கும் இஃது இடமாகும்.

ஈசுரம்: சுத்தமாயையிற் சூக்குமமாய்க் காரியம் தோன்றுதற்குக் கிரியை மிகுந்து ஞானம் குறைந்து நிகழ்வது. சூக்கும அதிகாரம், சூக்குமப் பிரவிருத்தி, சூக்கும சகளம் எனவும் இது வழங்கும். அநந்த தேவர் முதலிய வித்தியேசுரர் எண்மருக்கும் பிறருக்கும் இஃது இடமாகும்.

சாதாக்கியம்: சுத்தமாயையைக் காரியப் படுத்துதற் பொருட்டு முதல்வனின் ஞானசத்தியும் கிரியாசத்தியும் தம்முள் ஒத்து நிகழ்வது. இதற்குச் சதாசிவம், உத்தியுத்தம், போகம், சகள நிட்களம் என்றும் பெயர்கள் உண்டு. பிரணவர் முதலியோர்க்கும் அணு சதாசிவர் ஆகியோர்க்கும், அவர்தம் தநுகரணாதிகட்கும் இஃது இடமாக அமையும்.

சத்தி தத்துவம்: சுத்தமாயை காரியப் படுமாறு முதல்வனது கிரியாசத்தி வெளிப் பட்டு நிற்பது. இதற்குத் தூலலயம், தூல நிட்களம், விந்து என்னும் பெயர்களும் வழங்கும். முதல்வனின் கிரியாசத்திக்கும், நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகட்கும், மலபந்தம் நீங்கித் தூலலயவாசனை மாத்திரம் உடைய முத்தர்களுக்கும், அவர்களுக்குரிய புவன போகங்களுக்கும் இத்தத்துவம் இடமாக நிற்கும்.

சிவதத்துவம்: சுத்தமாயை காரியப்படுதற்கு ஏதுவாகும் வண்ணம் முதல்வன் தனது ஞானசத்தி மாத்திரையால் நோக்கி நிற்கப் பெறுவது. இதற்கு இலயம், நிட்களம், சத்தி

மான், நாதம் என்றும் பெயர்கள் கூறப்படும். சுக்குமலய வாசனைமட்டும் உடைய முத்தான் மாக்களுக்கும், அவர்களுக்குரிய புவன போகங்களுக்கும், முதல்வனின் ஞானசத்திக்கும் இஃது இடமாக விளங்கும்.

ஆன்மதத்துவம் (24) வித்தியாதத்துவம் (7) சிவதத்துவம் (5) என்னும் இம்மூன்றும் முறையே போக்கியகாண்டம், போசயித்துருகாண்டம், பிரேரககாண்டம் எனக் குறிக்கப்படும். இவற்றுள் சிவதத்துவங்கள் சுத்தமும், வித்தியா தத்துவங்கள் சுத்தா சுத்தமும், ஆன்ம தத்துவங்கள் அசுத்தமும் ஆகும்.

சுத்தவித்தை ஞானமிகும்; தொன்மையாம் ஈசுரம்தான்
அத்தன் தொழில்அதிகம் ஆக்கியிடும்;— ஒத்தல் இவை
சாதாக் கியம்; என்றும் சத்தி சிவம் கிரியை
ஆதார ஞானஉரு ஆம்.

—உண்மை விளக்கம்.

ஞானமே ஆனபோது சிவன்; தொழில் ஞானம்; ஒக்கின்
ஈனமில் சதாசிவன்;பேரீசன் ஆம் தொழிலது ஏறின்;
ஊனமேற் கிரியை வித்தை; உருத்திரன் இலய போகம்
ஆனபேர் அதிகா ரத்தோடு அதிகர ணத்தன் ஆமே.

சித்தியார், 85

இதுகாறும் கூறிவந்த முப்பத்தாறு தத்துவங்களும் அகக்கருவிகள் எனப்படும். இவற்றின் வேருகப் புறக்கருவிகள் அறுபது உண்டு. அவற்றையும் சேர்த்துத் தத்துவங்கள் தொண்ணூற்ருறு என்பர்.

"பொக்கமாய் நின்ற பொல்லாப் புழுமிடை முடைகொள் ஆக்கை
தொக்குநின் றைவர் தொண்ணூற் றறுவரும் துயக்கம் எய்த
மிக்குநின் றிவர்கள் செய்யும் வேதனைக் கலந்து போனேன்
செக்கரே திகழும் மேனித் திருக்கொண்டீச் சரத்து ளானே".

எனவரும் திருநாவுக்கரசர் தேவாரமும் தத்துவங்கள் தொண்ணூற்ருறு ஆதலை யுணர்த்தும். இனி, புறக்கருவிகள் அறுபதும் வருமாறு:—பிருதிவியின் கூறு: தோல் எலும்பு நரம்பு தசை மயிர். அப்புவின் கூறு: நீர் உதிரம் மச்சை மூளை சுக்கிலம். தேயுவின் கூறு. ஆகாரம் நித்திரை பயம் மைதுனம் சோம்பல். வாயுவின் கூறு: ஓடல் நடத்தல் நிற்றல் இருத்தல் கிடத்தல். ஆகாயத்தின் கூறு: குரோதம் கோபம் மோகம் மதம் மாச்சரியம். ஆகப் பூதகாரியம் 25. பிருதிவியின் வழித்தான இடைகலை பிங்கலை சுழுமுனை காந்தாரி அத்தி சிங்குவை அலம்புடை புருடன் குரு சங்கினி என நாடிகள் 10. வாயுவின் வழித்தான பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிரிகரன் தேவதத்தன் தனஞ்சயன் என வாயுக்கள் 10.ஆகாயத்தின் வழித்தான அர்த்த ஏடணை புத்திர ஏடணை உலகஏடணை என ஏடணைகள் 3. வாக்காதியின் வழித்தான வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என விடயங்கள் 5. பிரகிருதியின் வழித்தான சாத்துவிகம் இராசதம் தாமதம் எனக் குணங்கள் 3. விந்துவின் வழித்தான சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என வாக்குகள் 4. ஆகப் புறக்கருவிகள் அறுபது ஆதல் காணலாம்.

இத் தத்துவங்கள் பலவும் ஆன்மாவுக்குப் பயன்படும் முறைமையினை ஞானமிர்தம் என்னும் சைவசித்தாந்த ஞானநூல், இலக்கியச் சுவையமைய உருவகமுறையில் இனிதெடுத்து விளக்குகின்றது. ஆன்மா அரசன். உடல் அரண்மனை. புருவநடு திருவோலக்க மண்டபம். கண்டம் நாடக அரங்கு. இருதயம் மந்திராலோசனை மண்டபம். உந்தி அந்தப்புரம். மூலாதாரம் பள்ளியறைக்கட்டில். இவ்விடங்களில் ஆன்மா சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்தவத்தைகளை எய்தும். இவ்வவத்தைகளில் முறையே 35,25,3,2,1 ஆகிய கருவிகள் தொழிற்படும். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் அமைச்சர்கள். காலம் நியதி கலை வித்தை அராகம் என்பன கவசம். நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் ஐம்பெரும் பூதங்களும் தேர். மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் அறிகருவிகள் ஐந்தும் முறையே ஒற்றர், சூதமாகதர், தூதுவர், புரோகிதர், மெய்காப்பாளர்! வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் தொழிற் கருவிகள் ஐந்தும் முறையே குதிரை வீரர், யானை வீரர், தேர் வீரர், காலாட்கள், படைத்தலைவர்! அறிகருவிகளுக்கு நுகர் பொருளாகிய சுவை யொளி யூறோசை நாற்றம் என்பன அகப்புரி

வாரம். தொழிற் கருவிகளின் வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்பன புறப் பரிவாரம். பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் பத்து வகை வாயுக்களும் உறுதிச் சுற்றம் என ஞானமிர்தம் அழகுற விளக்கியிருத்தல் ஈண்டு அறிந்தின்புறற் பாலது.

ஆணவ மலம்

ஒன்றாய் நித்தியமாய் விபுவாய் அநாதியாய், ஆன்மாக்கள்தோறும் ஞான திரோதகமாய் எண்ணிறந்த சத்திகளை யுடையதாய், செம்பிற்குக் களிம்பு போலவும், நெல்லிற்கு உமி போலவும் ஆன்மாக்களைச் சகசமாய்ப் பற்றி நின்று எல்லா அநத்தங்கட்கும் மூல காரணமாய் நிற்பது. இதற்குப் பசுத்துவம் பசுநீகாரம் மிருத்தியு மூர்ச்சை மலம் அஞ்சனம் அவித்தை ஆவிருதி முதலிய காரணப் பெயர்களும்வழங்குவது உண்டு. இதனை "Pre-existent and pre-cosmic defect" எனவும் "Original sin" எனவும் "Problem of Evil" எனவும் பிறவாறும் குறிப்பிட்டு, ஓராற்றான் மேலைநாட்டாரும் உடன்படுவர். எனினும் ஆணவ மலம் என்பதொன் றுண்டென்பதனை, அகச் சமயம் ஆறும் சைவசித்தாந்த சமயமும் தவிர்ந்த ஏனைய பிற சமயங்கள் உணரமாட்டா.

ஆணவ மல சத்திக்கு ஆவாரக சத்தி என்றும் அதோநியா மிகாசத்தி என்றும் முறையே சிறப்பியல்பு பொதுவியல்புகள் உண்டு. ஆணவம் கேவல நிலையில் உயிர்களுக்கு அறியாமையை விளைவிக்கின்றது. அவற்றின் இச்சா ஞானக் கிரியைகள் தொழிற்படாமல் தடுத்து நிற்கின்றது. அதனல் உயிர்கள் தம்மையும் அறியாமல், தலைவனையும் அறியாமல், ஆணவ மலத்தையும் அறியாது கிடக்கின்றது. இங்ஙனம் மறைத்தலே ஆவாரக சத்தியாகும். சகலத்தில் ஆணவம் கன்மவாசனையுடன் கூடிய உயிருக்கு விபரீத வுணர்வையுண்டாக்கி அதனைப் பிறப்பு இறப்புகளில் உழலச் செய்கின்றது. இங்ஙனம் கீழ்நோக்கிச் செலுத்தும் தன்மையே அதோ நியாமிகா சத்தி எனப்படும். சுத்த நிலையில் உயிருக்கு ஆணவ பந்தம் விலகும். அப்போது ஆணவம் உயிரை நலியாது செயலற்றொழியும். ஆணவ மலத்தின் அதோ நியாமிகா சத்தி ஏழு வகைகளிற் காரியப்படும். மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என்பன அவை. மோகம் அஞர் மதம் நகை விகற்பம் கற்பம் குரோதம் கொலை என எட்டாகக் கூறுதலும் உண்டு.

"ஒரு பொருளும் காட்டா திருள் உருவம் காட்டும்;
இருபொருளும் காட்டா திது.

"பலரைப் புணர்ந்தும், இருட்பாவைக்குண்
டென்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு."

எனவரும் திருவருட் பயன் குறள்கள், ஆணவ மலத்தின் இயல்பினைச் சுவைபட விளக்குவனவாகும். சிவஞான சித்தியாரிற் போதரும் பின்வரும் அழகிய செய்யுளும் ஆணவ மலத்தின் இயல்பினை அறிவுறுத்துகின்றது.

"ஒன்றதாய் அநேக சத்தி
யுடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்றன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்றுபோத் திருத்து வத்தை
நிகழ்த்திச்செம் பினிற்களிம் பேய்ந்து
என்றும்அஞ் ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே"

கன்ம மலம்

ஆன்மாவினாற் செய்யப்படும் நல்வினை தீவினைகள் கன்மம் எனப்படும். கன்மம் எனினும் வினை எனினும் ஒக்கும். புவனம் கலை முதலிய ஆறு அத்துவாக்கள் இடமாக, மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றான் ஈட்டப்பட்டு, தூலகன்மமாய் ஆகாமியம் என்னும் பெயர் பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறும் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக் கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுள் போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாய் முறையே சனகம் தாரகம் போக்கியம் என்னும் மூவகைத் தாய், அபூர்வம் சஞ்சிதம் புண்ணிய பாவம் என்னும் பரியாயப் பெயர் பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தாற் பலதிறப்பட்டு, பிராரத்தம் எனப் பெயர் பெறும். ஆதி பௌதிகமாவது சடம் வாயிலாக வருவது. ஆத்தியான் மிகம் உயிர்களான் வருவது. ஆதிதைவிகம் தெய்வம் காரணமாக வருவது. இன்னும் இவ்வினைகள் உலகம் வைதிகம் அத்தியான்மிகம் அதி மார்க்கம் மாந்திரம் என்று ஐவகைப்பட்டு

ஒன்றற்கொன்று ஏற்றமுடைத்தாய், முறையே நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளின் அடங்கி, அசுத்தம் மிச்சிரம் சுத்தம் எனப் படும் போகங்களைப் பயப்பிக்கும்...

உயிரின் இயல்பு
(நான் ஏது ?)

பதி பசு பாசம் என்னும் மூன்றில் பதி சித்துப் பொருள். சித்தெனவே சத்தாதலும் பெறப்படும். பாசம் அசித்துப் பொருள். எனவே அசத்துப் பொருளும் ஆம். சித்தாகிய கடவுளின் முன் அசித்தாகிய பாசம் விளங் கித் தோன்ருதாகலின், அது கடவுளை அறி தல் இயலாது. கடவுளோ பாசத்தை அறிய வேண்டுவதில்லை. எனவே பாரிசேடப் பிர மாணத்தால், எஞ்சியுள்ள ஆன்மாவே பதி யையும் பாசத்தையும் அறிந்து பயன் கொள் ளும். அதுபற்றி ஆன்மாவிற்குச் சிதசித்து (சித்து + அசித்து) எனவும், சதசத்து (சத்து + அசத்து) எனவும் பெயர் உண்டு. ஆன்மாவே இங்ஙனம் பதியையும் பாசத்தையும் அறியும் தன்மையுடையது என்பதனை,

> "யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
> சத்தே அறியாது; அசத்து இலது அறியாது;
> இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா"

எனவரும் சிவஞான போத நூற்பாவாலும்,

> "சத்திது என்று அசத்துத் தான்அறி யாது; அசத்தைச்
> சத்துஅறிந் தகல வேண்டா; அசத்திது சத்திது என்றுஓர்
> சத்து இருள் ஒளி அலாக்கண் தன்மைய தாம்; அசத்தைச்
> சத்துடன் நின்று நீக்கும் தன்மையாற் சத சத்து ஆமே"

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளாலும் அறியலாம்.

ஆன்மாவானது தத்துவங்களின் ஒன் றன்றி, அவற்றின் வேருக நிற்பது. நுகர்வோ னும் நுகர்பொருளும் ஒரு பொருளேயாதல் இல்லை. கைப்பு கார்ப்பு புளிப்பு இனிப்பு உவர்ப்பு துவர்ப்பு என்னும் ஆறு சுவைகளும் தம்மைத் தாமே அறியமாட்டா. அதுபோல முப்பத்தாறு தத்துவங்களும் தம்மைத்தாம் அறிய வல்லன அல்ல. ஆறு சுவைகளையும் அருந்தி உணரவல்லவன் அவற்றின் வேருக உளனுதல் போல, முப்பத்தாறு தத்துவங் களையும் ஒன்றென்ருக உற்று அறியக்கூடிய பொருள் வேறென்று உள்ளது. அப்பொருள் அறிவு வடிவமாக நிற்கும் ஆன்மா அல்லது உயிரேயாம். சார்ந்ததன் வண்ணமாதலை யுடைய உயிர்க்குப் பெத்தநிலையிற் பாச மாகிய உலகப் பொருள்களோடு கூடித் துன் பத்தில் அழுந்துதல் பொதுவியல்பு. முத்தி நிலையில் பதியாகிய சிவத்தோடு கூடி இன்பத் தில் அழுந்துதல் சிறப்பியல்பு.

பதி இலக்கணம்
(நீ ஏது?)

முதல்வன் உயிர்களோடு கலந்து நிற்கும் நிலை ஒன்ருதல் வேருதல் உடனுதல் என மூவகைப்படும். "ஈருய் முதல் ஒன்ருய்... வேருய் உடன்ஆனன் இடம் வீழிம் மிழலையே" என ஞானசம்பந்தர் அருளிச் செய்தமை, இதனை யுணர்த்தும். சூரியன் வேறு கண் வேருய் நிற்பினும் கண்ணொளியிற் சூரிய வொளி கலந்து நின்று பொருள்களைக் காட் டும்; அது போலப் பொருட்டன்மையால் இறைவன் வேறு உயிர் வேறு ஆயினும், இறைவன் உயிரின் அறிவிற் கலந்து நின்று பொருள்களை யுணர்த்தி நிற்பான். இது வேருதல் என்னும் நிலை. ஐம்பொறிகள் உயி ரின் துணைகொண்டே பொருள்களை அறியும். ஆயினும் ஐம்பொறிகள் உயிரை அறிய மாட்டா. அறியா தொழியினும், ஐம் பொறிகள் எனத் தான்என வேறின்றி, உயி ரானது அவற்ருேடு ஒன்றிநின்று பொருள் களை யுணர்த்தி நிற்கும்: அதுபோல இறை வனும் உயிர்கள் எனத் தானென வேறின்றி ஒன்றிநின்று அறிந்தும் அறிவித்தும் நிற்பன். இதனை,

> "விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
> அளந்து அறிந் தறியா; ஆங்கவை போலத்
> தாம்தம் உணர்வின் தமிஅருள்
> காந்தம் கண்ட பசாசத் தவையே"

எனவரும் சிவஞானபோத நூற்பாவும் உணர்த்தும். இந்நிலை ஒன்ருதல் எனப்படும். அகரமானது மெய்யெழுத்துக்களிற் கலந்து நிற்குமாறு போல, ஏனைய உயிரெழுத்துக் களினும் சார்பெழுத்துக்களினும் கலந்து நிற் கும். அதுபோல இறைவன் இயங்கு திணைக் கண்ணும் நிலைத் திணைக்கண்ணும் பிறவற் றின் கண்ணும் அவற்றின் தன்மையாய்க் கலந்து நிற்கின்ருன். இஃது உடனுதல் என் னும் நிலை.

"ஈருகி அங்கே முதல்ஒன்ருய் ஈங்கிரண்டாய்
மாருத எண்வகையாய் மற்றிவற்றின்—வேருய்
உடனுய் இருக்கும் உருவுடைமை என்றும்
கடனுய் இருக்கின்ருன் காண்"

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுளாலும், இங்ஙனம் உயிர்களோடு ஒன்ருய் வேருய் உடனுய் நிற்கும் பதிப்பொருளின் இலக்கணத்தை யுணரலாம்.

நாதன் நடம்

இதுவரையிற் பதிபசு பாசகங்களைப் பற்றிய செய்திகளை அறிந்தோம். பாசத்தை நீங்கிப் பதியை அடைவது முத்தி. உயிர்கள் முத்தி அடைதற் பொருட்டு இறைவனது திருநடனம் நடைபெறுகின்றது. இறைவன் உயிர்களின் நலங்கருதி ஐந்தொழிற் கூத்து இயற்றும் திருக்கோலமே நடராஜ வடிவம் எனப்படும். அதன் அருமை பெருமைகள் அளப்பரியன; நடராஜ வடிவம் போன்றதொரு சிறந்த வடிவத்தினை இந்நாளில் எத்தகைய பெருங் கலைஞுயினும் படைத்தல் இயலுமோ? ("No artist of today however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena.")

நடராஜ வடிவம் பக்தர்களுக்கும் பாமரர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் மெய்ஞ்ஞானிகளுக்கு மெல்லாம் பெருவியப்பையும் பேரீடுபாட்டினையும் விளைத்து மகிழ்வித்து வருகின்றது! காலமும் இடமும் கடந்து, எல்லா நாடு மொழி சமயம் சார்ந்த மக்களாலும் போற்றத் தகுந்ததாய்த் திகழ்கின்றது! இத்தகைய அரும்பெருஞ் சிறப்புக்கள் மிக்க இத்திருவுருவத்தினை முதன்முதற் கண்டு படைத்துதவிய அருட்சான்ருேர்களாகிய கலைஞர்களின் நுண்மாண் நுழைபுலம் சாலவும் வியந்து பாராட்டுதற்கு உரியது. ("The conception of the image of Lord Nataraja is a synthesis of science, religion and art. How amazing the range of thought and sympathy of those rishi-artists who first conceived such a type as this, affording an image of reality, a key to the complex tissue of life, a theory of nature, not meely satisfactory to a single clique, or race, not acceptable to the thin krers of one century only, but universal in its appeal to the philosopher, the devotee, and the artist of all ages and all countries.")

இறைவன் ஐந்தொழிற் றிருக்கூத்து இயற்றுங்கால்,அவனது திருமேனி ஐந்தெழுத்தாலேயே அமைகின்றது. திருவடியில் ந; வயிற்றில் ம; தோளில் சி; முகத்தில் வ; திருமுடியில் ய. இவ்வமைப்பு தூலபஞ்சாக்கிரம் எனவும், "இலயாங்கம்" எனவும் கூறப்படும்.

இனி சிவாயநம என்பது சூக்குமபஞ்சாக்கரம் என வழங்கும். அஃது இறைவனது திருமேனியிற் பின்வருமாறு அமைகின்றது. துடியில் சி; வீசும் கரத்தில் வ; அபயகரத்தில் ய; ஏந்துகின்ற நெருப்பில் ந; அடிக்கீழ் முயலகனில் ம. இவ்வமைப்பு 'போகாங்கம்' எனப்படும். ஓங்காரம் திருவாசி(The arch) யாகவும், 51 எழுத்துக்கள் அத்திருவாசியின் சுடர்களாகவும் திகழ்கின்றன.

முதல்வனின் உடுக்கையால் ஆக்கல்; அமைத்த கையால் காத்தல்; ஏந்திய நெருப்பினுல் அழித்தல்; ஊன்றிய திருவடியால் மறைத்தல் (திரோதம்); எடுத்த திருவடியால் அருளல் (முத்தி) ஆகிய ஐந்தொழில்கள் நடைபெறுகின்றன.

இறைவன் தனது துடியைக் கொட்டுதலால் ஆன்மாக்களின் மாயையினை உதறுகின்ருன்; ஏந்திய நெருப்பினுல் கன்மமலத்தினைச் சுடுகின்ருன்; ஊன்றிய திருவடியால் ஆணவமலத்தினை அழுத்தித் தேய்விக்கிருன்; தூக்கிய திருவடியால் உயிர்களைப் பிறவிக்கடலினின் றெடுத்து இன்பக் கடலில் திளைக்கச் செய்கின்ருன். இத்தகைய திருநடனத்தைக் கண்டு விரும்பித் தொழுபவர்களுக்குப் பிறவித்துயர் நீங்கும்.

"கூடும்கதி; ஒருகால் கும்பிட்டாற் போதுமென
நாடும் அபிநயத்தை நண்ணிற்ருல்! — ஓடிய கட்
காதனர் காண, ஒரு கால்காட்டிக் கையமைத்து
நாதனுர் ஆடும் நடம்."

எனக் குமரகுருபரர் அருளிச் செய்த அழகிய பாடலும் பிறவும் ஈண்டுணர்ந்து மகிழற்பாலன.

அஞ்செழுத்து

இறைவனையும் அவன்றன் அளப்பருஞ் சிறப்புக்களையும் நம்மனோர் நினைவில் எழுப்பி, அவனை வழிபடப் பயன்படும் ஆற்றல் மிக்க அரும்பெருஞ் சொற்றொடர்கள் மந்திரங்கள் எனப் போற்றப்பெறும். அவற்றுளெல்லாம் தலைசிறந்து திகழ்வது அஞ்செழுத்தேயாகும். அதுபற்றி அதனை "மந்திர ராஜம்" என்பர். "**ஆதி மந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் நோக்கும் மாதிரத்தினும் மற்றைய மந்திரவிதி வருமே?**" எனப் பஞ்சாக்கரத்தின் பெருமையினைச் சேக்கிழார் பெருமான் பறைசாற்றுவர். பஞ்சாக்கரத்தில் சி சிவத்தையும், வ அருளையும், ய உயிரையும், ந மறைப்பாற்றலையும், ம மலங்களையும் குறிக்கின்றன. இதனை,

"சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ்சேர்ந்த பாச மலம்ஐங் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர
அவஞ்சேர்ந்த பாசம் அணுக கிலாவே"

"சிவனருள் ஆய சிவன்திரு நாமம்
சிவனருள் ஆன்மா திரோதம் மலமாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவன் ஆமே"

எனவரும் திருமந்திரப் பாடல்களாலும் உணரலாம். மலமாயா கன்மங்களைக் குறிக்கும் நம என்பதனை முன்வைத்து நமசிவய என்னும் தூலபஞ்சாக்கரத்தை ஓதினால் மும்மலங்கள் நீங்கா. சிவபிரானையும் திருவருளையும் நினைப்பிக்கும் சிவ என்பதனை முன்வைத்துச் சிவநமய என்னும் சூக்கும பஞ்சாக்கரத்தை ஓதினால் இன்பத்தே வாழலாம். அஞ்செழுத்தை விதிப்படி உச்சரித்தல் இன்றியமையாதது. இதனை அருள் சிவமும் வற்புறுத்தியிருத்தல் உளங்கொளத்தக்கது.

"ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க
உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலாம் ஓட"

"அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க மதியருக்கன்
அணையரவம் போல் தோன்றும் ஆன்மாவில் அரனே"

அத்துவித முத்தி

நாதன் நடத்தாலும் அஞ்செழுத்தாலும் **உயிர்களுக்கு நிகழ்வது வீடுபேறு ஆகலின்,** அதன் இயல்பு பற்றியும் ஈண்டு ஆசிரியர் விளக்கத் தலைப்படுகின்றார்.

"இம்மையே ஈரெட்டாண் டெய்திஎழி லாரும்
ஏந்திழையார் முத்திஎன்றும்; இருஞ்சுவர்க்க முத்தி
அம்மையே என்றும்;முத்தி ஐந்து கந்தம்
அறக்கெடுகை என்றும்:அட்ட குணம்முத்தி என்றும்;
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி என்றும்;
விவேகம் முத்தி என்றும்;தன் மெய்வடிவாம் சிவத்தைச்
செம்மையே பெறுகைமுத்தி என்றும்செப் புவர்கள்.
சிவனடியைச் சேரும்முத்தி செப்புவதிங் குயாமே!"

என்றாற்போல, முத்தியின் இயல்பைப் பல்வேறு வகையிற் பலர் கூறுவராகலின், அதன் உண்மைத்திறம் குறித்து விளக்குதலும் ஈண்டு ஆசிரியர்க்குக் கடமை ஆயிற்று.

முத்திநிலையிற் சிவமும் ஆன்மாவும் பழமும் சுவையும் போலவும், மலரும் மணமும் போலவும், வீணையும் இசையும் போலவும் "**ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும் இன்றாகாமல்**" அத்துவிதமாய் இயைந்து நிற்கும். வியாபகமும் வியாப்பியமுமான இருபொருள் ஒரு தன்மையான் ஒற்றுமைப்பட்டு நிற்கும் தாதான்மிய சம்பந்தமே அத்துவிதம் எனப்படும். சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடைய உயிர் பெத்தநிலையில் ஆணவத்தோடு இயைந்து அதன்வழி நின்றாற்போல, முத்திநிலையிற் சிவத்தோடு இயைந்து அதன்வழி நிற்கும். இதனை,

"ஆணவத்தோ டத்துவிதம் ஆனபடி மெய்ஞ் ஞானத்
தாணுவினோ டத்துவிதம் சாரும்நாள் எந் நாளோ?"

எனத் தாயுமானவர் அருளிச் செய்திருத்தல் கொண்டுணரலாம்.

முத்திநிலையில் ஆன்மாக்கள் சிவத்தோடு சமமாகும் என்பர் சிவசமவாதிகள். ஆன்மாக்கள் சிவசமமாகி விடுமாயின், அவைகளும் ஐந்தொழில் நடத்தும் உரிமை பெற்று உலகிற்குக் கடவுளர் பலர் என முடியும்! சூரியனின் ஒளியால் தான் ஒளிபெற்று அதற்குச் சமமாதல் இன்றி, அதன் ஒளியில் தன்னொளி அடங்கி இயைந்து நிற்கும் சந்திரனைப் போல, **ஆன்மாவும் சிவவியாபகத்திற்குள்**

அடங்கிச் சிவானுபவ நுகர்ச்சி ஒன்றிற்கு மட்டுமே உரிமையுடையதாய் சிவத்தோடு பிரிப்பின்றி இயைந்து நிற்கும்.

"வெய்யோன் ஒளியின் ஒடுங்கிவிளங் காது
வெய்யோனை ஆகாத மீன்போல..."

எனவரும் சிவஞானபோத வெண்பாவும் ஈண்டுணரற் பாலது. திருநாவுக்கரசர் "எண்குணத் துளோமே" என அருளிச் செய்ததன்றி "எண்குணங்கள் எய்தினேமே" எனக் கூறுமையும் குறிக்கொளத் தக்கது.

முத்தி எய்துங்கால் ஆன்மாவானது சிவத்தைச் சென்று சேரும் எனின், சிவத்தின் வியாபகத் தன்மைக்கு இழுக்கு நேரும். சிவமே ஆன்மாவை வந்து பொருந்தும் எனின், முன்பெல்லாம் சிவம் ஆன்மாவிற்கு வேறாகப் பிரிந்து (அந்நியமாக) இருந்தது என்னும் குறைநேரும். கண்ணின் பார்வையை மறைத்து நின்ற படலத்தை மருத்துவன் உரித்துத் தீர்த்தவழி, கண் சூரியனைச்சென்று சேருவதும் இல்லை; சூரியன் கண்ணை வந்து அடைவதும் இல்லை. நின்றுங்கு நின்றே கண்ணொளியானது, சூரியனின் ஒளியால் பொருள்களைக் கண்டுணர வல்லதாகின்றது. அது போல ஆணவமாகிய படலம், இறையருளின் துணையால் நீங்கப்பெற்ற முத்தி நிலையில், ஆன்மஞானம் இயல்பாக விளங்கப்பெற்று எதனையும் அறியவும் அனுபவிக்கவும் வல்லதாகும். இதனை,

"எங்குந்தான் என்னில்,நாம் எய்தல் வேண்டா.
எங்கும்இலன் என்னின் வேறு இறையும் அல்லன்.
அங்கஞ்சேர் உயிர்போல்வன் என்னின்,
அங்கத்தவயவங்கள் கண்போலக் காணு; ஆன்மா
இங்குநாம் இயம்புந்தத் துவங்களின்வைத்தறிவது;
இறைஞானம் தந்துதாள் ஈதல்,சுடர் இழந்த
துங்கவிழி சோதியும்உட் சோதியும்பெற் றுற்போல்
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே"

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளாலும் தெளியலாம். சிவம் ஆன்மாவை வந்து பொருந்துவதும் இல்லை. ஆன்மா சிவனைச் சென்று சேர்வதும் இல்லை. சிவவியாபகத்திற்குள் ஆன்மா அத்துவிதமாய்ச் செறிந்து நிற்கும். இதுபற்றியே "சென்றடையாத திருவுடையான்" என இறைவனைத் திருஞான சம்பந்தர் போற்றியருளினர்.

முத்திநிலையில் முப்பொருள்கள்

சைவசித்தாந்தம் சற்காரிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதனை முன்பே கண்டோம். "உள்ளது போகாது இல்லது வாராது உள்ளதே உள்ளது" என்னும் கொள்கையே சற்காரியவாதம் எனப்படும். இக் கொள்கையின்படி இருக்கின்ற பொருள்கள் அழியமாட்டா (Indestructiblity of matter) என்பது தெளிவு. அதனால் முத்தி நிலையிலும் முப்பொருள்களும் உண்டு என்பது தேற்றம்.

"கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியைஒத் திருப்பன் அந்த முத்தினியிற் கலந்தே"

என்றாற்போல, முத்திநிலையில் ஆன்மாவுக்கு இன்பம் தருபவன் ஆகிய இறைவன் உளன். "உயிர்தானும் சிவானுபவம் ஒன்றனுக்கும் உரித்தே" என்றபடி, சிவானுபவத்தை நுகரப் பெறுவதாகிய ஆன்மாவும் உளது. "ஆணவந்தான் அறுநி. அந்தம் அடையாது ஆகும்." ஆதலால் ஆணவமும் முத்திநிலையில் உண்டு. இரத குளிகையிட்ட செம்பினிடத்து அழிந்த களிம்பும், அவுடத்தால் தடுப்புண்ட விடமும், ஒளிமுன்னர் இருளும், தேற்றுங் கொட்டை சேர்ந்த கலங்கல் நீரும் போல, ஆணவமலம் தான்மாயாது தன் சத்தி மட்டும் மாய்ந்து தேய்ந்து முத்திநிலையிற் செயலற்றிருக்கும்.

"உரியமலம் அவுடதத்தால் தடுப்புண்ட விடமும்,
ஒள்ளொரியின் ஒளிமுன்னர் இருளும், தேற்றின்
வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும்போல் ஆகி
மாயாதே தன்சத்தி மாய்ந்து, காயம்
திரியும்அள வும்உளதாய்ப் பின்பு காயம்
சேராத வகைதானும் தேயும் அன்றே"

"இத்தை வினைவித்தல் மலம்"

உண்மை விளக்கத்தில் மிகவும் சிறந்த முதன்மையான செய்யுட்களுள் ஒன்றாகத் திகழ்வது, முத்திநிலையைப் பற்றிக் கூறும் பின்வரும் செய்யுளாகும் :

"முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅநு போகத்தைத் துய்த்தல் அணு—மெத்தவே
இன்பங் கொடுத்தல்இறை; இத்தைவினை வித்தல்மலம்;
அன்புடனே கண்டுகொள்அப் பா"

இச்செய்யுளில் அறிஞர்களிடையே பெரிதும் மலைவினை யுண்டாக்கும் பகுதியாக விளங்குவது, 'இத்தை விளைவித்தல் மலம்' என்னும் பகுதியாகும். முத்திநிலையிலும் ஆணவம் உண்டு எனக் கொள்ளினும் தீங்கே பயக்கும் இயல்பிற்றாகிய ஆணவமலம் நன்மை செய்வதாக முத்திநிலையில் எங்ஙனம் மாறும்? பொருளியல்பு அழிந்தால் பொருளும் அழியும் அன்றோ? என நம்மனோர்க்கு ஐயம் நிகழ்தல் இயல்பு. அது குறித்துப் பலவகையில் அமைவுரைகள் கூறலாம்.

1. "நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின்" என்றாற்போல, ஆணவ மலத்தால் அடைந்த அளப்பருந் துன்பங்களால், முத்திநிலையில் ஆன்மாவுக்குச் சிவானுபவ நுகர்ச்சியின் சிறப்பு மேம்பட்டுத் தோன்றும். "துன்புளது எனின் அன்றோ சுகம் உளது?" (கம்பர்), "துன்பம் உறாஅவர்க் கலால் இன்பம் இல்லை" (சிந்) என்பனவும் ஈண்டுணரற்பாலன. திருநாவுக்கரசர் தாம் மீண்டும் சிவநெறி திரும்புதற்குக் காரணமாய் இருந்தமை பற்றித் தமக்கு ஆற்றொணாத் துன்பம் விளைத்த கொடிய சூலை நோயையும் மகிழ்ந்து, 'யான் இதற்கு என்ன கைம்மாறு செய்வேன்' என நன்றி பாராட்டித் தொழுதனர். இதனை "இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்கு எதிர்செய் குறை என்கொல்? எனத் தொழுவார்" எனச் சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளியமையும் ஈண்டுச் சிந்திக்கத் தகும்.

"ஊர்ந்து வரும்இள ஏறுடை யான்றன் உளத் தருளால்
சார்ந்து சமண்வீட் டுறும்உனக் கேவரும் சைவநலம்
கூர்ந்து மிளிர்தரும் நாவர சேநல் குரவு முனம்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறும் செல்வமுமே"

எனவரும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடலும் இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும்.

2. நாம் பிறர்க்கு ஒல்லும் வகையானெல்லாம் உதவி செய்தல் வேண்டும். உதவி செய்தல் இயலாவிட்டாலும் தீமை செய்யாமலாவது இருத்தல் வேண்டும். நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாமலாவது இருப்பதும், ஒருவகையில் உதவியேயாகும் எனலாம்.

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்,
அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்,
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே"

எனப் புறநானூற்றுப் புலவர் ஒருவர் பாடியது போல, இதுகாறும் சிவஞான விளைவுக்குத் தடையாய்த் தீங்கே பயந்து வந்த கொடிய ஆணவமலம், தன் ஆற்றல் அழிந்து யாதொரு கேடும் சூழ்தலின்றிச் செயலற்றிருப்பது தானே, முத்திநிலையில் "காழில் கனி" போலும் சிவானுபவம் நுகர ஆன்மாவிற்குத் துணையாவதாயிற்று. இதனை "எதிர்மறையுதவி" (Negative help) எனக் கூறலாம்.

3. ஒரு பொருளுக்கு அதன் இயற்கைப் பண்பு என்றும் மாறுபடாது என்பது தெளிவு. அறியாமை விளைவித்தல் ஆணவ மலத்தின் இயல்பு. பெத்த நிலையில் ஆணவ மலம் ஆன்மா சிவத்தை அறியாமற் செய்யும். முத்தி நிலையில் அஃது ஆன்மா உலகத்தை அறியாமல் மறைக்கும். சார்ந்ததன் வண்ணமாம் தன்மையாற் பொருள்களை அது வதுவாய் நின்று அநுபவிக்கும் இயல்பிற்றாகிய ஆன்மா, சிவத்தையன்றி ஏனையவற்றையும் அறியத் தலைப்பட்டுழிச் சிவானுபவ விளைவிற்கு இடையூறாய்க் குறைவுபடும். எனவே, ஆணவமலம் முத்திநிலையில் உலகத்தை அறியாமற் செய்வது, ஆன்மா சிவத்தை முழுதாக நன்கினிது அநுபவித்தற்குத் துணைபுரிவ தாகின்றது.

4. இன்ப நுகர்ச்சிக்கு நுகர்வதும் நுகரப்படுவதும் ஆகிய இருபொருள்கள் இருத்தல் வேண்டும். அவ் விருபொருள்கள் தனித்தனியே பிரிந்து இருப்பின் இன்பம் நிகழாதாகலின், அவை இரண்டறப் பிரிப்பின்றி இயைதலும் வேண்டும். இங்ஙனம் பொருள்கள் ஒரு வகையில் இரண்டாயும், பிறிதொரு வகையில் ஒன்றாயும் இயைந்துநின்ற வழியே இன்பநுகர்ச்சி யுண்டாம். அதுபோது 'யான் இதனை நுகர்கின்றேன்' என்னும் தன்னுணர்வு (Self-consciousness, not Egotism) நிகழப்பெற்றால்தான், இன்ப நுகர்ச்சி மேலும் மிகுதிப்பட்டுச் சிறந்தோங்கும்.

"ஆனந்த வெள்ளத் தழுந்தும்ஓர் ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்த வெள்ளத் திடைத்திளைத் தால்ஒக்கும்; ஐய!மெய்யே
ஆனந்த வெள்ளத் தறைகழலோன்அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றுதுமுற் றுதிவ் வணி நலமே"

"செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம் பலவன் திருக் கழலே
கெழுநீர் மையிற்சென்று கிண்கிணி வாய்க் கொள்ளும் கள்ளகத்த
கழுநீர் மலர்இவள்; யான் அதன் கண்மருவிப்பிரியாக்
கொழுநீர் நறப்பரு கும்பெரு நீர்மை அளி குலமே"

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவையார் செய்யுட்களும் பிறவும், இவ்வுண்மையை வற்புறுத்தும். முனைப்பை விளைவிக்கும் இயல்பிற்றாகிய ஆணவமலம் தன் ஆற்றல் அழிந்து, முத்திநிலையிற் பேரின்பத்தை அநுபவிக்கும் ஆன்மாவிற்கு 'நான் அனுபவிக்கின்றேன்' என்னும் தன்னுணர்வை விளைவித்துச், சிவானுபவ நுகர்ச்சி மேலோங்கிச் சிறத்தற்குத் துணையாக நிற்றலின், "இத்தை விளைத்தல் மலம்" என ஆசிரியர் குறிப்பிட்டார்.

"கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுந்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்"

எனவரும் திருவாசகத் திருப்பாடல், முனைப்பை விளைவிக்கும் ஆணவமலம், முத்திநிலையில் ஆன்மாவுக்குத் தன்னுணர்வை மட்டுமே நிகழ்த்தி யமையும் வகையில், அதன் ஆற்றலைத் தேய்ந்தழியச் செய்தருளும் சிவபிரானின் பெருங்கருணைத் திறத்தினையே வியந்து புகழ்ந்ததாகவும் கொள்ளலாம்.

குருலிங்க சங்கம வழிபாடு

முத்திநிலை பற்றி விளக்கிய ஆசிரியர், இனி அம்முத்திக்குரிய சாதனங்களையும் விளக்கத் தலைப்படுகின்றார். குருவையும், சிவலிங்கத்தையும், சிவனடியார்களையும் கற்றுமனம்போலக் கசிந்துருகி வழிபட்டால், பிறவித்துயர் நீங்கும். இலிங்க வழிபாட்டால் ஆணவமலம் நீங்கும். குரு வழிபாட்டால் மாயாமலம் கெடும். சங்கம (சிவனடியார்) வழிபாட்டால் கன்மமலம் தீரும். இம்முத்திற வழிபாட்டையும் சீவன் முக்தர்களாக விளங்கிய நால்வர்பெருமக்களும் பிறசான்றோர்களு மெல்லாம் செய்து சிறப்புற்றனர். எனவே, நம்மனோர்க்கு இவற்றைக் கடைப்பிடித்தொழுகி உய்ய முயல்வது தலையாய கடமையாகும்.

"மன்அதிகை வாழும் மனவா சகங்கடந்தான்
மின்அனைய வாழ்விலுரு மெய்கண்டான்—பன்னுமறை
வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
உண்மைவிளக் கம்செய்தான் உற்று.

———

திருச்சி மலைக்கோட்டை: *தாயுமானவர் கோயிலில் செவ்வந்திப்புராண வகுப்பு 1—9—62 ல் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை எம். ஏ. பி. எல்., அவர்கள் தலைமையில் சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பெற்றது. புலவர் மணி திரு. ஆர். பஞ்சநதம் பிள்ளை அவர்களால் வகுப்பு தொடர்ந்து 6 தினங்கள் நடைபெற்றது.*

திருக்கானூர்: *கரும்பேசுவர சுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 2—9—62 ல் நடைபெற்றது.*

மதுரை: *மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் ஆவணி மூல உற்சவம் 26—8—62 முதல் 12—9—62 வரை நடைபெற்றது.*

திருச்சிராப்பள்ளி: *தாயுமானவர் கோயிலில் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற நிதியிலிருந்து இன்னிசைத் திருமுறை விழா 16—9—62 ல் நடைபெற்றது.*

நவராத்திரிபூசைச் சிறப்பு

✳

கன்னி மதியின் வரையுயிர்த்த
கன்னி மகிழப் பேரன்பால்

மன்னும் நவராத் திரிபூசை
மரபி னியற்றும் முறைமையோர்

நன்ன ருலகம் பணிகேட்ப
நவைதீர் செல்வத் திடைமூழ்கி

முன்னுங் கதியி னினிதுற்றி
முடிவி லின்பம் நுகர்வாரால்

—கச்சியப்ப முனிவர்.

அடியார் திருநாட்கள்

வைணவ ஆசார்யர்கள்

அக்டோபர்	புரட்டாசி	
4	18	ஆதிவண்சடகோபர்
8	22	வேதாந்த தேசிகர்
	ஐப்பசி	திருவேங்கடமுடையன்
22	6	எதிராஜ ஜீயர்
நவம்பர்		
2	17	மணவாள மாமுனிகள்
		சடகோப ஜீயர்
		அழகிய மணவாளர்கள்

நாயன்மார்கள்

அக்டோபர்	புரட்டாசி	
8	22	ஏனாதி நாதர்
10	24	நரசிங்க முனையரையர்
14	28	உருத்திர பசுபதியார்
	ஐப்பசி	
21	5	சத்தியார்
31	15	பூசலார்
நவம்பர்		
2	17	ஐயடிகள் காடவர்கோன்



திருமழிசை ஒத்தாண்டீசுவரர் கோயிலில் நிகழ்ந்த பன்னிரு திருமுறைப் பெருவிழாவில், திருமுறைக
எழுந்தருளச் செய்யப்பெற்ற விமானம், யானைமீது திருவுலா வருதல்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34.
Printed at Paari Achakam. 127, Broadway, Madras-1.